# The Sources of Hindu Tradition

## பாடநூல்

N.Subaraj

Published by

Centre for External Degrees and Professional Learning

South Eastern University of Sri Lanka

# The Sources of Hindu Tradition

## இந்து மரபின் மூலங்கள்

Faculty of Arts and Culture

South Eastern University of Sri Lanka

University Park, Oluvil, Sri Lanka.

Title: The Sources of Hindu Traditions

Author: Mr.N.Subaraj

Type of Book: Text Book

First Edition, 2023

ISBN:

© 2023, South Eastern University of Sri Lanka

All rights reserved. No part of this text book may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic or mechanical, photocopying and recording or otherwise without the prior permission of copyright owner and the author.

# முன்னுரை

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்பினைத் தொடர்கின்ற மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கில் ஒவ்வொரு பாட அலகுக்கும் பாடநூல்களை அறிமுகப்படுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருவது சிறப்பிற்குரியது. இத்திட்டத்தினை முன்னெடுத்துவரும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கைகள் நிலையத்தின் முயற்சி போற்றுதற்குரியது.

மாணவர்களின் பாடநூல் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் இந்து நாகரிகத்தினை பிரதான பாடமொன்றாக தெரிவு செய்துள்ள மாணவர்களுக்கு இந்து நாகரிக கற்கை தொடர்பான அடிப்படை அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடநூல் இந்து நாகரிகத்தின் முதலாம் வருட முதலாம் பருவத்தினை தழுவியதாகும்.

இந்நூல் மாணவர்களது சுயகற்றலை இலகுபடுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதிப் பகுதியிலும் மாதிரி வினாக்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அத்தியாயங்களில் உள்ள விடயங்கள் தொடர்பான மேலதிக அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான நூற்பட்டியலும் தரப்பட்டுள்ளது. இப்பாடநூலினை மாணவர்கள் தமது சுய கற்றலுக்காக பயன்படுத்துவதுடன் இந்நூலில் தரப்பட்டுள்ள மாதிரி வினாக்களைக் கொண்டு பயிற்சி பெற முடியும்.

இந்நூலாக்க முயற்சிக்கு துணைபுரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றிகள். இப்பாடநூல் தயாரித்தல் செயற்றிட்டத்தை திறம்பட செயற்படுத்திக் கொண்டிருக்கும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கைகள் நிலையத்தின் இயக்குனர் மற்றும் சிரேஸ்ட பதிவாளர், கலை கலாசார பீடத்தின் வெளிவாரிக் கற்கைக்கான பொறுப்பாளர்கள் மற்றும் பீடாதிபதி ஆகியோருக்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும். அத்தோடு நூலாக்கப் பணியில் எனக்கு உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

திரு.ந.சுபராஜ்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகப்பிரிவு, மொழித்துறை
கலை கலாசார பீடம்
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

# உள்ளடக்கங்கள்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | III |
| உள்ளடக்கங்கள் | | IV |
| பாடவிதானம் பற்றிய குறிப்புகள் | | V |
| அத்தியாயம் 01: | வேதம் | 1 |
| அத்தியாயம் 02: | உபநிடதம் | 19 |
| அத்தியாயம் 03: | ஆகமம் | 31 |
| அத்தியாயம் 04: | பகவத்கீதை | 41 |
| அத்தியாயம் 05: | பிரம்மசூத்திரம் | 57 |
| அத்தியாயம் 06: | தர்மசாத்திரங்கள் | 62 |
| அத்தியாயம் 07: | இராமாயணம் | 76 |
| அத்தியாயம் 08: | மகாபாரதம் | 89 |
| அத்தியாயம் 09: | புராணங்கள் | 102 |
| அத்தியாயம் 10: | நாலாயிரம் திவ்விய பிரபந்தங்கள் | 119 |

# பாடவிதானம் பற்றிய குறிப்புக்கள்

தலைப்பு : இந்துநாகரிகத்தின் மூலங்கள்

குறியீடு: HCM *10013*

வருடம்: முதலாம் வருடம்

பருவம்: முதலாம் பருவம்

தரப்புள்ளி: 03

**அறிமுகம்**

வெளிவாரிக் கற்கை மாணவர்களுக்கான பண்பாடு, விழுமியம், கலாசார சமூகநெறிசார் கற்கையில் இந்துநாகரிகம் ஓர் முக்கியத் துறையாகும். இவ்வாய்வுத்துறை குறித்த ஆரம்ப அறிவினை வழங்கத்தக்க முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இப்பாட அலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**குறிக்கோள்**

இந்துநாகரிக மூலங்கள் குறித்த தெளிவான புரிதலுக்கான அடிப்படை அறிவினை விருத்தி செய்வதே இப்பாட அலகின் குறிக்கோளாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இப்பாட அலகினை மாணவர்கள் திறம்பட கற்பதன் மூலம் இந்து நாகரிக மூலங்கள் தொடர்பான அடிப்படை சிந்தனைகள் குறித்தும் இந்து நாகரிகம் தோற்றம், வளர்ச்சி பற்றிய தெளிவான அறிமுகம் பற்றியும் அறிந்துகொள்வர்.

# அத்தியாயம் 01
# வேதம்

**உள்ளடக்கங்கள்**

1.1 வேதம் பற்றிய அறிமுகம்
1.2 வேதத்தின் பிரிவுகள்
1.3 நால்வகை வேதங்கள்
1.4 வேதகால தெய்வங்கள்
1.5 வேதகால சமூகநிலை

**அத்தியாய சுருக்கம்**

இந்துசமயத்தின் பொதுநூலாகவும் முதல் நூலாகவும் கொள்ளப்படுவது வேதமாகும். வேதம் என்ற சொல் வித் என்ற வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. வித் என்றால் சமஸ்கிருதத்தில் அறிதல் என்று பொருளாகும். வேதங்கள் என்பதற்கு "உயர்வான அறிவு" என்றும் பொருள்படும். இந்து சமயத்திற்கு அடிப்படையானவை நான்கு வேதங்கள் ஆகும். ரிக், யசுர், சாம, அதர்வண வேதம் ஆகியவை தான் அடிப்படையில் வேதங்களாகக் கருதப்பட்டன. அதர்வணத்தை தீமை என்று கருதினார்கள். பிற்காலத்தில் தான் அது நான்காவது வேதமாகச் சேர்க்கப்பட்டது. இவை தமிழில் நான்மறை என்றும் கூறப்படும். வேதங்கள் நான்கு என வகுத்தவர் வியாசர். வேதங்களை "சுருதி, மறை" எனவும் கூறுவர். வேதங்களுக்கு சம்ஹிதை, பிராமணம், ஆரணியம், உபநிடதங்கள் என்னும் நான்கு பாகங்கள் உண்டு. இவ்விலக்கியத்தில் இக்காலத்தில் நிலவிய சமய, அரசியல், பொருளாதார, சமூக, தத்தவ சிந்தனைகள் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## நோக்கங்கள் (Objectives)

1. வேத இலக்கியத்தின் பொருள்மரபை அறிந்து கொள்வர்.
2. வேதத்தின் அமைப்பு, வகை, தோற்றப் பின்னணி போன்றவற்றை புரிந்து கொள்வர்.
3. வேதகால சமூக அமைப்பு பற்றி அறிந்து கொள்வர்.
4. வேதம் கூறும் சமயநிலையை விளங்கிக் கொள்வர்.
5. வேதகாலத்திற்கும் தற்காலப் பண்பாட்டிற்குமிடையிலான தொடர்பினை விளங்கிக் கொள்வர்.

**கற்றல் பேறுகள்: (Learning Outcomes)**

1. வேத இலக்கியத்தின் பொருள்மரபை அறிந்து விளக்குவார்.
2. வேதகால சமூக அமைப்பு மற்றும் சமயநிலையை அறிந்து விளக்குவார்.
3. வேதகாலத்திற்கும் தற்காலப் பண்பாட்டிற்குமிடையிலான தொடர்பினை விளங்கி நல்லுணர்வுகளை வெளிப்படுத்துவார்.

## 1.1 வேதம் பற்றிய அறிமுகம்

வேதம் என்ற சொல் வித் என்ற வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. வித் என்றால் சமஸ்கிருதத்தில் அறிதல் என்று பொருளாகும். எனவே வேதம் என்பதற்கு ‘‘உயர்வான அறிவு’’ என்றும் பொருள் கொள்ளலாம். வேதம் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை. வேத்தினை வியாச முனிவர் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என நால்வகைப்படுத்தினார். வேதமானது சுருதி, அபௌர்ஷேயம், எழுதாமறை, எழுதாக்கிளவி, நான்மறை, நால்வேதம் போன்ற சிறப்புப்பெயர்களை உடையது. வேதகாலம் பொதுவாக கி.மு 1200-600 என வரையறுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வேதமும் சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் எனும் நான்கு பிரிவுகளையுடையன. பொதுவாக இந்துசமய மரபில் வேதங்கள் பிரமாணங்களாகக் கொள்ளப்படுகின்றன. வேதத்தின் ஞானகாண்டமாக விளங்குகின்ற உபநிடதங்கள் கடவுள், ஆன்மா பற்றி ஆராய்வன. பிற்கால தத்துவ முறைகளிற்கு பிரமாணமாக உபநிடதங்கள் திகழ்கின்றன. வேதங்களின் கர்மகாண்டமாக விளங்கும் சங்கிதைகள் மந்திரத் தொகுப்பாக உள்ளன. நான்மறை, எழுதாமறை, எழுதாக்கிளவி, சுருதி, அபௌருசேயம் போன்ற சிறப்புப்பெயர்கள் வேதங்களுக்குண்டு.

இவற்றுள் காலத்தால் முற்பட்டது ரிக் வேதமாகும். இது இந்தியாவில், கி.மு. 1500விற்கு முன் உருவாகியிருக்கக்கூடுமெனக் கருதப்படுகின்றது. வேதங்கள் வேத மொழி என்னும் மொழியில் ஆக்கப்பட்டுள்ளது. இம்மொழி சமஸ்கிருத மொழியின் முன்னோடி. வேதங்கள் இன்றளவும் வாய்வழியாகவே வழங்கிவந்துள்ளன. ஏறத்தாழ கி.மு 300 ஆம் ஆண்டளவில் எழுத்துவடிவம் பெற்றிருக்கக்கூடும். என்றாலும் வாய்வழியாகவே தலைமுறை தலைமுறையாக நிலைப்பெற்று வந்துள்ளது. விசய நகரப் பேரரசை ஆண்ட முதலாம் ஹரிஹரர் காலத்தில் வாழ்ந்த

சாயனாச்சாரியர் என்னும் 14 ஆவது நூற்றாண்டு காலத்து வேத அறிஞர், வேதத்தின் பொருளை விளக்கி எழுதிய, வேதார்த்த பிரகாசா (Vedartha Prakasha) என்னும் நூலே முதன்முதலாக எழுத்து வடிவில் கிடைக்கும் வேதங்களாகும்.

வேதத்தின் சமய முக்கியத்துவம் தவிர, உலகின் மிகத் தொன்மையான நூல்களிலொன்று என்ற வகையிலும் இதற்கு முக்கியத்துவம் உண்டு. வழிபாடு, சமயக் கிரியைகள் முதலியவற்றை சில இடங்களில் உரைநடையிலும், மற்ற இடங்களில் ரிக் என்று சொல்லப்படும் வேதகால செய்யுள்நடையிலும் எடுத்துக் கூறும் வேதங்கள், அக்கால சமூக வாழ்க்கையையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

## 1.2 வேதத்தின் பிரிவுகள்

வேதமானது சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் எனும் நான்கு பிரிவுகளையுடையன.

- சம்ஹிதை - தொகுப்பு ‘‘மந்திரங்கள்” (கடவுளால் தரப்பட்டவையாக கருதப்படும் பாடல்கள்)
- பிராமணம் - உரை வடிவில் அமைந்தது. சடங்கு வழிமுறைகளை எடுத்துரைக்கின்றது.
- ஆரண்யகம் - காட்டில் வாழும் முனிவர்களின் உரைகள்
- உபநிடதங்கள் - வேதங்களுக்கான தத்துவ உரைகள், விளக்கங்கள், எதிர்ப்புக்கள் ஆகிய பகுதிகளைக் கொண்டது. இவை வேதத்தின் முடிவில் வருவன. வேத + அந்தம் என்னும் பொருளில் வேதாந்தம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இவற்றில் முதல் இரண்டு பாகங்களும் கர்ம கண்டங்களாகவும் அதாவது செயலுக்கு (ஓதுவதுக்கும், சடங்குக்கும்) அல்லது அனுபவத்துக்குரியவையாகவும், கடைசி இரண்டும் மெய்ப்பொருள் உணர்வதற்குத் துணையான வேதாந்த பாகங்களாகவும் வகைப்படுத்தப்படுவதுண்டு. வேதாந்தம் என்றால் வேதத்தின் இறுதியில் வந்த கடைசி பாகம் என பொருள்படும். இதனை ஞான காண்டம் என்பர். நான்கு பாகங்களும் ஒரு நபராலோ அல்லது ஒரே குழுவாலோ அல்லது ஒரே காலத்திலோ எழுதப்படவில்லை. குறிப்பாக உபநிடதங்கள் முதல் இரண்டு பாகங்களுக்கும் பல எதிர்ப்புக்களையும், மறுப்புக்களையும் தெரிவிக்கின்றது.

## 1.3 நால்வகை வேதங்கள்

வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என நால்வகைப்படும்.

### 1.3.1 இருக்குவேதம்

இருக்கு வேதம் இந்து சமயத்தின் அடிப்படையாக் கொள்ளப்படும் நான்கு வேதங்களில் ஒன்று. இந் நான்கு வேதங்களுள் ஒன்று. இந் நான்கு வேதங்களில் மிகப் பழமையானதும் இதுவே. சமஸ்கிருத மொழியில் அமைந்த சுலோகங்களின் தொகுப்பான இது மிக பழைய நூலாகவும் திகழ்கிறது. இருக்கு வேதம் என்றாலே செய்யுள் என்று பொருள். இவ்வேதம் முழுவதும் செய்யுட்களாக உள்ளது. சிறப்பான ஏழு சந்தங்களால் அமையப்பட்டது. அவைகள் காயத்திரி, உஷ்ணிக், அனுஷ்டுப், பிரஹதி, விராட், த்ரிஷ்டுப், ஜகதி ஆகும். இதில் காயத்திரி சந்தஸ் அதிக புழக்கத்தில் உள்ளது.

இருக்கு வேதம் பல ருக்குகள் அடங்கியுள்ளதால் இதற்கு ருக்வேதத்தில் எட்டு அஷ்டகங்கள் அல்லது பத்து மண்டலங்கள், 64 அத்தியாயங்கள், 85 அனுவாகங்கள், 1028 சூத்திரங்கள், 2024 வர்க்கங்கள், 10647 ருக்குகளாக (மந்திரங்கள்) பிரிக்கப்பட்டுள்ளது. ருக் என்பதற்கு எதனால் தேவர்கள் துதிக்கப்படுகிறார்களோ அல்லது தெளிவாக அறியபடுகிறார்களோ அதற்கு ருக் என்று பெயர். இந்த 1028 சூக்தங்களில் பல வேள்விக் கிரியைகளில் பயன்படுத்துவதற்காக உருவானவை.

இதில் அடங்கியுள்ள பெரும்பான்மையான சூத்திரங்கள், தங்களுக்கு நல்ல உணவு, நல்ல பானம்(சோமபானம்) நல்ல மழை, தானிய விளைச்சல், தானம்(தட்சனை), அதிக பால் தரும் பசுக்கள், யாகங்கள் செய்திட செல்வம், வேகமாக செல்லும் குதிரைகள், உறுதியான தேர்கள், நல்ல உடல் நலம், மனஉறுதி, வேத மந்திரங்களை நினைவில்வைத்துக் கொண்டு வேத மந்திரங்களை பாட நல்ல வாக்கு மற்றும் தங்களின் வெற்றிக்காகவும், எதிரியின் வீழ்ச்சிக்காகவும் தேவர்களின் உதவி வேண்டி அவர்களை போற்றும் நோக்கிலே அமைந்தவை. மேலும் தங்கள் மன்னர்களின் சில வரலாற்றுக் குறிப்புகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

### 1.3.2 யசூர்வேதம்

முதலும் முதன்மையுமான இருக்கு வேத்தின் வேள்விக் கிரியைகளை மேலும் செழுமைப்படுத்தும் வகையில் அதன் தொடர்ச்சியாகவும் அதனிலும் காலத்தாற் பிற்பட்டதாகவும் யசுர்வேதம் தோன்றியது. நான்மறையில் இரண்டாவது வேதமாக எண்ணப்படுவது யசூர் வேதமாகும். இதனால் இவ் வேதத்தினை அர்வர்யுக்களின்

வேதம் என்றும் அழைப்பர். வேள்விக் கிரமங்களின் விதியாக்கமும் விரிவாக்கமுமாக யசுர்வேதம் அமைந்ததெனலாம். யாகக் கிரியைகளின் விளக்கமும், மந்திர உபாசனை முறைகளும் இவ் வேதத்தில் முழுமை பெறுகின்றன. இதனால் வேதப் பிரமாணங்களை நிகர்த்து நிற்கும் வேதமாகவும் இலங்குகின்றது.

யசுர் வேதம் ஆரம்பத்தில் பிரிவற்ற ஒரு வேதமாக விளங்கியது. பின்பு அதனிலிருந்து இரண்டு பிரிவுகள் உருவாகின. அவை சிருஷ்ண யசூர் வேதம், சுக்கில யசூர் வேதம் என்பனவாகும். கிருஷண யசூர் வேதமானது இது வேட்கும் வேளைகளில் அத்வாயுக்கள் ஓத வேண்டிய மந்திரங்களையும், வேள்வியோடு தொடர்புடைய பல கிரியைகளைச் செய்யும் முறைகளையும் விளக்கமாக் கூறும் பிரிவாகும்.

கிருஷ்ண யசூர் வேதத்தின் பிரமாண நூலாக விளக்குவது தைத்தீரிய பிராமணம் ஆகும். இது தைத்தீரிய மந்திரங்களின் யாக விளக்க நூலாகவும் அமைகின்றது. தைத்தீரிய சங்கிதை தித்திரி(சிட்டுக்குருவி) ரிஷி பரம்பரையில் உரைக்கப்பட்டது. இந்நூல் ஏழு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் வேத மந்திர மொழிகள் எண்ணிக்கை அடிப்படையில் உணர்த்தப்பட்டுள்ளது.

இவ்வேதத்திலுள்ள மந்திரங்கள் பல வாசிப்போருக்குத் தெளிவான கருத்துக்களை உணர்த்துவதாய் மந்திர சக்தி வாய்ந்தவனவாக மட்டும் கொள்ளப்படுவன. சில மந்திரங்கள் உச்சரிப்பவர்கள் தம் மனதிலிருக்கும் ஆசைகளை வெளிவிட்டுக் கூறுவனவாய் அமைந்துள்ளன. இவ்வகை மந்திரங்கள் இவ்வேதத்திலேயே சிறப்பாக காணப்படுகின்றனன. இதே போன்று படிப்பவர்களுக்கு உடனே புலனாகாது. தெளிவற்றவையால் ஆயினும் மறைபொருளாய்க் கருத்தை நுண்ணறிவுடையோர்க்கு மட்டும் உணர்த்தி நிற்கும் பகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

யசுர் வேதத்தில் உரைநடையிற் காணப்படும் மந்திரங்கள், அதர்வவேத மந்திரங்களினியல்பு வாய்ந்தவை. இதன் மூலம் நன்மையை மட்டுமன்றித் தேவை நேரிடின் தீமையையும் ஏனையோருக்கு விளைவிக்கப் பயன்படுத்தவும் வழிவகுப்பது யசுர் வேதம் என்பது தெளிவாகின்றது.

### 1.3.3 சாமவேதம்

சாமம் என்பது இசை எனப் பொருள்படும். இதனைத் தனித்த தொரு வேதமாகக் கொள்வது பொருத்தமோ என்பது கேள்விக்குரியது. ஏனெனில் இருக்கு வேத சங்கிதையில் உள்ள பாசுரங்களிற் பெரும்பாலானவை சாமவேதத்திலும் உள்ளன.

75 பாசுரங்கள் மட்டுமே சாமவேதத்திற்கு உரியவை. வேள்விக் கிரியைகளின் போது வெவ்வேறு இராகங்களிற் சாமவேதம் இசைக்கப்பட்டது. புராணங்களில் ஆயிரம் வகையான சாம சங்கீதைகள் கூறப்பட்டுள்ளன. எனினும் மூன்று சாம சங்கிதைகளே எமக்கு கிடைத்துள்ளன. இம் மூன்றிலும் கௌதும சாமசங்கிதை பிரசித்தி பெற்றது. இதில் இரு பிரிவுகள் காணப்படுகின்றன. அப்பிரிவுகள் ஆர்ச்சிகம், உத்தராச்சிகம் போன்றனவாகும்.

சாம வேதத்தைப் பாடுகின்றவர்கள் சில அர்த்தமற்ற சொற்களைச் சேர்த்துப் பாடுவார்கள் என்று கூறப்படுகின்றது. அதனுடன் நில்லாமல் சில உயிர் எழுத்துக்களை மிகவும் நீட்டி உச்சரிப்பார்கள். சூக்தத்தில் உள்ள சில சொற்களை மாறிமாறி உச்சரிப்பார்கள். இருக்கு வேதத்திலும், யசுர் வேதத்திலும் உதாத்த, அனுதாத்த, சுவரித என்ற மூன்று சுரங்களைக் கொண்டு சூக்தங்கள் பாடப்படுகின்றன. சாம வேதத்தில் ஏழு சுரங்கள் உண்டு. அவை 1,2,3,4,5,6,7 என்று எண்ணிக்கை மூலம் கைவிரல்களினால் எண்ணிப் பாடுவார்கள். எந்த விரலை எவ்விடத்தில் மடக்குகின்றார்கள் என்பதைப் பார்த்து எந்தச் சுவாமி இப்போது சூக்தத்தை உச்சரிக்கும்போது காண்பிக்கப்பட்டது என்பதை அறியலாம். அதனால் சாம வேதத்தை பாடுவதைச் சாம கானம் என்று குறிப்பிடுகிறார்கள். பாடும் முறையில் கிராம கானம், ஆரண்ய கானம் என்று இரண்டு வழிகள் உண்டு. இவை ஆர்ச்சிகத்தை சேர்ந்தவை. கிராம காணம் கிராமங்களிலும், ஆரண்யகாம் காட்டிலும்பாடப்பட வேண்டும்.

சாம வேதம் என்ற பெயர் பொதுவானது. இதனில் உள்ள சூத்திரங்களைப் பாடும் முறைகள் பலவிதமாக இருந்தன. சாமவேதத்தில் 1000 கிளைகள் உள்ளன என்பது பழைய நூல்களில் கூறப்பட்டுள்ளது. சாம வேதத்தைக் கற்றுப் பாடுபவர்கள் வெவ்வேறு கூட்டங்களைச் சேர்ந்தவர்கள். கௌதும், சைமினி என்ற பெயர்களால் இக் கூட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சில கூட்டங்களில் அந்தக் கிளையைப் பயின்றவர்கள் இல்லாததால் மூன்றைத் தவிர மற்ற 997 கிளைகளும் மறைந்து விட்டன. இப்போது கௌதும, தாண்டய, சைமினி என்ற மூன்று கிளைகளே உள்ளன.

சாமவேத முறைப்படி வேள்விகளைச் செய்யும் வழிகளைப் பிராமணங்கள் என்ற நூல்கள் வகுக்கின்றன. அவைகளுள் முக்கியமானவை தாண்ட்யமும் சைமினியமுமாகும். சாந்தோக்கிய உபநிடதம், கேன உபநிடதம் ஆகிய இரண்டும் இவ்வேதத்தைச் சார்ந்தவை. இவற்றில் சாந்தோக்கிய உபநிடதத்தைச் சாம வேதத்தை சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல் மற்ற வேதங்களை அறிந்தவர்களும்

வேதாந்தத்தைப் பயிலுபவர்களும் முக்கியமான ஆதாரமாக எடுத்துக் கொள்கின்றார்கள். வேதாந்த தத்துவங்கள் இவ்வுபநிடதத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன.

### 1.3.4 அதர்வவேதம்

முதற்குறித்த மூன்று வேதங்களிலும் வேறுபட்டதென்றாக அதர்வவேதம் கொள்ளப்படுகிறது. இது காலத்தாலும் பிற்பட்டதாகும். தொடக்கத்தில் இருந்து ஆரியரல்லாத சுதேசியப் பழங்குடி மக்களின் பிரார்த்தனை நூலாகவும் மாந்திரீகச் செயற்பாடுகளோடு தொடர்பு கொண்டதாகவும் இது விளங்குகின்றது. பிராமணீயக் கிரியைகள் விரிவடைந்த போது அதர்வவேதத் தொகுப்பும் இடம் பெறலாயிற்று. எனினும் நீண்ட காலமாகப் பிராமணீயம் அதர்வவேதத்தை அங்கீகரிக்காத நிலையே இருந்து வந்தது. ஆனால் மேற்குறித்த மூன்று வேதங்களிலும் பெரியதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாயும் பிராமணீய மதத்தோடு சுதேசிய மதமும் கலந்து உருவாக இந்து மதத்திற்கு கணிசமான பங்களிப்பினை வழங்கியதாயும் இவ்வேதம் கருதப்படுகின்றது.

அதர் வாங்கிரஸ், பிருகு வாங்கிரஸ், பிரமவேதம், பேஷஜானி முதலிய பெயர்களால் அழைக்கப்படும் அதர்வன வேதமானது வேதங்களில் நான்காவதாக இடம் பெறுகின்றது. அதர்வன வேதத்திற்கு ஒன்பது பாடாந்தரங்கள் உள்ளன என்பர். ஆயினும் இன்று இரு பாடாந்தரங்களே கிடைக்கப் பெற்றுள்ளன என்பதை அறிய முடிகின்றது. அதர்வன வேதத்திலே மிகப் பழைய கருத்துக்கள் பல உள்ளன என்றாலும் அவை ஏனைய வேதம் கூறும் கருத்துக்களிலும் வேறானவை.

உயர் நிலையில் நில்லாத கீழோருக்கு உரியது என்ற கருத்து ஒரு காலத்தில் இருந்ததால் மக்கள் அதர்வத்தை வேதமாகக் கருதவில்லை. அக்கினி வழிபாட்டில் மிகவும் புராதன காலப் புரோகிதரான அதர்வர்கள், அங்கிஸர்களுடன் தொடர்புடையது இவ் வேதம் என்பர். ஆயினும் அவர்கள் சோமனுடன் தொடபுபடுத்திக் கூறப்படும் இருக்கு வேதம் கூறும் புரோகிதர்களிலும் வேறுபட்டவர்கள்.

நாளடைவில் ஏனைய வேதங்களில் இருந்து பெற்ற சில மாற்றங்களால் நான்காம் வேதநிலையை அடைந்தது. அதர்வத்தில் ஏழில் ஒரு பகுதி இருக்கில் இருந்து எடுக்கப்பட்டவை எனடபது குறிப்பிடத்தக்கது. அதிலும் பாதிக்கு மேல் இருக்கின் பத்தாவது மண்டலத்திலிருந்து எடுக்கப்பட்டவை. ஏனையவை முதலாம், எட்டாம் மண்டலங்களிலிருந்து பெறப்பட்டவை.

அதர்வன வேதத்தில் ஒன்பது பிரிவுகள் உள. அப்பிரிவுகள் சாகை, சரணம் அல்லது பேதம் என வழங்கப்படுவன. இச் சாகைகளிலே சௌநகியமும் பைப்பலாதமும் பிரசித்தமானவை. அதர்வ சங்கிதையில் 731 சூக்தங்கள் உள்ளன. சுமார் 6000 பாடல்களுள. பதினைந்தாம், பதினாறாம் காண்டங்கள் உரைநடையிலமைந்தவை. இதனுள் இடம் பெறும் இருபது காண்டங்களிலே இருபதாவது காண்டம் பிற்காலத்தில் இருக்கு வேதத்தில் இருந்து பெறப்பட்டவையாகும்.

அதர்வ வேதத்தில் தெய்வம் பற்றிய பாடல்கள், தத்துவக் கருத்துக்கள் நிறைந்த பாடல்கள் இடம் பெற்ற போதும் அவை மாந்திரீகத்திற்கு அதி முக்கியத்துவம் அளிக்கின்றன. நோய் தீர்க்கும் மந்திரங்கள், ஆயுளை நீடிக்கும் மந்திரங்கள், நன்மை விளைவிக்கும் மந்திரங்கள், பிராயச்சித்த மந்திரங்கள், இருவரைச் சேர்த்தும் பிரித்தும் வைக்கும் மந்திரங்கள், ரஷை முதலிய பல்வேறு மந்திரங்கள் அதர்வத்திலே காணப்படுகின்றன. இன்னொருவருக்கு தீமை ஏற்படுத்தும் மந்திரங்களும் அதர்வன வேதத்தில் உள்ளன. இவற்றின் மூலம் பொது மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் பலவற்றை அதர்வத்திலே காணமுடிவதாகக் கொள்வர். சோதிடம், வைத்தியம் முதலியன அதர்வத்திலிருந்து பலவற்றைப் பெற்றுப் பிற்காலத்திலே வளர்ச்சி பெற்றனவாதல் வேண்டுமென்று கூறப்படுகின்றது.

## 1.4 வேதகாலத் தெய்வங்கள்

வேதகால மக்கள் ஒளி, மழை போன்ற இயற்கைச் சக்திகளை அச்சத்தில் ஆரம்பத்தில் நேரடியாக வணங்கினர். இதுவே காலக்கிரமத்தில் ஒவ்வொரு இயற்கைச் சக்திகளுக்கும் தெய்வங்களை கற்பிதம் செய்து வணங்கும் முறையாக வளர்ச்சியுற்றது. இவ்வாறாக வேதகால மக்கள் வணங்கிய 33 இயற்கைத் தெய்வங்களை யாஸ்கர் என்ற அறிஞர் இனங்கண்டு அவற்றை விண்ணுக்குரியவை, மண்ணுக்குரியவை, விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைப்பட்டவை (இடைவெளிக்குரியவை) என மூன்று வகைப்படுத்தலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

1. மண்ணுக்குரியவர் (பிருதிவிஸ்தானர்): பிருதிவி, பிருகஸ்பதி, அக்கினி, சோமன்,சரஸ்வதி முதலான நதிகள்
2. விண்ணுக்குரியவர்(தியஸ்தானர்) தியஸ், வருணன், மித்திரன், சூரியன், சவித்ரி, பூஷன், விஷ்ணு, ஆதித்தியர், உஷை, அஸ்வினி தேவர்.
3. இடைநிலைக்குரியவர் (மத்யமஸ்தானர்) இந்திரன், உருத்திரன், வாயு, பரிஜன்யன், ஆபா

இந்தப் பிரிப்பு முறை நிலையானதன்று எனவும், த்வஸ்த்ரியும் பிருதிவியும் மூன்றுதானங்களுக்கும் உரியவராகக் கொள்ளப்படுவரேனவும் அக்கினியும் உஷையும் மண்ணுக்கும் விண்ணுக்கும் உரியவராகக் கொள்ளப்படுவர் எனவும் வருணனும் யமனும் சவித்ரியும் இடை நிலைக்கும் விண்ணுக்குமுரியவராகக் கொள்ளப்படுவரெனவும் தெரிகின்றன. இவர்களோடு பிரஜாபதி, அதிதி, ரிதம் முதலான வேதகாலத் தெய்வங்களை முப்பத்து மூன்றாகக் கொள்வர். எனவே இருக்கு வேத காலத்திலே பல தெய்வங்களையும் தேவை நோக்கி வழிபடும் பல்லிறை வணக்கம் தொடக்கத்தில் நிலவியதாகத் தெரிகின்றது.

பல்லிறைக் கோட்பாட்டினையடுத்து ஒரு தெய்வத்தினை வேள்வி மூலம் பிரீதி செய்கையில் அத்தெய்வத்திற்கே முதன்மை வழங்கிய முறைமை ஒன்று இருக்கு வேதத்தில் நிலவியதாக மாக்ஸ்முல்லர் குறிப்பிட்டு இவ்வழிபாட்டு முறைமைக்கு ஹினோத்தீஸிம் எனப் பெயரும் வழங்கியுள்ளார். அடுத்து, ஒன்றே தெய்வம் என்னும் ஒரு தெய்வக் கோட்பாடும் வழக்கிலிருந்தமைக்கு

‘‘இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, யமன், மாதரிஸ்வன் என்று அறிஞர்கள் பல பெயர்கள் கொண்டு அழைப்பதெல்லாம் ஒரு பரம் பொருளையே’’

என்னும் இருக்குவேத மகாவாக்கியம் சான்றாகும். ஓரிறைக் கோட்பாட்டினை அடுத்து ‘‘பிரமம் ஒன்றே உள்பொருள், மற்றைய யாவும் தோற்றமே’’ எனக் கொள்ளும் ஒருமைக் கோட்பாடும் இருக்கு வேதத்திலேயே தோற்றம் பெற்று விட்டது என்பதற்கு எம்.ஹிரியன்னா ‘‘படைப்பு பாடல்’’ என்பதொன்றைச் என்று காட்டுவார்.

முன்னரே எடுத்துக் காட்டிய ஓரிறைக் கோட்பாடு, மேலே சுட்டிய ஒருமைக் கோட்பாடு என்பவற்றை விடக் கன்மத்தின் பயனாக ஏற்படும் மறுபிறப்புக் கோட்பாடு பற்றியோ, சுவர்க்கம், நரகம், மோட்சம் பற்றியோ முன் வேதகாலத்தில் தெளிவான விளக்கம் எதுவும் இல்லை என்பது ஆய்வறிஞர் கொண்ட முடிபாகும். ஆனால் மரணம் பற்றியும் மரணத்தின் பின்பு இறந்தோர் அடையும் நிலை பற்றியும் யமன் என்ற தெய்வம் வாயிலாக விளக்கம் தரப்படுகின்றது.

முன் வேதகால மக்கள், இயற்கையோடு இசைவு காண்பதன் மூலம் ஆபத்துக்களினின்று விடுபட்டு, வாழ்வினை இன்பமாகத் துய்ப்பதற்கே பெரிதும் விழைந்தனர். இவ் விழைவினை நிறைவேற்றத் தாம் உருவகித்த தெய்வங்களுக்குத் தாம் உண்ணும் உணவாகிய தானியம், பால், இறைச்சி போன்றவற்றை அக்கினியிலிட்டு அவிர்ப்பாகமாய் வழங்கி வேள்விகள் புரிந்தனர். இவற்றுக்கு மேலாக ஆழ்ந்த மெய்யியற் கோட்பாட்டில் அவர்களுக்கு அதிகம் ஈடுபாடு இருந்தது

என்று கூற இயலாது. வாழ்வின் நிலையாமை, துன்ப துயரங்கள் அவற்றை போக்கிட உலக பற்றினை துறத்தல் வேண்டும் ஆகிய சிந்தனையும், அதன் வளர்ச்சியும், அவற்றின் அடிப்படையில் உருவான அழமான மெய்யியல் அணுகுமுறையும் பின் வேதகாலத்திலே தோற்றமாகிய உபநிடதங்களிலும் அவற்றுக்குப் பின்னரோ, சம காலத்திலோ தோன்றிய சமணம், பௌத்தம் ஆகிய அவைதிக சமயங்களிலுமே மேலோங்குகின்றன.

பின் வேதகாலப்பகுதியில் இருக்கு வேத காலத் தெய்வங்கள் பலரும் இக்காலப்பகுதியிலே தமது மகிமையை இழக்கின்றனர். அவர்களுள் ஒரு சிலர் அதர்வ வேதத்தில் அங்கும் இங்கும் அருமையாகக் காட்சி தருவதையும் பார்த்தல் இயலாது. வருணனும் அதிதியும் தமது செல்வாக்கை இழந்து விடாது தொடர்ந்து போற்றப்படுகின்றனர். வருணனின் சர்வவல்லமை மேலோங்கியே காணப்படுகின்றன.வேள்விகள் முன்னரிலும் பெரும் செலவும், சிக்கலும் கொண்டவையாகவும் அதே சமயத்தில் முதன்மை வாய்ந்தனவாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

வேள்விகயோடு இக்கால சமயச் சடங்குகள் அமைந்து விடவில்லை. தீய அவிகளை வசப்படுத்தும் பில்லி, சூனியம் முதலாம் மாந்திரிக முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் விரிவும் சான்றோர் இவற்றை ஏற்காது புறகணிக்கின்றனர். எனினும் இவற்றில் செல்வாக்கு தவிர்க்க முடியாததொன்றாகவே தொடர்கின்றது

### 1.4.1 இந்திரன்

வேதகாலத்தில் அதிக பாசுரங்களால் போற்றப்பட்டவன். 250 பாசுரங்கள் இவருக்குரியவையாகின்றன. சோமக்குடியனான இந்திரன், நீண்ட கழுத்தையுடையவன். அகன்ற மார்பையும் பெற்றவன். அவனும் மஞ்சள். அவன் தாடியும் மஞ்சள். அவன் குடுமியும் மஞ்சள். அவன் இதயம் செம்பு போன்றது. அவன் குடிக்கும் சோமக்கள்ளும் மஞ்சள். அந்த மஞ்சள் நிறக்கள்ளை ஒரே மடக்கில் குடித்து விடுவான். அந்தக்கள்ளோ அவனைப் போதை ஏறிய வெறியனாக்கும். அந்த வெறியோடு குதிரையில் ஏறி, துரிதமாகச் சென்று, அளவற்ற யாகப்பொருளைக் கொண்டு வருவான் என இருக்கு வேதம் எடுத்துரைக்கின்றது.
வேதகாலத்தில் மக்கள் இந்திரனை நோக்கி, "சோமக்கள்ளைக் குடிப்பவனே! மரங்களில் தங்கி, இன்பமாகி, இரையை நாடிப் பறந்து செல்லும் பறவைகளைப்போல், ஆரியர்களாகிய நாங்கள் ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குப் போகும் போது எங்கள் தேர்களைக் காப்பாற்றுபவர். ஒவ்வொரு நாளும்

நல்லதையே செய்து கொண்டிருக்கிறான். அவனை எங்களுடைய (ஆரியர்களுடைய) பாதுகாப்பிற்காக, பால்காரன் பால் கறப்பதற்குக் கறவைப்பசுவை அழைப்பது போல் அழைக்கிறோம். எங்கள் யாகத்திற்கு (கால்நடைகளைக் கொன்று நடத்தும் விருந்துக்கு) வருக, கள்ளை அருந்துக, செல்வங்களைத் தரும் – பசுக்களைத் தரும் உனது செயல் திருப்தி அளிக்கிறது.'' என வேண்டி வழிபட்டனர்.

### 1.4.2 சூரியன்

வேதகால மக்கள் சூரியனை இருட்டின் பகைவன் என்றும் மனிதச் சோம்பலின் எதிரி என்றும் பாராட்டுகின்றனர். சூரியனை சோம்பலின் எதிரியாக காட்டுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. வேதகால மனிதன் சோம்பி இருக்க முடியாத நிலையில் இருந்தான். பகைவர்களிடமிருந்தோ கொடிய மிருகங்களிடமிருந்தோ சதாகாலமும் அவனை அபாயம் துரத்திக் கொண்டே இருந்தது. சூரியன் மறைந்து விட்டால் அவனது அச்ச உணவு அதிகபட்டது பாதுகாப்புணர்வு இன்னும் அதிகமாக தேவைப்பட்டது அதனால் அவன் இருட்டை வெறுத்தான் இருட்டை கிழித்தெரியும் பகலவனை வரவேற்றான். ஒளி தருகின்ற அனைத்து பொருட்களையுமே தனது நண்பனாக கருதி அன்பு செலுத்தினான் ஆராதனை செய்தான். இந்த உணர்வுகளை சூரியனை பற்றிய ரிக் வேதப் பாடல்கள் தெளிவாக காட்டுகிறது. சூரிய தேவன் எல்லாம் தெரிந்தவன் சகல சக்திகளும் வாய்க்கப் பெற்றவன் பலவாறு வடிவம் கொண்ட உயிர்கள் அனைத்திற்கும் போதனை செய்யும் ஆசியரை போன்றவன் மனிதனுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் அவன் உணவளிப்பவன்.

### 1.4.3 அக்கினி

அக்கினி இருக்கு வேதத்தில் 200 பாசுரங்களால் போற்றப்படுகின்றார். வேதகால யாகங்களில் முக்கிய இடம் பெறும் தெய்வமாக அக்கினி காணப்படுகின்றார். வேதகால மக்கள் அக்கினி தேவனிடம், ''அழியக்கூடிய பிறவிகொண்ட மனிதனான எங்களுக்கு நாள்தோறும் சக்தியை கொடு அதேநேரம் அழிவற்ற நிலையை நோக்கி செல்லும் பாதையை காட்டி அருள் கொடு இப்போதும் இனி எப்போதும் குறைவில்லாத வளம் கொழிக்கும் வாழ்க்கையையே அறிவாளி வேண்டுகிறான். அந்த குறைவற்ற நிறைவான வாழ்வை எப்போதும் கொடுத்துக் கொண்டே இரு. அக்னியே எங்களிடம் அன்பு கொண்டவனாகவே நீ எப்போதும் இருக்கிறாய். நீ தான் எங்களுக்கு உயிர் கொடுத்த தந்தை என்பதை நாங்கள் அறிகிறோம். நீ எவராலும் வெல்ல முடியாத வல்லமை படைத்தவன் எனவே உனது குழந்தைகளை பலசாலிகாளக பார்க்கவே நீ விரும்புவாய். உன்னை வணங்கும் எங்களுக்கு நீயே பாதுகாவலன் நாங்கள் கேட்பதெல்லாம் எங்களை நூறு நூறாகவும் ஆயிரம்

ஆயிரமாகவும் பெருக்கு. உன்னிடம் நாங்கள் சரணடைகிறோம்'' என வேண்டி வழிபாடு செய்தனர்.

### 1.4.4 விஷ்ணு

வேதகால விண்ணுக்குரிய தெய்வமாக விஷ்ணு வழிபடப்பட்டார். வேதகால மக்கள், ''விஷ்ணுவே நீ தான் அனைத்திலும் உயர்ந்தவன். மிகச் சிறந்த அரியாசனத்தில் அமர்ந்திருப்பவன் ஏனென்றால் இந்த மண்ணில் பிறந்த நாங்கள் பூமியின் அனைத்து பகுதிகளையும் அறிந்து கொள்ள முடியாத அற்பர்களாக இருக்கிறோம். ஆனால் நீ எல்லா இடங்களை அறிந்தவனாகவும் எங்கும் இருப்பவனாகவும் எல்லா இடங்களிலும் வியாபித்துள்ளாய். நீ விஸ்வரூபம் எடுத்து உயரும் போது எல்லாமே உனக்குள் அடங்கி விடுகிறது. உனது விஸ்வ ரூபத்திற்கு எல்லைகளை வகுக்கும் ஆற்றல் எங்களுக்கு இல்லை. அதனால் உனது பெருமையில் சந்தேகப்படும் தகுதி எந்த மனிதனுக்கும் இல்லவே இல்லை. நீ தான் உயர்ந்தவன் சிறந்தவன் என்று உன்னை துதிக்கும் எனக்கு ஆதாரமாக இருப்பதுவும் நீயே ஆகும். நீ பெரு வடிவம் எடுத்து நிற்க்கும் பொழுது உனது சிரசு சொர்க்கத்தையும் தாண்டி மேலே நிற்க்கிறது. உன் பலம் பொருந்திய பாதங்கள் பாதாளத்தையும் தாண்டி கண்ணுக்கு புலப்படாமல் இருக்கின்றன. திசைகள் அனைத்தும் உனது கைகளுக்குள் சிறைபட்டு கிடக்கிறது. மனித சமூகம் தனது சக்திகள் அனைத்தையும் திரட்டிக் கொண்டாலும் உனது பெருமையின் ஒரு துளியை மட்டுமே கணித்து பார்க்க முடியும்'' என வேண்டி வழிபாடு செய்தனர்.

## 1.5 வேதகாலச் சமூகநிலை

### 1.5.1 குடும்பம்

குடும்பம் என்ற அலகுகளின் தொகுதியே சமூகம். எனவே முன் வேதகாலச் சமூகத்தினைத் தெரிந்து கொள்ள முதலிலே அக்காலக் குடும்பநிலை பற்றி அறிந்து கொள்வது அவசியம். பெரும்பாலும் சமய அடிப்படையையும் அதனோடு தொடர்பான தெய்வங்கள், வேள்வி கிரியைகள் முதலியவற்றையும் கூறும் வேதயாயிலாக அது தோன்றி காலத்தின் குடும்ப, சமூக நிலைகளை விரிவாகக் காண்பது அரிதே. தந்தை, தாய், மக்கள், தாய் தந்தையரின் பெற்றோர், அவர் உடன் பிறந்தோர் என்ற பலரையும் உள்ளடக்கிய கூட்டுக் குடும்பமே முன் வேதகாலத்தில் நிலவியது. மணவினை காரணமாக ஒருவன் தன் மனையாளைப் புது இல்லம் அமைத்துச் செல்வது வழக்கிலிருந்தது. அவ்வாறு செல்கையில் அவன் ஒரு பாண்டத்தில் மனைவியால் வளர்த்த தீயினை எடுத்துச் செல்வதுண்டு. ஏனெனில் அக்கினி வளர்த்தலும் சிறிய அளவில் வேள்வியாற்றலும் அவனது இல்வாழ்வின் இன்றியமையாக் கடமையாகும்.

இல்லங்கள் மண், மரங்கொண்டு கட்டப்பட்டு நாணற் புல்லினால் மேயப்பட்டன. இல்லங்களில் அக்கினி காரியத்திற்காக ஒரு பகுதி கட்டாயமாக ஒதுக்கப்பட்டிருக்கும். இதனோடு அமர்ந்து உரையாடும் பகுதி, பெண்களுக்கான தனிப்பகுதி என்பனவும் அமைந்திருக்கும். இல்லத்தலைவன் கிருஹபதி என்று அழைக்கப்பட்டான். இவன் பொரும்பாலும் குடும்ப உறுப்பினரைப் பேணி வந்தான். சில சந்தர்ப்பங்களிலே கடுமையாவும் நடந்து கொண்டான். இக்கடுமைக்கு எடுத்துக்காட்டாக தம்முடைய மகன் சுனஷேபன் என்பவன் ஊதாரியாகவும் மிகுந்த செலவாளியாகவும் இருப்பதை பொறுக்காத தந்தை அவனுடைய கண்களைப் பிடுங்கிக் குருடாக்கியதைக் காட்டலாம்.

தந்தை வழிச் சமூக அமைப்பே ஆரியரிடையே நிலவியதால் ஆண்மகனுக்கே மேலாண்மை இருந்தது வந்தது. இதனால் ஆண்மகப்பேறே பெரிதும் விரும்பப்பட்டது. எனினும் பெண்குழந்தைகளை அன்புடனேயே நடத்தினர். அவர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இக் காலப் பெண்களிற் சிலர் புலமை நலம் பெற்றிருந்தமைக்கும் பாசுரங்கள் இயற்றியமைக்கும் எடுத்துக்காட்டுக்களாய் விஷாவாரா, கோஷா, ஆபாலா ஆகியோரை குறிப்பிடலாம். மக்கள் ஜனக்குழுக்களாக வாழ்ந்தனர். தாய் சகதர்மினி எனப்பட்டாள். இல்லத்தின் அனைத்துக் கடமைகளிலும் மிகுந்த உரிமையுள்ளவளாகத் திகழ்ந்துள்ளாள்.

‘‘வீட்டில் ஆட்சி புரிய வந்திருக்கும்
இல்லத்தலைவியே நீர் உமது
இல்லத்துள் செல்வீராக’’

வேள்விக் கிரியைகளில் பங்குபற்றும் பொழுது ‘‘பத்தினி’’ என்ற பெயர் சுட்டப்பட்டது. திருமணம் தேவகட்டளையாகக் கருதப்பட்டது. பொதுவாக ஒருவனுக்கு ஒருத்தி என்ற நடைமுறை காணப்பட்டது. எனினும் அரசர்களும் செல்வந்தர்களும் பலதாரமணம் புரிந்தமையையும் அறியமுடிகின்றது. பால்ய விவாக முறைமை பற்றி ரிக்வேதப்பாடல்களில் எத்தகைய குறிப்புகளும் இடம்பெறவில்லை.

ஸ்திரிதனம் எனப்பட்ட மணப்பெண் பணம் மணமகன் வீட்டாரால் மணமகளின் வீட்டாருக்குக் கொடுக்கப்பட்டது. மணமகள் அங்கவீனம் முதலிய குறைபாடுகளை உடையவளாக இருக்கும் பட்சத்தில் மணமகனுக்குப் பெண்வீட்டாரால் பொருள் கொடுக்கப்பட்டது. காந்தர்வ, இராட்சத விவாகமுறைகள் நிலவியுள்ளதனைக் காணமுடிகின்றது.

ரிக் வேத 10ஆம் மண்டல 81ஆம் சூக்தமாகிய சூர்யாசூக்தம் வைதீகத் திருமணமுறைமை பற்றிக் குறிப்பிடுகிறது. சூரியனுடைய புத்திரியாகிய சூர்யைக்கும் சோமனுக்கும் இடையே நடைபெற்ற திருமணம் பற்றி விபரிக்கின்ற இப்பாடற்பகுதியிலிருந்து முன்வேதகாலத்து திருமணச்சடங்கு பற்றி ஓரளவு அறிய முடிகின்றது. கைபிடித்தல், தீவலம் வருதல் ஆகிய இரண்டு நிகழ்வுகள் இத்திருமணச்சடங்கில் முதன்மை பெற்றிருந்தன. திருமணவிழா மணமகள் இல்லத்திலேயே நடைபெற்றது. குடும்பத்தில் சொத்துரிமை தந்தைவழி சார்ந்ததாக அமையப்பெற்றது.

### 1.5.2 அரசியல் நிலை

வேதகாலத்தில் மன்னன் இராஜன் எனப்பட்டான். அவனுடைய ஆள்நிலம் இராஷ்டிரம் எனப்பட்டது. "பகைவரை அழிப்போன்" என்று இராஜனின் மகிமை குறிப்பிடப்படுகின்றது. பரம்பரை அரசரோடு தெரிவு செய்யப்படும் அரசர்களைப் பற்றிய செய்திகளையும் ஆங்காங்கு காணலாம். இவ்வாறு தெரிவு செய்யப்படுவோர் பற்றி இருக்கு வேதம் தெளிவாக கூறாத போதிலும் பின்னைய அதர்வ வேதத்தில் சான்றுகள் உள்ளன. இருக்கு வேதம் இராஜன் மக்களின் இங்கீகாரம் பெறல் வேண்டும் என்று மட்டும் கூறுகின்றது. அரசு கட்டலில் மன்னன் அமர்கையிலே இயற்றப்படும் புனித சடங்கின் போது அவனது ஆட்சி உறுதி வாய்ந்ததாயும் தளர்ச்சியற்றதாயும் அமைவதை வற்புறுத்தும் கூற்றுக்கள் அமைந்த பாசுரங்கள் காணப்படுகின்றன. இராஜன் என்ற பதவிப் பெயரோடு சாம்ராட் என்ற பெயரும் கையாளப்படினும் அப்பெயர் பிற் காலத்திலேயே மாமன்னனைக் குறிக்கும் பதமாக அமைகின்றது.

இராஜனின் முதலும் முதன்மையுமான கடமை தனது ஆட்சிக் கீழ் அமைந்த சனக்குழுவினைப் பாதுகாப்பதும் பகை களைதலுமாகும். வெளிப்பகையோடு போரிடல் அவனுக்கு இன்றியமையாத கடனாகும். இதற்கான ஆற்றலும், அதிகாரமும் உடையவனே உண்மையான இராஜன். தன்னைச் சாமானிய மக்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்ட அவன் கவர்ச்சியும் ஒளியும் வாய்ந்த ஆடை அணிகலன்கள் பூண்டான். மாளிகையில் வசித்தான். அவனைச் சூழ்ந்து புரோகிதரும் பிரதானிகளும் இருந்தனர்.

மக்களின் நடத்தைகளை ஒற்றறிதற்கு அவன் உளவாளிகளை நியமித்தான். அவர்கள் மூலம் மக்களின் நடத்தைகளைப் பரிசோதித்து அவர்கள் செய்யும் குற்றங்களுக்குத் தண்டனை வழங்கினான். தனது மேன்மைக்கும் காப்புக்குமான சமயச் சடங்குகளை ஆற்றுவதற்கெனப் புரோகிதர் குழுவொன்றையும்

கொண்டிருந்தான். புரோகிதர் குழுத்தலைவர் இராஜனுடைய வணக்கத்துக்கும் மதிப்பிற்கும் உரியவர். அவர் தனது மந்திர வலிமை கொண்டு அரசனுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களிலிருந்து அவனைக் காப்பாற்றியதோடு வேண்டும் பொழுதெல்லாம் நல்லாசியம் வழங்கினார். தலைமைப் புரோகிதருக்கு அடுத்த பதவியில் படைத்தலைவன் விளங்கினான். இவன் சேனானி என அழைக்கப்பட்டான். தேர், குதிரை, காலாட்படைகள் சேனானியின் கீழ் இயங்கின யானைப்படை அக்காலத்தில் இல்லை. தாவிப்பாயும் குதிரைகள் பற்றிக் குறிப்புண்டு. உயர்குல வீரர்கள் போர்க்கவசமும் உலோகத்தாலான தலைக்கவசமும், கைக்காப்புறையும் தரித்து களம் சென்றனர். வில்லும், அம்பும், வாளும், ஈட்டியும் போர்க் கருவிகளாய்ப் பயன்பட்டன. பதாகைகள் போர்க்களத்திற்குக் கொண்டு செல்லப் பட்டதற்கும் படைச்செலவின் போது இசைக் கருவிகளிலிருந்து இசை எழுப்பப்பட்டமைக்கும் சான்றுகள் உள்ளன. சார்த்த, விராட, கண என்ற பெயர்கள் படைப்பிரிவுகளுக்கு வழங்கின. விராஜ்பதி என்பது கிராமத் தலைவனாகிய கிராமணியையும் குறிப்பதாகச் சில இடங்கள் வருகின்றன.

குடிமக்களின் அதிகாரபூர்வமான தலைவனே இராஜன் எனினும் அவன் மக்களின் அங்கீகாரமின்றித் தற்றுணிவுடன் எல்லாக் கருமங்களையும் மேற்கொள்ளவில்லை. ஆட்சிக் கடமைகளை நன்கு செயற்படுத்தவும் அவனுக்கு ஆலோசனைகள் வழங்கவும் சமிதி என்ற மக்கள் போன்ற ஓர் அமைப்பிருந்தது. இளவரசரும், பிரமுகர்களும் இச்சமிதியில் அங்கம் வகித்தனர். மூத்தோரை உறுப்பினராகக் கொண்டு சபா என்றதோர் அமைப்பும் அரசனுக்கு உதவியாக இருந்தது.

### 1.5.3 நால்வர்ணம்

வேத காலத்தில் குலங்கள் அல்லது குடும்பங்கள் வர்ணப்பாகுபாட்டிற்கு அமைவாக பாகுபடுத்தப்பட்டது. பிரம, சததிரிய, வைசிக, சூத்திர என்ற நான்கு வர்ணங்கள் காணப்பட்டன. இவ் நான்கு வருணங்களுக்கிடையேயும் உயர்வு, தாழ்வு பெருமளவு காணப்படவில்லை.

"நான் புலவன், என் தந்தை மருத்துவர், தாய் தானியம் அரைப்பவள், வெவ்வேறான கருத்துமுரண்பாடுகள் எம்மிடையே இல்லை. இலாபம் அடையவேண்டும் என்ற நோக்கோடு மந்தை பின் செல்பவர் போல நாம் செயற்பட்டோம்." என்பது இருக்கு வேதத்தில் வரும் ஒரு கூற்று. இதிலிருந்து செய்யுந் தொழிலால் வருணப் பாகுபாடு உருக்கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது. சூத்திரன் சமைத்த உணவைத் தொடுவதோ, சூத்திரனைத் தொடுவதோ தவிர்க்க வேண்டியது என்று அன்று கொள்ளப்படவில்லை என்றே கொள்ளலாம்.

பிரமண, சத்திரிய, வைசியர்கள் சமயம் சார்நததும் இலட்சிய நோக்கமைந்ததுமான வாழ்க்கை நிலை ஒன்றினை வகுத்து அதற்கேற்ப வாழமுற்பட்டதாகவும் தெரிகின்றது. இவை ஆச்சிரமங்கள் எனப்பட்டன. முதலாவது ஆச்சிரமம் பிரமசரியம் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் குருவினை நாடிச்சென்று வேதங்கள் முதலியவற்றைக் கற்பதாகிய நிலையே பிரமசரியமாகும்.

### 1.5.4 தொழிலும் கல்வியும்

மந்தை வளர்ப்பு, விவசாயம் என்பன முக்கிய தொழில்களாக அமைந்தன. வாணிபமும் ஓரளவு பிரபல்யம் பெற்றிருந்தது. வீடுகளும் கால்நடைகளும் பயிர்நிலங்களும் தனியுடைமைகளாக விளங்கின. ''கில்யம்'' எனப்படுகின்ற மேச்சல் நிலங்கள் பொது உடைமைகளாகக் கருதப்பட்டன.

ஒருவனின் செல்வநிலையைச் சுட்டவல்ல குறிகாட்டியாக அவன் கொண்டுள்ள பசுக்களின் எண்ணிக்கை விளங்கியது. ''அகன்யா'' (கொல்லப்படத்தகாதது) எனப் ''பசு'' சுட்டியழைக்கப்பட்டது. வணிகர்கள் ''பணி'' எனப்பட்டனர். கருமித்தனத்துக்குப் பெயர் போனவர்களாக இவர்கள் விவரிக்கப்பட்டனர்.

வேதகால கல்வியைப் பொறுத்தவரை குருகுலக்கல்வி முறை காணப்பட்டது. ரிக்வேதத்தில் இடம்பெறுகின்ற ''பிரமச்சரிய சூக்தம்'' –இதனை தவளைப்பாடல் எனச் சுட்டியது. தந்தையே முதல் ஆசான் என ரிக்வேதம் குறிப்பிடுகின்றது. மனனமும் உபதேசமும் பிரதான கல்வி முறைகளாக அமைந்தன. பதபாடம், கிரமபாடம், கணபாடம் போன்ற முறைகளில் வேதங்கள் மனனம் செய்யப்பட்டன.

''எல்லாத்திசைகளில் இருந்தும் நல்ல சிந்தனைகள் எம்மை வந்தடைவதாக''

என்ற ரிக்வேதப் பாடல்வரிகளில் அக்காலக் கல்வியாளனுடைய திறந்தமனதும் கல்வி ஆர்வமும் புலனாகின்றது.

### 1.5.5 பயன்படுத்திய உணவு வகைகளும் பொழுது போக்குகளும்

வறுத்த தானியம், அபூப என்னும் உறொட்டி, பாற்பயன்கள், காய்கறி வகைகள், பழங்கள் என்பன முதன்மை உணவுகளாய் இருந்தன. இறைச்சியும் தள்ளுபடியன்று ஆனால் சிறப்பான வைபவங்கள், பண்டிகைகளின் போது இறைச்சி பெரும்பாலும் இடம் பெற்றது. தொடக்கத்தில் பசுவதை (வேள்விக்காகவும் இறைச்சிக்காகவும்)

நிகழ்ந்தாலும் காலப்போக்கில் அது தவிர்க்கப்பட்டது. என்னவெனில் உப்பு உணவில் இடம்பெற்றமைக்குச் சான்றில்லை.

நீர், ஆறுகளிலும் நீரூற்றுக்களிலும் பெறப்பட்டது. இவற்றோடு கிணறுகளும் பயன்பட்டன. வெறியூட்டும் மதுபானம் அருந்தினர். மதுவகைகள் சோமம், சுரா என்னும் இரண்டும் பயன்படுத்தப்பட்டது. சோமம் வேள்விக் கிரியைகளின் போது அருந்தப்பட்டது. சுரா சாதாரணமாக வெறியூட்டும் பானமாகவும் பிற்காலத்தில் தவிர்க்க வேண்டிய ஒன்றாகவும் கொள்ளப்பட்டது.

வேதகாலத்தில் வேட்டையாடுதல், தேர் ஓட்டப்போட்டி, போர் நடனம் என்பன வீரரின் பொழுது போக்குகளாயிருந்தன. தேரோட்டப் போட்டி பிற்காலத்தில் வாஜபேயம் என்னும் யாகத்தில் இன்றியமையாத அம்சமாயிற்று. வேட்டையாடலும் அடுத்து முதன்மை பெற்றது. சிங்கம், யானை, காட்டுப்பன்றி, எருமை, மான் முதலியவற்றோடு பறவைகளும் வேட்டையாடப்பட்டன. கவறாடல் என்ற சூதாட்டம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகவே இருந்தது. சூதாடி ஒருவன் சூதாட்டத்தில் தன் பொருளெல்லாம் இழந்து கழிவிரக்கம் கொள்வதாக இருக்கு வேதத்தில் ஒரு பாடல் வருகின்றது. பெண்களுக்குரிய பொழுது போக்குகளாக இசையும் நடனமும் விளங்கின. இறந்தோர் உடல்களை எரிப்பதும் புதைப்பதுமாகிய இருமுறைகளும் வழக்கிலிருந்தன.

### பயிற்சி வினாக்கள்

*(01) வேத இலக்கியத்தை ஆதாரமாக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.*

*(அ) வேதம் என்பதன் பொருளும் மறுபெயர்களும்*

*(ஆ) வேதத்தின் பிரிவுகள்*

*(இ) நால்வகை வேதம்*

*(02) வேதகாலத்தில் வழிபடப்பட்ட தெய்வங்கள் தொடர்பாக கருத்துரைக்குக.*

*(03) வேதகால சமூகநிலைமைகளுக்கும் தற்கால சமூக அமைப்புக்குமிடையிலான தொடர்புகளை ஆராய்க.*

**உசாத்துணை நூல்கள்**

கமலநாதன், செ., *(2007)*, இந்துப் பண்பாட்டு வரலாறு *-1*, அக்‘ய வெளியீட்டகம் களுதாவளை *-1* மட்டக்களப்பு.

மாகாதேவன், ரி. எம் .பி., *(2001)*, இந்து சமயத் தத்துவம், குமரன் புத்தக இல்லம்.

Banerji, Sures Chandra (1989), A Companion to Sanskrit Literature, Motilal Banarsidass

Bhattacharya, Ashim (2006), Hindu Dharma: Introduction to Scriptures and Theology

Coward, Harold G.; Raja, K. Kunjunni; Potter, Karl, eds. (1990). Encyclopedia of Indian Philosophies, Volume 5: The Philosophy of the Grammarians. Princeton University Press.

Dalal, Roshen (2014), The Vedas: An Introduction to Hinduism's Sacred Texts, Penguin UK,

Doniger, Wendy (2010), The Hindus: An Alternative History, Oxford University Press

Flood, Gavin (1996), An Introduction to Hinduism, Cambridge University Press

Frazier, Jessica, ed. (2011), The Continuum Companion to Hindu Studies, London: Continuum

# அத்தியாயம் 02
# உபநிடதங்கள்

2.1 உபநிடதம் ஓர் அறிமுகம்

2.2 உபநிடதங்களின் தோற்றப் பின்னணி

2.3 உபநிடதங்களின் அமைப்பு

2.4 உபநிடதங்கள் கூறும் பிரம்மம்

2.5 உபநிடதங்கள் கூறும் ஆன்மா

2.6 உபநிடதங்களில் ஒழுக்கம்

**அத்தியாயச் சுருக்கம்**

வேதப்பொருள் மூன்று வகைப்படும். அவை கர்ம காண்டம், உபாசன காண்டம், ஞான காண்டம் என்பனவாகும்.இவற்றுள் உபநிடதங்கள் ஞானகாண்டப் பகுதியினைச் சேர்ந்தவை. 108 உபநிடதங்கள் இருப்பதாக நம்பப்படுகின்றது. அதில் பத்து உபநிடதங்களுக்கு சங்கரரால் உரை எழுதப்பட்டது. இவை "தசோபநிடதம்" எனப்படுகின்றன. ஈச, கேன, கட, ப்ரச்ன, முண்டக, சுவேதாஸ்வர, மாண்டுக்கிய, ஐதரேய, தைத்திரிய, பிருகதாரண்யக, சாந்தோக்கிய போன்ற உபநிடதங்கள் குறிப்பிடத்தக்கவை. அந்தவகையில் இவ்வத்தியாயமானது உபநிடதம் கூறும் பிரம்மம், ஆன்மா, உபநிடதங்களில் வெளிப்படுத்தப்படும் வாழ்வியற் சிந்தனைகள், இந்த உபநிடதங்களை நாம் கற்பதனால் ஏற்படுகின்ற பயன்பாடுகள் பற்றி தெளிவுபடுத்துகின்றது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

இந்து நாகரிகத்தினை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்கு உபநிடதங்கள் பற்றியும் அவற்றில் காணப்படுகின்ற தத்துவ சிந்தனைகளையும் விளக்குவதுடன் உபநிடத இலக்கியத்தில் வெளிப்படுத்தப்படுகின்ற வாழ்வியல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள் குறித்த தெளிவான அறிவினை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தினை மாணவர்கள் திறம்பட கற்பதன்மூலம் உபநிடதங்கள் பற்றி அறிந்து கொள்வதுடன் உபநிடதம் கூறும் பிரம்மம், ஆன்மா, இந்த உபநிடதங்களில்

வெளிப்படுத்தப்படும் வாழ்வியற் சிந்தனைகள் மற்றும் உபநிடதங்களை கற்பதனால் கிடைக்கும் பயன்கள் குறித்த தெளிவான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வர்.

## 2.1 உபநிடதம் - ஓர் அறிமுகம்

பண்டைய தத்துமாகவும், இந்து சமயத்தின் ஆதார நூலாகவும் விளங்கும் உபநிடதங்கள் வரலாற்றுக்காலங்களில் முதலில் எழுந்ததாகக் கருதப்படுகின்ற வேதங்களின் இறுதியில் தோன்றிய இலக்கியமாகும். அதாவது கி.மு. 10 - 06 நூற்றாண்டு வரையில் எழுச்சி பெற்றிருந்தன. இது தேங்களின் இறுதியில் தோன்றியது என்பதால் வேதாந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்துமதம் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏதுவான நூல்களுள் ஒன்றான உபநிடதம் என்பது ‘‘உபநிஷத்’’ என்ற வடமொழிச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இவ் உபநிஷத் என்ற சொல்லானது உப + நி + ஷத் என பிரிபட்டு உட்காருதல் என்ற பொருளைத் தருகின்றது. எனவே இதனடிப்படையிலே உபநிடதம் என்பது குருவுக்கு மிக அண்மையில் இருந்து குரு கூறுகின்ற மறைபொருட் தத்துவத்தை சிரத்தையுடன் கேட்டல் என்று பொருள்படுகின்றது.

இங்கு குருவுக்கு மிக இண்மையில் இருக்கும் சீடர்கள் கூட அறிவு மிக்கவர்களாகவும் பக்குவ நிலைப் பட்டவர்களாகவுமே காணப்பட்டனர். பக்குவப்பட்டவர்களை மட்டுமே ஆசிரியர்கள் தமது சீடர்களாகக் கொண்டனர். எனவே உபநடதம் என்பதற்குச் சொல்லப்படுகின்ற குருவுக்கு மிக அண்மையில் இருந்து அவர் கூறுகின்ற மறைபொருட் தத்துவங்களைச் சிரத்தையுடன் கேட்டல் என்பது பொருத்தமாகவுள்ளது.

இவ் உபநிடதங்களே பிற்பட்ட கால வைதீக, அவைதீக நெறிகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்திருந்தன. மேலும் இந்திய மெய்யியலின் உண்மையியல், அறிவாராட்சியியல், ஒழுக்கவியல் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் உபநிடதங்களே பங்களிப்புச் செய்துள்ளன. மேலும் மேற்கத்தேய மெய்யியல் வரலாற்றில் பிரதான பங்களிப்புச் செய்யும் தோற்றப்பாட்டில் வாதம், பொருளியல் போன்ற துறைகளிலும் உபநிடதங்களின் ஆழமான செல்வாக்கைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு உபநிடதங்கள் தோன்றிய இந்திய மெய்யியல் வரலாற்றிலே குறிப்பிடத்தக்களவு உள்ளது.

## 2.2 உபநிடதங்களின் தோற்றப் பின்னணி

வேதகால முதல் பகுதியினர் வளமான சிந்தனை மற்றும் அறிவுடையவர்களாகக் காணப்படவில்லை. இதனால் அவர்கள் இயற்கைன்கு பயந்து அவற்றிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக இயற்கைச் சக்திகளுக்கு கற்பனையில் உருவ, நாமங்களை கொடுத்து வழிபட்டனர். ஆனால் காலப்போக்கில் சிந்தனை விருத்தியடையத் தொடங்கியபோது பல சிந்தனையாளர்கள் தோன்றி தமது சிந்திக்கும் ஆற்றறலின் மூலம் இவ் வழிபாட்டு முறையைக் கண்டித்து அத்தெய்வங்கள் வணக்கதுக்குரிய தெய்வங்கள் அல்ல என்று கூறித் தமது ஆராய்வை இறைவனைப் பற்றியதாக ஏற்படுத்தத் தொடங்கினர். இந்நிலைமையே உபநிடதங்களின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன.

மேலும் வேதகால மக்கள் இயற்கை சக்திகளை கிரியைகளாலும், யாகங்களாலும் வழிபட்டனர். இவற்றைச் செய்வதன் மூலம் தாம் கேட்கின்ற வரங்களை இறைவன் தருவதாகவும் நம்பி அதனை மேற்கொண்டனர். எனினும் பிற்பட்ட காலத்தில் இவ்வழிபாட்டின் மீது பெறுப்பும் ஏற்பட்டது. காரணம் இங்கு யாகங்கள், கிரியைகளில் ஆடு, மாடு எனப் பொருந் தொகையான உயிரினங்கள் பலியிடப்பட்டன. இதனால் மக்கள் யாகங்கள் மீது தம் விரக்தியைக் காட்டலாயினர். இத்தகைய விரக்தியே உபநிடதங்களின் தோற்றத்துக்கும் அடிப்படையாக அமைந்திருந்தன.

## 2.3 உபநிடதங்களின் அமைப்பு

உபநிடதம் வேதத்தின் இறுதிப்பகுதியாகும். அதாவது வேதங்கள் சங்கிதை, பிராமணியம், ஆரண்யம், உபநிடதம் என நான்கு உட்பிரிவுகளைக் கொண்டது. இதிலே உபநிடதம் என்பது இறுதியானதாகவும் இறுதிக் காலப்பகுதிக்குரியதாகவும் விளங்குகின்றது. எனவே இது வேதத்தை விடுத்து அமைந்த வேறொன்று அல்ல என்பது புலப்படுகின்றது. இதன் காரணமாக உபநிடதத்தை வேதாந்தம் எனவும் வேதத்தின் தலையாக விளங்குவதனால் இது வேதசிரசு என்றும் சம்பாசணைகளின் போது குருவும் சீடனும் தமக்கு மட்டும் விளங்கக்கூடிய வகையிலே சம்பாசிப்பதனால் இது இரகசியம் எனவும் அழைக்கப்படுகின்றது.

உபநிடதங்கள் சம்பாசணைகள், போதனைகள், விசாரம், வினாவிடை, தர்க்கம், செய்முறை, விளக்கம், ஐயத்திற்கான விளக்கம் பெறல் எனப் பல்வேறுபட்ட வடிவங்களிலே அமையப் பெற்றவையாகும். இந்திய மரபின் மெய்யியல், கலைகள், ஒழுக்கவியல், மானிடவியல், விஞ்ஞானம், சமயம் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் ஆதாரமாக இருக்கும் உபநிடதங்கள் வேதகாலத்தின் இறுதியில் தோன்றியதாகும். வேதத்தின் உட்பிரிவுகளான சங்கிதை, பிராமணம், ஆரண்யம்,

உபநிடதம் என்றவகையிலே இது இறுதிப்பகுதியில் தோன்றியிருந்தது. ஆரம்பத்தில் தோன்றிய உபநிடதங்கள் வசனநடையிலும் பிற்பட்டவை செய்யுள் வடிவிலும் அமையப்பெற்றிருந்தன. மேலும் இவை சம்பாசணைகள், போதனைகள், விசாரம், வினாவிடை, தர்க்கம், செய்முறை, விளக்கம், சந்தேகமெழுப்பி விளக்கம் பெறல் எனப் பல்வேறுபட்ட வடிவங்களிலே அமையப் பெற்றவையாகும் என்று கூறுவர்.

குருவுக்கு மிக அண்மையிலிருந்து அவர் கூறுகின்ற மறை பொருட் தத்துவங்களைக் கேட்டு அஞ்ஞானமென்ற இருளை அகற்றி பிரம்மஞானத்தைப் பெற்றுக்கொள்வதன் பின்னணியில் தோன்றிய இவ் உபநிடதங்கள் 200க்கும் மேற்பட்டவையாகும் என்றும் அதிலே 108 உபநிடதங்கள் சிறப்பானவை என்று முத்திக்கோ உபநிடதத்தில் ராமபிரான் அஞ்சநேயருக்குக் கூறியதாகச் செல்லப்படுகின்றது. அவையாவன,

1. ஈச உபநிடதம்
2. கடோ உபநிடதம்
3. கேன உபநிடதம்
4. முண்டக உபநிடதம்
5. மாண்டுக்கிய உபநிடதம்
6. தைத்திரிய உபநிடதம்
7. சாந்தோக்கிய உபநிடதம்
8. பிருகதாரண்ய உபநிடதம்
9. ஐதரேய உபநிடதம்
10. பிரசன்ன உபநிடதம்
11. கௌசிக உபநிடதம்
12. சுவேதாஸ்வர உபநிடதம்

இப் பன்னிரு உபநிடதங்களின் சிறப்பை பாரதியார் கிழ்வறுமாறு போற்றுகிறார்.
‘‘பன்னிரு உபநிடதம் நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலிது போலே’’

### 2.4 உபநிடதங்கள் கூறும் பிரமம்

உபநிடதம ஞானியர் வேதங்களில் காணப்படுகின்ற ‘‘ஏகம் ஸத்’’என்ற கோட்பாட்டில் ஒரே ஒரு கடவுள் மட்டுமே உண்மை என்பர். இதனை பின்பற்றிய உபநிடதங்களும் ஒரே ஒரு பிரமம் தனித்துவமானது என்பதை வலியுறுத்துகின்றனர். ‘‘எமது கண்ணுக்கு எதிரே தெரியும் இவை அனைத்தும் பிரமம்’’ என்கின்ற கூற்று

உபநிடதங்களில் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றது. பிரமம் உருவம் இலாதது. அதனை நாம் உருவமற்ற ஒரு பொருளுடனே ஒப்பிட முடியும். அதுவே ஆன்மா என்றும் கூறுவர். இதனாலேயே ஆன்மாதான் பிரமம் என்கிற கருத்தும் உபநிடதங்களில் கூறப்படுகின்றது. ஆனாலும் பிரமம் என்பது ஆன்மாவை விட உயர்ந்ததும் பெரியதும் எல்லாவற்றிற்கும் மேலானதும் யாவும் கடந்ததும் பிரமம் என்றும் கூறப்படுகிறது.

உபநிடதங்கள் ஆராய்ச்சிபூர்வமான முடிவுகளை வெளிப்படுத்தும் ஒரு சிறப்பு மிக்க தத்துவமாக விளங்குகின்றது. உபநிடதம் இறைவன், உலகம், உயிர் ஆகிய மூன்று பொருட்கள் பற்றி ஆராய்ந்தாலும் இறைவனுக்கே முதலிடம் அளிக்கிறது. உலகம் சடப்பொருளினால் ஆனா சேர்க்கையினால் உருவாகியது ஆனால் அவை இயங்கிய வண்ணமே உள்ளன. இதே போன்று உடலை உயிர் இயக்குவது போன்று இந்த இரண்டையும் இயக்குவது இறைவன் தான்.

> ‘‘சடப்பொருட்கள் ஒவ்வொன்றும் தானாக இயங்கு
> வதில்லை ஆனால் இயக்கி ஒருவன் இயக்கின்
> இயங்கும் தன்மையுடையது அந்த இயக்கத்திற்கு
> உரிய இயக்கியே இறைவன்’’

எனக் கொள்ளப்படுகின்றது.

இந்த வகையில் பத்து உபநிடதங்களில் இறைபற்றி ஆராய்வைக் குறிப்பிடலாம். அவற்றில் குறிப்பாக முண்டக உபநிடதம், கடோபநிடதம், ஈசாவாசிய உபநிடதம், சாந்தோக்கிய உபநிடதம் ஆகியவற்றில் அறிய முடிகின்றது. இதில் முண்டக உபநிடதத்தின் ஒரு பகுதியினை ஆராய்வோமானால் இறைவன் பற்றி சந்தேகம் ஏற்பட்ட போது இறைவன் என்ற பொருள் உண்மையில் உள்ள பொருளா? அல்லது இல்லாத பொருளா? என்ற கேள்வி எழுவது இயற்கை அந்த நம்பிக்கையினத்துக்கு முற்றுப்புள்ளி, வைத்தாற் பொருட்டு மாண்டுக்கிய உபநிடதத்தில் விடை கூறப்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

பிரமே இந்த பிரபஞ்சம் அனைத்துக்கும் காரணம் என்று கூறப்படுகின்றுத. இப் பிரமம் எங்கும் நிறைந்துள்ளான் என சாந்தோக்கிய உபநிடதம் விளக்குகிறது. உப்பு கலந்த நீரில் உப்பு செறிந்தும், கலந்தும், மறைந்தும், நிறைந்தும் இருப்பது போல இறைவன் எங்கும் சர்பவியாபகமாக காணப்படுகின்றான். என விளக்குகின்றது. அதே போல் இதே உபநிடதத்தில் சுவேதகேது தந்தை உத்தலாகரிடம் அனைத்தும் ஒரு சத்தியிலிருந்து வந்ததாக சொல்கிறீர்களே இந்த உலகம் இந்த ஆயிரமாயிரம்

உருவங்களும் எவ்வாறு உண்டாயின? உலகம் முழுவதும் பரவியிருக்கும் மெய்பொருள் எங்கனம் மறைந்து போயிற்று? என்ற கேள்விகளை மகன் சுவேதகேது உத்தலாகரிடம் கேட்டான். தந்தை அதற்கு ஒரு ஆலம் பழத்தை எடுத்து இரட்டிக்கும் படி செய்தார் பின்பு அதனுள் என்ன இருக்கிறது என்று கேட்டார். உள்ளே விதையுள்ளது என்றான் சுவேதகேது பின்பு அதையும் உடைக்கும் படி கூறினார் உள்ள என்ன இருக்கின்றது என்று வினாவினர். தந்தையிடம் ஒன்றுமில்லை என்றான் மகன். மகனே உள்ளே உள்ளது கருப்பொருள் அது உனது கண்ணுக்கு தெரியது அதுவே ‘‘உண்மைப்பொருள்’’ என்று சிறிய நுண்ணிய ஆலம் விதையில் இருந்து ஆலம் விருட்சம் தோன்றுவது போல காட்சிக்கு அப்பாற்பட்ட புலனாகாத பிரமத்தில் இருந்து அனைத்து பொருள்களும் தோற்றம் பெறுகின்றன என அவ் உபநிடதத்தை விளக்குகின்றது.

இறைவனின் சர்வவியாபகத் தன்மையைக் கூறிய உபநிடதம் கண்ணாலோ அல்லது அறிவினாலோ இறைவனைக் காண முடியுமா என பின்வரும் சுலோகம் விளக்குகின்றது.

‘‘யாவையும் ஆள்வோன் யாக்கையிலாது
ஔவற இமைக்கும் ஒளியில் ஒருவன்
தீயவை தீண்டாத் திருவினன் - நோயிலான்
யாவையும் காண்போன் யாவையும் அறிவோன்
யாவர் யாண்டும் தாங்கியோன் தானா
இருப்போன் முதல்வன் ஊழி ஊழி
உலகமும் வியாபித்திருப்போன்’’

என உபநிடதங்கள் அவனுடைய வியாபகத் தன்மையைக் கூறுகின்றன. இப்பிரமமானது எதனாலும் இயக்கப்படுவதில்லை எதிலிருந்தும் உண்டாவதில்லை என்றும் எதற்குள்ளேயும் ஒடுங்குவதில்லை என்றும் எந்த பொருட்களிலிருந்தும் உண்டாகினாலும் அது தன் பூரணத்துவத்தை எப்போதும் இழப்பதில்லை இதற்கு விடையளிக்கும் போது ஒரு தீச்சுடரில் இருந்து எத்தனை சுடர்களை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அது தன் மூலச் சுடரை இழப்பதில்லை இதே போல பிரமத்திலிருந்து எத்தனை பொருட்கள் தோற்றம் பெற்றாலும் அது தன் பூரணத்துவத்தை இழப்பதில்லை இவ்வாறான பிரமத்திற்கு இரு வகையான நிலைகள் உண்டு.

1. சப்பிரபஞ்ச நிலை - சகுணப்பிரமம்
2. நிஷ்பிரபஞ்ச நிலை – நிர்க்குணப்பிரமம்

ஆகவே உபநிடதங்களிலே பிரமம் பற்றிக் கூறும் போது அதுவே மூலப் பொருள், நித்தியமானது பூரணமானது என்றும் சிந்தனைக்கு எட்டாததும் நிலைத்திருப்பதும் பிரமம் என இங்கு தெளிவாக விளக்கப்படுகின்றது.

### 2.5 உபநிடதங்கள் கூறும் ஆன்மா

உபநிடதங்களிலே ஆன்மா பற்றிய கோட்பாடு பிரம்மத்தோடு தொடர்புபட்டதாகவே அமைகிறது. ஈசாவாசிய உபநிடதத்தில் ஆன்மாவும் பிரம்மமும் ஒன்று என்பதை காண முடிகின்றது. இங்கு பரமாத்மா, ஜீவாத்மா எனக் கூறப்படும் சொற்பொருள் பிரமமும் ஆன்மாவும் ஒன்று என்பதை விளக்குகின்றது. ஆன்மா என்பது உடம்பை இயக்கும் ஒரு சக்தியாக காணப்படுகின்றது. உபநிடத ஞானியர்கள் உளவியல் நிலையில் சிந்தித்த போதே அதனைப் பற்றி அறிய தொடங்கினர். இதனால் உள்ளதின் நினைவும் இது இணைக்கப்படுகின்றது. இதனால் பிரமமும் ஆன்மாவும் ஒன்று என்கின்றோம். இவ்வாறு இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குவதற்கு ‘‘அகம் பிரமாஷ்மி’’, ‘‘தத்துவமஸி’’, ‘‘சோகமஷ்மி’’ என்னும் மகா வாக்கியங்கள் பிமத்திற்கும் ஆன்மாவிற்கும் இடையே உள்ள தொடர்பை குறிக்கின்றன.

ஆன்மா என்பது உடம்பு வசிக்கிறது. ஆனால் உடலின் ஒரு பகுதியாகவும் அமைந்திருக்கிறது எனலாம். எமது கண்ணுக்கு தெரியும் உடம்பு ஆன்மா அல்ல அதனுடைய செயல்கள் உடம்பின் தொழில்கள் ஆகும். இவற்றுக்கு யாவும் பின்னனியில் நிற்பது தான் ஆன்மா. இதனையே உபநிடதம் பேசுவது நாக்கல்ல நாக்கை கருவியாகக் கொண்டு பேசுவது ஆன்மா, இதேபோல காண்பது கண்ணல்ல கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆன்மா என ஆன்மா பற்றி இவ்வாறு தெளிவாக கூறப்படுகின்றது. ஆன்மாவானது உடம்பு எங்கும் வியாபித்து இருந்தாலும் இதற்கென குறிப்பிட்ட இடத்தை குறிப்பிட முடியாது இந்த ஆன்மா வடிவமில்லை, உருவமில்லை இது மனிதனுக்கு மட்டுமின்றி எல்லா பிராணிகளுக்கும் ஆன்மாக்கள் உண்டு. இவ் ஆன்மா பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை எனலாம். ஆன்மாவுடன் சேர்ந்தது தேகம் தான். ஆன்மா அழிவதில்லை ஆனால் உடல் அழிவிற்குரியது என கூறப்படுகின்றது.

இத்தகைய ஆன்மா பற்றிய உரையாடல்கள் இந்திரன் பிரஜாதிபதியின் உரையாடலில் அமைந்திருக்கின்றது ஆன்மா என்றால் என்ன? ஆத உடலில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது? உடலினுள் என்ன வடிவில் அமைந்துள்ளது? ஆன்மா எவ்வாறு அறிவை பெறுகின்றது? இவ்வாறு கேள்வி தொடங்கப்பட்டது. அவற்றிற்கு விடைகளும் அளிக்கப்பட்டது. இதேபோல இந்திரனும் விரோசனும்

பிரஜாபதியிடம் சென்று ஆன்மா என்றால் என்ன? என்ற வினாவினை பிரஜாபதியிடம் கேட்டனர். பிரஜாபதி தேகம் தான் ஆன்மா எனப் பதில் கூறினார். விரோசன் இவ் விடையோடு திருப்தி அடைந்து விட்டான். ஆனால் இந்திரனுக்கு இவ்விடை திருப்தி அளிக்கவில்லை. இந்திரனின் பக்குவ நிலையை அறிந்த பிரஜாபதி ''வண்டியில் கட்டப்பட்ட குதிரை போல ஆன்மா சரீரத்தில் கட்டப்பட்டுள்ளது'' என்கிறார். சரீரம் அழிவுக்குரியது ஆன்மா அழிவில்லாதது ஆன்மா வேறு சரீரம் வேறு என்பதை காட்டும் இவ் உதாரணத்தை சாந்தோக்கிய உபநிடதத்தில் காணலாம்.

உபநிடதம் பிரமம் ஆன்மா பற்றி கூறவந்து இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டு தன்மையையும் விளக்குகின்றுது. அதாவது மரம் ஒன்றில் இரண்டு பறவைகள் காணப்படுகின்றன அவற்றில் ஒரு பறவை தித்திப்பான பழங்களை உண்டு இன்பத்தினை அனுபவிக்கின்றது. மற்ற பறவை பேசாமல் இருக்கிறது இந்த இரண்டையும் குறிப்பிட்டு தித்திப்பான பழங்களை உண்கின்ற பறவை பரமாத்மா என்றும் இது முற்றுணர்வு உடையது என்றும் மற்றையது ஜீவாத்மா என்றும் இது குறை அறிவுடையது என்றும் பிரம்மா, ஆன்மா சேறுபாட்டை கூறுகின்றது.

உடல் ஒரு தேர். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும் தேரில் கட்டிய குதிரைகள். இங்கு மனமே கடிவாளம் கடிவாளத்தை கொண்டு தேரை நடத்தும் சாரதி புத்தி தேரில் அமர்ந்திருப்பவன் ஆன்மா. ஆன்மா அமர்ந்திருக்கும் உண்மையை உணர்ந்தவன் ஞானியாவான் என பிரம்மம் ஆன்மா பற்றி கடோகநிடதத்தில் விளக்கப்பட்டுள்ளது.

தைத்தீரிய உபநிடதத்தில் ஆன்மாவைச் சூழ பஞ்ச கோசங்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. அவையாவன,

1. அன்னமய கோசம்
2. பிராணமய கோசம்
3. மனோமய கோசம்
4. விஞ்ஞானமய கோசம்
5. ஆனந்தமய கோசம்

இவை பற்றி நோக்கும் போது அன்னமய கோசமானது உடலையும் பிராணாமய கோசமானது சுவாசத்தையும் மனோமய கோசமானது மனத்தையும் விஞ்ஞானமய கோசமானது அறிவையும் ஆனந்தமய கோசமானது ஆன்மாவின் இயல்பான ஆனந்தத்தையும் குறித்து நிற்கின்றது.

இவ்வாறு காணப்படும் இந்த ஆன்மாவிற்கு மூன்று முக்கிய நிலைகள் இருப்பதாக கூறப்படுகின்றது. அவை

1. இருள் நிலை
2. மருள் நிலை
3. அருள் நிலை

என வகைப்படுத்தப்படும். இவை பற்றிப் பார்த்தால் இருள் நிலை என்பது உடல் இல்லாதா நிலையில் ஆன்மா எவ்வித உணர்வுமின்றி கல்லுப்போல இருக்கும் நிலையாகும்.

மருள் நிலை என்பது உடலோடு கூடிய நிலையாகும். இந்நிலையிலே ஆன்மா உடலுடன் சேர்ந்து செயல்படுகின்றது. மருள் நிலையில் ஓரளவு அறிவு இருக்கின்றது. இந்த அறிவு பூரண அறிவு அல்ல என வேதாந்தியான இராமானுஜர் போன்றவர்கள் கூறி இவ் அறிவை ''தர்ம பூத ஞானம்'' என்பர். அதாவது குறை இந்த அறிவு எனப்படும். எனினும் இந்த அறிவை கொண்டு தளராத முயற்சியினால் பேரறிவை பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்து அருள் நிலை என்பது இந் நிலையிலேயே ஆன்மா அறிவை பெறுகின்றது. நன்மையேது, தீமையேது என்ற உணர்வு ஆன்மாவுக்கு உண்டாகும். அருள் நிலையில் ஆன்மா இறைவனை அறிந்து கொள்வதால் ''பிரமஞானத்தை'' பெறுகிறது. இவ்வாறு ஆன்மாவின் மூன்று நிலை பற்றியும் உபநிடதம் பேசிச் செல்கிறது. இவற்றை விட உபநிடதங்களின் கன்மம், மறுபிறப்பு, ஒழுக்கவியல், பிரபஞ்சக் கோட்பாடுகள் விளக்கப்படுவதை காணலாம்.

உபநிடதங்களில் இரண்டு வகையான முத்திபற்றியும் கூறப்படுகின்றது.

1. விதேக முத்தி
2. சீவன் முத்தி

இங்கு விதேக முத்தி என்பது தேகம் நீங்கிய பின் ஏற்படும் முத்தியாகும். சீவன் முத்தி என்பது உடலோடு உயிர் இருக்கும் போது பெறும் முத்தியாகும். இம் முத்தியை பெற ஞானமும் வைராக்கியமும் அவசியமாகும். இவ்வாறு முத்தியின் தன்மை பற்றி விளக்கப்பட்டுள்ளது.

## 2.6 உபநிடதங்களில் ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது ஒரு சமூகத்திற்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். உபநிடதங்கள் பேசுகின்ற தத்துவங்களிலே கன்மம், மறுபிறப்புக் கேபட்பாடு மிகவும்

முக்கியமானதாகும். இதிலே ஒழுக்கம் பற்றி விதந்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது மறுபிறப்பு பற்றிய சிந்தனையே ஒரு மனிதனை ஒழுக்கமுடையவனாக வாழத் தூண்டுகின்றது. மேலும் நன்மை, தீமை, பாவம், புண்ணியம், இன்பம், துன்பங்களை விளக்கி அவற்றைக் கர்மக் கோட்பாடாகச் சிறப்பித்துக் கூறி அதனால் மறுபிறவி உண்டென்ற கொள்கையையும் முக்கியப்படுத்துகின்றது. இங்கு மனிதன் தன் வினைப் பயனுக்கு ஏற்பவே பிறவியெடுக்கின்றான் என்றும் கூறப்படுகின்றது. எனவே இதன் மூலம் வினைப்பயனை எல்லோரும் அனுபவித்தேயாக வேண்டும் என்று பிருகதாரண்ய உபநிடதம் கூறுகின்றது. இதனால் எந்த செயலைச் செய்வதாயினும் அதன் விளைவை ஆராய்ந்தே செய்ய முற்படுவர். எனவே மக்கள் பிழையான வழிகளுக்குச் செல்லாது ஒழுக்கமுடையவர்களாக வாழ முற்படுவர்.

உபநிடத மகா வாக்கியங்கள் மூலமாக ஒழுக்கக் கருத்துக்கள் குறிப்பிடப்படுவதனைக் காணலாம். தத்துமஸி, அகம் பிரம்மாஸ்மி, சோகமஸ்மி போன்ற கருத்துக்கள் மூலமாக அனைவரிலும் தெய்வீகம் இருக்கின்றது என்ற கருத்து வெளிக்காட்டப்படுகின்றது. எனவே ஆன்மாக்கள் அனைத்துமே வணங்கப்பட வேண்டியவை என்ற கருத்துப் புலப்படுத்தப்படுகின்றனது.

வினைப்பயனிலிருந்து நீங்குவதானால் பந்த பாசங்களிலிருந்து நீங்க வேண்டும். இதற்கு இறைவனருள் வேண்டும். பக்தி மார்க்கத்தின் மூலமே இதனை அடையமுடியும். எனவே பக்தியைப் பின்பற்ற ஒழுக்கம் அவசியம். எனவே பக்தியினூடாக ஞானத்தைப் பெற்று ஞானத்தினூடாகவே இறைவனை அடையமுடியும். எனவே இதன் மூலமாக ஒழுக்கக் கருத்துக்கள் முதன்மைப் படுத்தப்படுகின்றன.

நல்லொழுக்கம் உடையவர்கள் நல்ல கருப்பையில் புகுவர் என்று சாந்தோக்கிய உபநிடதம் கூறுகின்றது. அதாவது பிராமணர், சத்திரியர், வைசியர் போன்றோரின் கருப்பையிலே புகுந்து பிறவியெப்பர் என்கிறது. அத்தோடு நற்செயலின் பயனை சுவர்க்கத்தில் அனுபவித்துவிட்டு இவ்வுலகில் பிறக்கின்றனர் என்று முண்டக உபநிடதம் கூறுகின்றது. இவ்வாறு கூறப்படுவதன் மூலம் முத்தியைப் பெற்று இறைவனை அடைய முடியும். இவை தவிர சிரவணம், மனனம், நிருத்தியாசனம் போன்றவற்றையும் முத்திக்கான வழிமுறைகளையும் காட்டுகின்றது. மேலும் முத்திக்குச் சிறந்த வழி தியானம் என முண்டக உபநிடதம் கூறுகின்றது. எனவே இதன் மூலமாக உபநிடதங்களில் ஒழுக்கக் கருத்துக்கள் முதன்மைப் படுத்தப்படுகின்றமை அறியத்தக்கது.

உபநிடதங்களில் உள்ள சத்திய காமன், ஜயபாலா போன்றோர் கதையின் மூலம் ஒருவரின் பிறப்பு எவ்வாறு இருந்தாலும் நல்லொழுக்கத்தை உடையவர்கள் உயர்ந்த சாதியினராகவே கருதப்படுகின்றனர். அதாவது தமது ஆரம்பக் கல்வியை கற்பதாக இருந்தால் குருவிடம் தமது வர்ணத்தை குறிப்பிட வேண்டும். ஆனால் சத்தியகாமன் தன் தந்தை யரெனத் தெரியாது என்று கூறினான். எனவே உண்மை கூறியதனால் நீ உயர்ந்த குலத்திலே பிறந்திருக்க வேண்டும் என்று கூறி குரு கல்வி போதித்தார். எனவே இதன் மூலமாக இதில் உண்மை பேச வேண்டும் என்ற ஒழுக்கத் தத்துவம் புலப்படுத்தப்படுகின்றமையை காணலாம்.

தைத்திரிய உபநிடதத்தில் ஒரு மனிதன் தன் வாழ்விலே யார் யாரை வணங்க வேண்டும் என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கடவுளை மட்டுமன்றி தாய், தந்தை, குரு போன்றோரை வணங்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. இதனை மாத்ரு தேவோ பவ – தாயைத் தெய்வமாக போற்று, பித்ரு தேவோ பவ – தந்தையைத் தெய்வமாகப் போற்று, ஆச்சார்ய தேவோ பவ – குரவைத் தெய்வமாகப் போற்று என்ற வாக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். இதன் மூலம் யார் எவரை வணங்க வேணடும், யாருக்குப் பணிந்து நடக்க வேண்டும் அதாவது பெரியோரைக் கனம் பண்ணுதல் போன்ற கருத்துக்கள் புலப்படுத்துக்கின்றது.

மேலும் சத்தியம் வத – உண்மையைப் பேசு, தர்மம் வத – தர்மம் செய் போன்றமகா வாக்கியங்கள் மூலம் உபநிடதத்தில் சிறந்த ஒழுக்கக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவது புலப்படுகிறது. எனவே இதன் மூலமாக உபநிடதம் ஒருவனை சிறந்த மனிதனாக வாழ வழி செய்கிறது. அதாவது உண்மையைப் பேசி தன் வாழ்விலே புகழடைந்து இறைவனின் அருளையும் பெறுகிறான். இதுபோன்றே தர்மம் செய்து மற்றவர்களுடன் இணைந்து வாழ்ந்து, இல்லாதவர்களுக்கு தானம் கொடுப்பதன் மூலம் வாழ்விலே புண்ணியத்தையும் சேர்த்துக் கொள்கிறான். இதன் மூலமாக அவன் தன்னுடைய வாழ்வின் இறுதி நோக்கமான முத்தியையும் பெறுகிறான். ஓதுவது ஒழியேல், அறம் செய், எந்த செயல் குற்றமற்றவையோ அவற்றை மட்டும் செய்ய வேண்டும் போன்ற கருத்துக்கள் மனிதனை அறவானாக்குகின்றது. இதனால் சமூகத்திலே குற்றங்கள் குறைந்து சிறந்த சிந்தனைப் போக்குடையவர்களாக மக்கள் வாழ்கின்றனர். எனவே உபநிடதங்கள் சிறந்த ஒழுக்க வழிகாட்டியாக அமைகின்றன.

செல்வத்தைப் புறக்கணிக்காதே, விருந்தினரைத் தெய்வமாகக் கருது, உனக்காக மட்டுமன்றி நாட்டிற்கும் பயன்படுமாறு ஏராயமான உணவினை உருவாக்கு,

எவருக்கும் உணவு இல்லை என்று சொல்லாதே, எவருக்கும் இடமில்லை என்று கூறாதே, நீ கொடுக்கும் ஒவ்வொன்றையும் அன்போடும் நம்பிக்கையோடும் கொடு, என்னிடம் பின்பற்றிய பழக்கவழக்கங்களை நீ வாழ்நாள் முழுவதும் பின்பற்ற வேண்டும் என்பனபோன்ற கருத்துக்கள் இங்கு புலப்படுத்தப்படுகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

1. உபநிடதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
   (அ) உபநிடதத்தின் பொருள் விளக்கம்
   (ஆ) உபநிடத்தின் அமைப்பு
   (இ) உபநிடத்தில் ஒழுக்கம்
2. உபநிடதம் கூறும் பிரமம் பற்றி கருத்துரைக்குக.
3. உபநிடதம் கூறும் ஆன்மா பற்றிய சிந்தனைகளை எடுத்துரைக்குக.
4. உபநிடதங்களில் வெளிப்படுத்தப்படும் ஒழுக்கச் சிந்தனைகள் தற்கால சமூகத்திற்கு பொருந்துமாற்றினை பரிசீலனை செய்க.

***உசாத்துணைகள்***


1. *கந்தசாமி, சோ.ந., (2004), இந்திய தத்துவ களஞ்சியம், மெய்யப்பன் பதிப்பகம்.*
2. *கமலநாதன், செ., (2007), இந்துப் பண்பாட்டு வரலாறு -1, அக்'ய வெளியீட்டகம் களுதாவளை -1 மட்டக்களப்பு.*
3. *மாகாதேவன், ரி. எம் .பி., (2001), இந்து சமயத் தத்துவம், குமரன் புத்தக இல்லம்.*
4. Banerji, Sures Chandra (1989), A Companion to Sanskrit Literature, Motilal Banarsidass
5. Bhattacharya, Ashim (2006), Hindu Dharma: Introduction to Scriptures and Theology
6. Coward, Harold G.; Raja, K. Kunjunni; Potter, Karl, eds. (1990). Encyclopedia of Indian Philosophies, Volume 5: The Philosophy of the Grammarians. Princeton University Press.
7. Dalal, Roshen (2014), The Vedas: An Introduction to Hinduism's Sacred Texts, Penguin UK.

# அத்தியாயம் 03

# ஆகமம்

3.1 ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்
3.2 ஆகமங்களின் காலம்
3.3 ஆகமங்களின் சிறப்பு
3.4 ஆகமங்களின் முக்கியத்துவம்
3.5 சைவ ஆகமங்கள்
3.6 வைணவ ஆகமங்கள்
3.7 சாக்த ஆகமங்கள்
3.8 ஆகமங்களில் வெளிப்படுத்தப்படும் பண்பாடும் தத்துவமும்

**அத்தியாயச் சுருக்கம்**

ஆகமங்கள் என்பது இந்து சமயத்தின் முப்பெரும் பிரிவுகளான சைவம், வைணவம், சாக்தம் ஆகிய சமயங்களின் மதக்கோட்பாடு, கோயிலமைப்பு, கோயில் வழிபாடு, மந்திர மொழிகள் ஆகியவை அடங்கிய நூல் வகையாகும். இவை பொதுவாகத் தென்னிந்தியாவிலேயே புழக்கத்தில் உள்ளன. எனினும் இவை சமஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டு உள்ளன. அவை வேதங்களை அடிப்படையாகக் கொள்ளாதவை. எனினும் இவை வேதங்களுக்கு மாறானவையும் அல்ல. ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வகையான வழிபாட்டு முறைகள் பற்றிக் கூறுகின்றன. சமண மற்றும் பௌத்த ஆகமங்கள் கூட உள்ளன. ஆகமங்களில் கிரியைகளுக்கும் அனுட்டானங்களுக்கும் முக்கியம் பெறுவதுடன் தத்துவங்களுக்கும் வாழ்வியல் கலைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளதுடன் இவற்றின் ஊடாக மக்களின் வாழ்க்கையுடன் நெருக்கமுற்று விளங்குகின்றது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

ஆகமங்களை ஒரு பாடமாக கற்கின்ற மாணவர்களுக்கு ஆகமங்கள் குறித்த அறிமுக அறிவினை வழங்குவதே இவ் அத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தினை மாணவர்கள் திறன்பட கற்பதன் மூலம் ஆகமம் பற்றி அறிந்து கொள்வதுடன் சமயம், தத்தவம், வாழ்வியல், கலை முதலானவற்றில் செல்வாக்கு குறித்த தெளிவான அறிவினைப் பெற்றுக் கொள்வர்.

### 3.1 ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்

சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்த முதல் நூல்கள் இரண்டினுள் ஆகமமும் ஒன்று. ஆகமம் தந்திரம் எனவும் கூறப்படுகின்றது. ‘‘ஆகம்’’ எனுஞ்சொல்லானது ஆகம எனப் பிரிபட்டுத் தனித்தனியே பொருள் தருகின்றன. ஆ – சிவஞானம் என்றும், க – மோட்சா தானம் என்றும், ம – மலநாசம் என்றும் பொருள் கொண்டு, ஆனமம் ஆன்மாக்களுக்கு மலத்தினை நாசம் செய்து ஞானத்தினை உதிப்பித்து மோட்சம் கொடுப்பதாக உபதேசிக்கப்பட்ட நூல் எனவும் பெரியோர் கூறுவர். மேலும் ஆகமம் என்பது தொன்று தொட்டு வரும் அறிவு எனவும் பொருள்படும். ஆகம எனப்பிரிபட்டு ஆ என்பது பசு எனவும் க என்பது பதி எனவும் ம என்பது பாசம் எனவும் பொருள்பட்டு ஆன்மாவிலுள்ள மலங்களில் நாசம் பெற்று சிவஞானமாகிய மோட்சத்தினை அருளுகின்ற நூல் ஆகமம் எனப் போற்றப்படுகின்றது.

### 3.2 ஆகமங்களின் காலம்

காலத்தினை வரையறுப்பதில் பலரது பலவிதமான கருத்துக்கள் காணப்படுகின்றன. கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முன் தோன்றியவை என ஒரு சாரார் குறிப்பிடுகின்றனர். இன்னும் சிலர் 4ஆம் நுற்றாண்டிற்கும் 6ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் என்பர். திருமூலர் ஆகமம் பற்றிப் பேசுவதனையும் பல்லவ மன்னனான இராஜசிம்மன் தன்னை ‘‘ஆகமப்பிரியன்’’ என்று கூறப்படுவதனையும் சான்றாகக் கொள்ளும் போது ஆகமம் இயற்றப்பட்ட காலத்தினை கி.பி 6 ஆம் நூற்றாண்டிற்கும் 7ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தினை கொண்டிருக்கலாம் என்பது புலனாகின்றது.

### 3.3 ஆகமங்களின் சிறப்பு

வேதங்களை அடுத்து இந்துசமய பண்பாட்டில் முக்கியத்துவம் பெறுகின்ற இலக்கியமாக ஆகமம் காணப்படுகின்றது. இது சிரௌதம், சுபதந்திரம் என சிறப்பிக்கப்படுகின்றது. வேதங்கள் பொது நூல் எனவும் ஆகமங்கள் சிறப்பு நூல் எனவும் கொள்ளப்படுகின்றது. இதன் சிறப்புக்கருதி திருமூலர், ‘‘வேதமோடாகமம் மெய்யா இறை நூல்’’ எனக் கொள்ளப்படுகின்றது. இவற்றின் சிறப்புக்கருதி சைவ ஆகமங்கள் சிவாகமங்கள் எனவும் வைணவ ஆகமங்கள் சங்கிதைகள் எனவும், சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் எனவும் அழைக்கப்படுகின்றது. இவை ஆன்மாக்களின் மலத்தினை அகற்றி இன்பம் பெறும் வழிகளைக் கூறும். சிவாகமங்கள் கடவுள் வழிபாட்டினை இரகசியம், மந்திரம், மூர்த்தி, ஆலயம் ஆகிய முறைகளில் விரித்துக்கூறும்.

இந்து சமயத் தத்துவக்கோட்பாடுகள் பலவற்றில் ஆப்த வாக்கியப் (உரை) பிரமாணமாக அமைகின்றது. இந்துக்களின் கோயில் கட்டட, சிற்ப கலைகளை எடுத்துக் கூறுவதிலும் கிரியை மரபுகளை நெறிப்படுத்துவதிலும் ஆகமங்கள் முக்கிய இடம் பிடிக்கின்றன. ஆகமங்கள் கிரியை நெறி மூலம் வழிபாட்டை நெறிப்படுத்துகின்றன. இக்கிரியை நெறியை எடுத்து விளக்கும் நூலே பத்ததிகள் ஆகும். ஆகமங்கள் கூறுகின்ற ஆலய வழிபாடு, சமய அனுட்டானங்கள், சைவ சித்தாந்த சிந்தனைகள் போன்ற பல விடயங்களினூடாக மக்களின் வாழ்க்கையுடன் நெருக்கமுற்று விளங்குகின்றன.

### 1.4 ஆகமங்களின் முக்கியத்துவம்

சமயம், தத்துவம், கலை மற்றும் வாழ்வியல் முதலியவற்றில் ஆகமங்களின் செல்வாக்கினை காணமுடிகின்றத. இதன் முக்கியத்துவம் குறித்து ‘‘வேதமோடாகமம் மெய்யாம் இறைநூல் ஓதும் பொதுவும் சிறப்பும் மென்றுள்ளன நாதன் உரையவை… திருமந்திரம் சிறப்பிக்கின்றது.

கடவுள் சொல்லுக்கும், மனதிற்கும் எட்டாத பொருளாய் இருத்தலால், அவரை வேதங்கள் கூறுகின்ற விதத்தில் வழிபடுவது என்பது சிலராலேதான் இயலும். பெரியோர்கள் தம் உடலையே இறைவனாக வழிபடுவர். ஏனையோர் வழிபடுவதற்காகவே ஆலயங்களை அமைக்குமாறு ஆகமங்கள் கூறுகின்றன. ஆலயம் என்பதன் பொருள் ‘‘ஆன்மாக்களை இறைவனிடம் இலயிக்கும்படி செய்யும் இடம்’’ என்பதாகும். சிவாலயத்தின் மூலஸ்தானத்தில் இலிங்கம் காணப்படும். அதற்குக் காரணம் கடவுள் உருவமாயும் அருவமாயும் இருப்பதே ஆகும்.

### 1.5 சைவ ஆகமங்கள்

சிவன் ஒருவனே பரமாத்மா ஆதலின் அவனுக்கே இலிங்கம் உரியது எனச் சைவாகமங்கள் கூறுகின்றன. சிவாகமங்களில் ஆலய அமைப்பு பற்றி செவ்வனே விளக்கப்பட்டுள்ளது. சிவாகமங்கள் இருபத்தெட்டாக கொள்ளப்படுகின்றது. அவையாவன: காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அம்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கிநேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், புரோக்கீதம், இலஸிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பரமேசுரம், கிரணம், வாதுளம் என்பனவாம். இவற்றுள் காமிகம், காரணம், வாதுளம், சுப்பிரபேதம்,

புட்கரம் ஆகிய ஐந்து ஆகமங்களே கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டு வெளியாகியுள்ளன என்று சோமதேவ சர்மா கூறியுள்ளார்.

சைவ சித்தாந்த அடிப்படைத் தத்துவங்களைத் தொகுத்தும், வகுத்தும் ஆகமங்கள் விரித்துரைத்தாலும் மக்களின் பயன்பாட்டையும், அவர்களுக்கு இன்றியமையாததையும் வலியுறுத்தும் நோக்கமே ஆகமங்களை ஆக்கியோருக்கு இருந்தமையினால் அவர்கள் ஆலயத்தோடு தொடர்புடையவற்றை மிக விரிவாக விளக்கியுள்ளனர்.

இம்மை, மறுமைப் பயனை அடைய விழைவோர் புதிய ஆலயங்களை அமைத்தல், கிலமடைந்தவற்றைப் புதுக்குதல் மண்டபம் கட்டுதல், திருக்குளம் வெட்டுதல், திருநந்தவனம் அமைத்தல், விக்கிரகங்களை அமைத்தல், உற்சவம் நடாத்துதல் முதலான பணிகளிலே தம்மை ஈடுபடுத்தல் வேண்டுமெனவும், பொருள் வசதி குறைந்தோர் தமது உடலாற் செய்யக்கூடிய சிவாலயத் தொண்டுகளை மேற்கொள்ளல் வேண்டுமெனவும் ஆகமங்கள் அறிவுறுத்துகின்றன. ஆகம சாரங்கள் திருமந்திரம், மெய்கண்ட சாத்திரம் ஆகிய நூல்களிலே மிகுதியாகத் தரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். சிறப்பாகத் திருமந்திரமும் சிவஞான சித்தியாரும் தத்துவ விளக்கங்களோடு அமைந்துவிடாது, நால்வகைப் பாதங்களையும் முறையே தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என எடுத்தக்காட்டி விரித்துரைத்துள்ளமை சைவ மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியுள்ளது.

### 1.6 வைணவ ஆகமங்கள்

சைவர்களைப் போலன்றி வைணவர், கோயில்களோடு இல்லங்களிலும் திருமாலின் விக்கிரகத்தை எழுந்தருளச் செய்து ஈரிடங்களிலும் தமது வழிபாட்டை நடாத்தும் வழக்கத்தினை கடைபிடிப்போர், இவ்வாறு எழுந்தருளுவிக்கும் மூர்த்தி பற்றியும், அவர் எழுந்தருளி விளங்கும் விக்கிரகம் அதற்கு நிகழ்த்தும் ஆராதனைகள் கோயில்களிலும் இல்லங்களிலும் விக்கிரகங்களை அமைத்ததற்கான விதிகள், அவ்வாறு அமைப்பனவற்றை வழிபடும் முறைகள், வழிபடுவோரில் காணப்படுகின்ற தகுதிகள், பக்தியொடு வழிபடுவோர் அடையும் பயன்கள் பற்றியும் விரிவாகக் கூறும் நூல்களே வைணவ ஆகமங்களாம். இவை பஞ்சராத்திரங்கள், தந்திரம் மற்றும் பாகவத சாத்திரங்கள் என்றும் அழைக்கப்படும். வைணவ ஆகமங்களை பஞ்சராத்திர மரபு, வைகாசன மரபு என இரண்டாகக் கூறுவர்.

### 1.6.1 பஞ்சராத்திரம்

பஞ்சராத்திரம், சைவ ஆகமங்கள் போன்றே பகவானால் அருளப்பெற்றது எனக் கொள்வது வைணவ மரபாகும். ஐந்து இரவுகளில் திருமாலால் அருளப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது. பஞ்சராத்திர முறையில் மந்திரங்களுடன் தந்திரங்களும் முத்திரைகளும் கிரியை முறையில் முக்கிய இடம் வகிக்கின்றது. பஞ்சராத்திரம் பல பொருள்களையுடையதாகக் காணப்படுகின்றது.

பஞ்ச ஐந்து, இராத்திரம் - ஞானம், ஐந்துவகை ஞானங்களைக் குறிப்பதாக அமைகின்றது என நாரத பஞ்சராத்திரம் கூறுகின்றது.

சாங்கியம், யோகம், பௌத்தம், ஆருகதம்,ஜைனம் எனும் ஐந்து சாஸ்திரங்களும் (பஞ்சராத்திரத்தின்) முன் இருளாகத் தோற்றுவதால் பஞ்சராத்திரம் என்ற பெயர் வந்தது என பாத்மதந்திரம் குறிப்பிடுகின்றது.

அவித்தையை ஒழிப்பதனால் பாஞ்சதந்திரம் ஆகிற்று என பிரமசங்கிதை எடுத்தியம்புகின்றது. திருமாலது அடியார்களின் ஐந்துவித கர்மங்களையும் குறிப்பதனால் பஞ்சராத்திரமாயிற்று என்பர். பகவானாகிய நாராயணன் தன் அடியார்களுக்கத் தன்னை ஐந்து உருவங்களில் வெளிப்படுத்துகின்றான். அவையாவன:

பரம் - பரம்பொருளாகிய நிலை (கடந்த நிலை)

வியூகம் - பாற்கடலிற் பள்ளி கொண்டு படைத்தல், காத்தல், அழித்தல், சம்சார பந்த நீக்கம் புரிதல் ஆகிய நான்கும் தொழில்களையும் நிகழ்த்தல்

விபவம் - அவதாரத் திருமேனிகள் எடுத்துரைத்தல்

அந்தர்யாமி – சிவராசிகள் யாவினுள்ளும் தோன்றாத் துணையாய் நின்றருளல்

அர்ச்சம் - ஆலயங்களிலும் இல்லங்களிலும் விக்கிரக வடிவில் எழுந்தருளி அருள்பாலித்தல்.

### 1.6.2 வைகாசனம்

விகச முனிவரால் உருவாக்கப்பட்டதாக கருதப்படுகின்றது. இவர்கள் வடகலை வைணவ பிரிவினை சேர்ந்தவர்கள். மூலவர் திருமேனியைத் தொடும் உரிமை கொண்டவர்கள். இராமானுஜரையோ நம்மாழ்வாரையோ குருவாகக் கொள்வதில்லை. பஞ்ச சம்காரம் (வைணவனாக எண்ணப்படுவதற்கு தேவையான ஐவகைத் தூய்மைகள்) என்ற வைணவத் தீட்சையை இவர்கள் பெறுவதுமில்லை. தாயின் கருவிலேயே இம்முத்திரை தங்களுக்கு இடப்பட்டுவிட்டது என்பது

இவர்களின் நம்பிக்கையாகும். முறையான தீட்சையும் பயிற்சியும் பெற்ற வைகாசனர் தனிச்சாதியினராகவே தம்மைக் கணித்து பஞ்சராத்திரத்திலிருந்து வேறுபட்டோராய் விளங்குகின்றனர்.

வைகாசன முறை கோயில் வழிபாட்டினை மிக விரிவான வகையில் வகுத்துள்ளது. அதனால் இதனைத் தந்திரம் அல்லது பிரயோகம் என்றும் கூறுவர். இந்த முறைப்படி வழிபாடு செய்ய எல்லா வைணவருக்கும் உரிமை கிடையாது. எல்லோரது வீட்டிலும் கோயிலிலும் பஞ்சாட்சர முறைப்படி வழிபாடு செய்யவே உரிமையுடையவர்கள். வைகாசன முறையை அநுட்டிக்க உரிமையுடையவர்கள். வைகாசன முறையிலும் பூசை, மகோற்சவம் வழிபாடுகளை நடாத்தி வருகின்றன.

### 1.7 சாக்த ஆகமங்கள்

சக்தியின் சிறப்புக்களை எடுத்துக் கூறுபவையாக இவை அமைகின்றன. சிவபெருமான் உலகத்தினை பல்வேறு தந்திரங்களால் (ஆகமங்களால்) நிரப்பினார். பின்பு சக்தியின் வேண்டுகோளுக்கிணங்க முன்னைய தந்திரங்களின் சாரத்தையும் நோக்கம் பயன் யாவற்றையும் திரட்டி சக்தி ஆகமத்தினை அருளினார். இத ஸ்ரீபுர வழிபாடு அல்லது ஸ்ரீ வித்யா (வித்தை) என அழைக்கப்படும் என்று பொருள்பட ஸ்ரீ சங்கராச்சாரியார் தமது சௌந்தர்யலகரியில் விளக்கியுள்ளார். சைவ ஆகமங்களைப் போலவே சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலியனபற்றி கூறுகின்றன. சாக்த ஆகமங்களின் சிறப்புப் பெயர் தந்திரங்கள் என்பதாகும். இவை 77 ஆகும். இவற்றில்,

1. மகாநிருவாண தந்திரம்
2. திரிபுரரகசியம்
3. காமலாவிலாசம் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

சைவ சித்தாந்தத்தோடு பெருமளவு நெருங்கிய தொடர்பினைக் கொண்டும் வேறுபட்டும் விளங்குகின்றன. சாக்தாகமத்தில் முப்பத்தாறு தத்துவங்களும் பேசப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

### 1.8 ஆகமங்களில் வெளிப்படுத்தப்படும் பண்பாடும் தத்துவமும்

சிவன், விஷ்ணு, சக்தி போன்ற கடவுளரைத் தமது முழுமுதற் பரம்பொருளாய் ஏற்றவர்கள் வேதத்தினை முதல் நூலாக அங்கீகரித்தபோதும் தத்தம் சமய ஆகமங்களுக்கே அதிக முதன்மை வழங்குவர். பக்தியோடு கூடிய வழிபாடும் அவ்வழிப்பாட்டிற்கு இடமான ஆலயங்களும் இவர்களாலே பெரிதும் போற்றப்படுகின்றன. தோத்திரங்கள், சாத்திரங்கள் கூறும் உண்மைகளை

விதிகளாகவும் கடைப்பிடிக்கவேண்டிய நெறிகளாகவும் ஏற்றுள்ளதோடு அவற்றின் அடிப்படையிலே தத்துவங்களையும் ஆகமங்கள் வகுத்துத் தருகின்றன. இவற்றிற்கான மூலாதாரங்கள் வேதங்களில் காணப்பட்டாலும் அவற்றினை வரையறை செய்து கன்மம், ஞானம் என்ற இரு பிரிவுகளில் ஒழுங்குபடுத்தியுள்ளமையும் ஆகமங்களின் தனிச்சிறப்பாகும்.

கொல்லாமை, கள்ளாமை, விபசாரம் புரியாமை, பொய்யாமை முதலான நல்லொழுக்கங்களை வற்புறுத்தியும் உயிர்களிடத்தே இரக்கம் கொண்டும் உயர்வு தாழ்வு கருதாது அடியாரையும் பிறரையும் அன்போடு பேணி உறவாடியும் வாழ ஆகமங்கள் வழிவகுக்கின்றன.

கோயிற்கட்டடக்கலை, சிற்பக்கலை, விக்கிரகக்கலை, இசைக்கலை, முதலாம் தொழிநுட்ப கலைகளும் அழகியற் கலைகளும் வளர்வதற்கு ஆகமங்களின் பங்களிப்புப் பெரிதும் உதவுகின்றன. சிற்ப சாத்திரம், ஆகமத்திரம் ஆகமத்தின் விதிகளையே ஆதாரமாகக் கொண்டு தனது செயற்பாடுகளை வகுத்தமையும் தெய்வப்பண்ணிசை ஒழுங்குபடுத்தப்பட்டமையும் ஆகமங்கள் வகுத்த நியமங்களுக்கு அமைவாகவே என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

ஆகம விதிகளுக்கு அமைவாக பூசைகள், மகோற்சவங்கள், மக்களைச் சமயப்பற்றும் தெய்வப்பற்றும் பக்தியுணர்வும் மிக்கவர்களாக மாற்றுகின்றன. ஆகமங்களில் வெளிப்படும் பண்பாடானது இந்துநாகரிகத்தின் அனைத்துச் சிறப்புகளையுந் தன்னுள் அடக்கி அதன் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக உள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**1.8.1 ஆகமம் கூறும் கலை**

ஆகமங்கள் கலையம்சங்களை விளக்குகின்ற இலக்கியமாகும். குறிப்பாக ஆகமங்கள் கட்டடம், சிற்பம், விக்கிரகம் ஆகிய கலைகளைப் பற்றியே விளக்கமாகக் கூறுகின்றது. கட்டடக்கலை பற்றி வாஸ்துசாஸ்திரம் எனும் நூலும் சிற்பம், விக்கிரகம் போன்ற கலைகளைப் பற்றி சிற்சாஸ்திரம், சகளாதிகாரம், மானசாரம், மயமதம், ரூபமண்டலம், சில்பரத்தினம், விஸ்வகர்மியம் போன்ற நூல்களும் குறிப்பிடுகின்றன.

சைவாகமங்கள் சைவமக்களின் ஆன்மீக வாழ்வை ஆலயங்களை மையமாகக்கொண்டு கூறுகின்றமையினைக் காணலாம். அகமங்கள் கூறும் ஆன்மீக வாழ்வும் அதனுடன் இணைந்த ஆலய வழிபாடும் வேத மரபின் பரிணாம வளர்ச்சி

என்று கொள்ள முடியும். ஆலண வழிபாட்டையும் அவை சார்ந்த அனுட்டானங்களையும் விதிகளாக விளக்குவதனால் சிவாகமங்களுக்கு சாத்திரங்கள் என்ற பெயரும் உண்டு.

ஆகமம் கூறும் கிரியைகளில் கர்ஷணம் என்னும் கிரியை ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தினைப் பண்படுத்தல் பற்றியதாக அமைகின்றது. சிவாலயம் ஒன்றில் இடம்பெற வேண்டிய கருவறை, மண்டபங்கள், பரிபாரக் கோயில்கள், பிரகாரங்கள், கோபுரம், விமானம் என்பன அமைய வேண்டிய விதிகள் பற்றி குறிப்பிடுகின்றன.

ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி காமிக ஆகமம் ‘‘பிரகார லட்சண விதிப்படலம்’’ எனம் தலைப்பில் விபரிக்கின்றது. ஓர் ஆலயமானது மனித உடலைப்போல் அமைக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. இதனை திருமூலர், ‘‘உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்’’ என்றும் அப்பர், ‘‘காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக’’ என்றும் எடுத்துக்காட்டுகின்றார். இதனை ஆகமம் ‘‘க்ஷெத்திரம் சரீரப் பிரஸ்தாரம்’’ என்கின்றது.

பாதங்கள் - கோபுரம்
ஆஸ்தான மண்டபம் - முழங்கால்
நிருத்த மண்டபம் - தொடை
பலிபீடம் - தொப்புள்
மகாமண்டபம் - மார்பு
அர்த்த மண்டபம் - கழுத்து
கருவறை – தலை

ஆலயத்தின் முன் அமைக்கப்படும் கோபுரமானது முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றன. கோபுரத்தில் ஏழு நிலைகள் உள்ளன. இந்த ஏழு நிலைகளும் நாம் உடலிலுள்ள ஏழு சக்கரங்களையும் குறிக்கும். என்று ஆகமம் விளக்குகின்றது. சிவாகமங்கள் ஆலய அமைப்பினூடாக திருவுருவ வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன. திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லை தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் ‘‘சிலாபரீட்சணம்’’ என்ற தலைப்பில் கூறுகின்றன. திருவுருவங்களினுடைய பங்க அமைதிகள், அங்கலட்சணம், அவற்றின் அளவுப்பிரமாணம், ஆடை, ஆபரணம் என்பன பற்றி அவற்றில் உண்டு.

கல்லைத் தட்டும்போது மணியோசை கேட்டால் அது ஆண்கல், என்றும் சலங்கை ஒலி கேட்டால் அது பெண்கல் என்றும் பரிசீலிக்கப்பட்டு சிற்பம் செதுக்கப்படுகின்றது. சிற்பி வடிக்கப்படும் தெய்வங்களுக்குரிய தியான மந்திரங்களை உச்சரித்து விக்கிரகங்களை வடிப்பார். சிவலிங்கம், அர்த்தநாதீஸ்வரர், இலிங்கோற்பவர், கங்காதரர், தட்சணாமூர்த்தி போன்ற சிவனின் 25 மூர்த்தி பேதங்களை அமைக்க வேண்டிய விதிகளை ஆகமங்கள் வகுத்துக் கூறுகின்றன. திருவுருவங்களின் பிரதிமாலட்சணத்தில் ஆகமம் பிரமாணம் முதன்மையான இடம் பெறுகின்றது.

### 1.8.2 ஆகமம் கூறும் தத்துவ மரபுகள்

ஆகமங்கள் சைவசித்தாந்த சிந்தனைகளைக் கூறுகின்ற இலக்கியமாகும். ஆகமத்திற்கு சித்தாந்தம் என்ற மறுபெயர் ஒன்றும் உண்டு. ஆகமம் என்ற சொல்லும் முப்பொருள் தத்துவத்தை உணர்த்திக் காட்டுகின்றது. ஆகமம் கூறும் நாற்பாதங்களில் ஞானபாதமே சைவசித்தாந்த கருத்துக்களை பாதமாக அமைகின்றன. கிரணாகமம், ரௌரவம், பௌஷ்கரம் முதலான ஆகமங்கள் சித்தாந்த சிந்தனைகளைப் பெறுகின்ற பெரிதும் கொண்டவை.

இதில் கிரணாகமத்தின் ஞானாபாதத்தினை நோக்கின் அது 12 படலங்களால் ஆனது. ஆவை பதிபடலம், பசுபடலம், பாசபடலம், மாயாபடலம், மந்திராவதணப்படலம், சன்னிதி பாத படலம் போன்ற தலைப்புகளில் கீழ் சைவசித்தாந்த உண்மைகளை விபரிக்கின்றது. முப்பொருள் உண்மை, அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள், ஆன்ம ஈடேற்றம், மும்மலங்கள் போன்ற விடயங்களை ஆகமங்கள் கூறுகின்றன. நான்கு பாதங்களில் குருலிங்க சங்கம வழிபாடு, சிவசின்னங்கள் பற்றிய விளக்கங்கள் உள்ளன. இயமம், நியமம், ஆசனம், பிரணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அட்டாங்க யோகங்கள் பற்றிய ஆகமத்தில் காணப்படுகின்றன. அட்டாங்க யோகம் மூலம் கைகூடும் அட்டமாசித்திகளான அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, ஆகாமியம், ஈசத்துவம், வசித்துவம் பற்றியும் ஆகமத்தில் காணப்படுகின்றன. ஆன்மாவின் இறுதி இலட்சியமான வீடுபேறாகிய முத்தி பற்றியும் சிவாகமங்கள் கூறுகின்றன.

.

### *பயிற்சி வினாக்கள்*

(01) ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) ஆகமம் என்பதன் எண்ணக்கரு

(ஆ) ஆகமத்தில் கிரியை முறைகள்

(02) ஆகமத்தில் கூறப்படும் கலை வெளிப்பாடுகள் குறித்து கருத்துரைக்குக.

(03) ஆகமத்தில் கூறப்படும்

(அ) ஆலய அமைப்பு

(ஆ) தத்துவ சிந்தனைகள்

பற்றி கருத்துரைக்குக.

**உசாத்துணைநூல்கள்**

.


*கமலநாதன், செ., (2007), இந்துப் பண்பாட்டு வரலாறு -1, அக்'ய வெளியீட்டகம் களுதாவளை -1 மட்டக்களப்பு.*

*சபாரத்தினம், எஸ்.பி., (2002), சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை.*

*பத்மநாதன், சி.,(2005), இந்துக்கலைக்களஞ்சியம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து சமய அலுவல்கள் அமைச்சு*

*மாகாதேவன், ரி. எம் .பி., (2001), இந்து சமயத் தத்துவம், குமரன் புத்தக இல்லம்.*

Banerji, Sures Chandra (1989), A Companion to Sanskrit Literature, Motilal Banarsidass

Bhattacharya, Ashim (2006), Hindu Dharma: Introduction to Scriptures and Theology

Coward, Harold G.; Raja, K. Kunjunni; Potter, Karl, eds. (1990). Encyclopedia of Indian Philosophies, Volume 5: The Philosophy of the Grammarians. Princeton University Press.

Dalal, Roshen (2014), The Vedas: An Introduction to Hinduism's Sacred Texts, Penguin UK,

Doniger, Wendy (2010), The Hindus: An Alternative History, Oxford University Press

Flood, Gavin (1996), An Introduction to Hinduism, Cambridge University Press

Frazier, Jessica, ed. (2011), The Continuum Companion to Hindu Studies, London: Continuum.

# அத்தியாயம் 04
# பகவத் கீதை

4.1 பகவத் கீதையின் கட்டமைப்பு
4.2 பகவத் கீதையின் தோற்றப்பின்னனி
4.3 பகவத் கீதையின் தர்மம் பற்றிய சிந்தனை
4.4 பகவத் கீதையின் தத்துவ சிந்தனைகள்
4.5 பகவத் கீதையின் வைணவ சமய வளர்ச்சி
4.6 பகவத் கீதையில் வெளிப்படுத்தப்படும் மனித வாழ்வின் இறுதி இலக்கு
4.7 பகவத் கீதையில் அட்டாங்க யோகம்
4.8 பகவத் கீதையின் சிறப்புக்கள்

**அத்தியாயச் சுருக்கம்**

பிரஸ்தான திரயத்தில் ஒன்றாக காணப்படுகின்றது. பகவான் கிருஷ்ணரால் அர்ச்சுணனுக்கு உபதேசிக்கப்பட்டது. பக்தியேடு, கீதோ உபதேசம் போன்ற பெயர்களினால் அழைக்கப்படுகின்றது. பகவான் கிருஷ்ணனால் உபதேசிக்கப்பட்ட உபதேசம் என்ற படியினால் பகவத்கீதை எனப்படுகின்றது. பகவான் இராமகிருஷ்ணர் பகவத் கீதை பற்றி கூறும்போது, ''நதிகளுள் கங்கை புனிதமானது, மந்திரங்களுள் காயத்தி மந்திரம் மிகவும் உயர்வானது, அதுபோல் கீதை மிக உன்னதமான ஞான பொக்கிஷம்'' என்கிறார்.

பகவத் கீதையானது வெறுமனே புத்தகம் மட்டுமல்ல பல மனிதர்களினை மாற்றியமைத்த உன்னதமான ஒரு நூலாகத் திகழ்கின்றது. ஆச்சாரியர் விநோபாபா, மகாத்மா காந்தி, திலகர் போன்றோர்கள் தேசிய இயக்கத்தில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு புண்ணியமான வாழ்க்கையினை நடத்தியமைக்குக் காரணம் இந்த பகவத் கீதைதான். ஆச்சாரியர் விநோபாபா கீதை பற்றி பின்வருமாறு, ''ஒரு குழந்தைக்கு தாய்ப்பாலானது எவ்வளவு நன்மையினை செய்கிறதோ அந்தளவிந்கு இந்த நூலானது எனக்கு துணை

செய்துள்ளது'' கூறுகின்றார். திலகரினை உன்னதமான கர்மயோகியாக மாற்றியமைத்தது இந்த ஞான நூலாகும்.

**அத்தியாயத்தின் நோக்கம்**

இதிகாசங்கள் பற்றி கற்கின்றபோது, இந்துக்களது புனித நூலாகப் போற்றப்படும் பகவத் கீதையின் சிறப்புக்களை ஒவ்வொரு உப தலைப்புகளுக்கும் ஊடாக மாணவர்களுக்கு எடுத்துரைப்பதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

பகவத் கீதை எனும் புனித நூல் பற்றி தெளிவாக அறிந்துகொள்வதுடன், அதன் கட்டமைப்புக்கள், பகவானின் அறிவுரைகள், ஆத்மாவின் உண்மையான நிலை, தர்மத்தின் அவசியம், மனித வாழ்வின் நோக்கம், இறைவனது திருவருள் போன்றவற்றினை இந்த அத்தியாயத்தினூடாக கற்றறிந்துகொள்ள முடியும்.

## 4.1 பகவத் கீதையின் கட்டமைப்பு

ஐந்தாம் வேதம் எனப்படும் பேரிலக்கியமான மகாபாரதத்தின் பீஷ்மர் பருவத்தில் 25 ஆவது அத்தியாயத்திலிருந்து 42 ஆம் அத்தியாயம் வரையிலான 18 அத்தியாயங்களில் 700 சுலோகங்களாக பகவத்கீதை விளங்குகின்றது.

பகவத்கீதையானது பக்தியோகம், கர்மயோகம், ஞான யோகம், இராஜ யோகம் என நான்கினூடாக விளக்கப்படுகின்றது. உபநிடதங்களின் சாரமாக விளங்குவதனால் இவை வேதாந்த மரபில் வந்த நூல் என்று கொள்வர். பகவத்கீதையில் கடவுள், பிரபஞ்சம், ஆன்மா, கன்ம மறுபிறப்பு, அறம் போன்ற தத்துவ சிந்தனைகளும் விளக்கப்பட்டுள்ளன.

கீதையினை 18 அத்தியாயங்களாக வகுக்கின்றனர். இந்த பதினெட்டு அத்தியாயங்களில் 6 அத்தியாயங்கள் மனிதனைப்பற்றியது. அதாவது மனிதனது வாழ்வியல் பற்றியது. ஏனையவற்றில் 6 அத்தியாயங்கள் பகவானைப் பற்றியது. அதாவது பகவானுடைய சொரூபம் பற்றியது. இந்த மனிதனுக்கும் பகவானுக்கும் இடையிலான தொடர்பினைக் காட்டுவது மூன்றாவதாக அத்தியாயத் தொகுதியாக காணப்படுகின்றது. ''தத்துவமஸி'' எனும் மகாவாக்கியத்தில்,

‘‘தத்’’ என்பது பகவானைக் குறிப்பது, அந்த பகவானுடைய இலட்சணங்கள் பற்றி கூறுவது 7 தொடக்கம் 12 வரையுள்ள அத்தியாயங்களாகும். 1 தொடக்கம் 6 வரையான அத்தியாயங்கள் மனிதனைப் பற்றிக் கூறுகின்றது. அதாவது மனிதனது நிலை, ஆத்மா பற்றிய இரகசியங்கள் பதில் விளக்கப்பட்டுள்ளன. இறுதி ஆறு அத்தியாயங்களும் எவ்வாறு இந்த ஆத்மா பரமாத்மாவாக மாறமுடியும் என்பதனை விளக்குகின்றது. தத் + துவம் + அஸி என மூன்றாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொன்றிற்குள்ளும் 6 அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டு 18 அத்தியாயங்களாக கீதை அமைக்கப்பட்டுள்ளது.

## 4.2 பகவத்கீதையின் தோற்றப் பின்னனி

மகாபாரதத்தில் பாண்டவர்க்கும் கௌரவர்களுக்கும் இடையே நடந்த போரில் அர்ச்சுணனது தேர்ச்சாரதியாக பகவான் கிருஷ்ணன் பணிபுரிந்தான் அப்போது கண்ணன் தனது தேரினை ஓட்டிக்கொண்டு வந்து எதிரிகள் படைக்கு எதிராக கொண்டு வந்து நிறுத்துகின்றான். அப்போது அத் தேரிலே கையில் காண்டீபத்தினை தாங்கிய வண்ணம் கம்பீரமான நிலையில் அர்ச்சுணன் காட்சியளிக்கின்றான்.

இவ்வாறு காட்சியளித்த அர்ச்சுணன் எதிர்ப்படைகளை உற்றுநோக்கிய போது ஒரு புறத்தில் அவனது குலமுதல்வனாகிய பீஷ்மரும் வேறோர் இடத்தில் அவனது குருவாகிய துரோணரும் பிறிதோர் இடத்தில் அவனது சகோதரர்களாகிய கௌரவர்களும் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் யுத்தத்திற்கு தயாராக நிற்பதை அவதானித்தான்.

இவர்கள் அனைவரையும் கண்ட அர்ச்சுணனது உள்ளத்தில் பல வினாக்கள் தோன்றியது. அதாவது தனது குரு முதலவராகிய பீஷ்மரையும் குருவான துரோணரையும் சகோதரர்களாகிய கௌரவர்களையும் உறவினர்களையும் கொல்வதனால் கிடைக்கும் லாபம் என்ன? அவர்களை கொல்வதனால் கிடைக்கும் இராஜ்யம் நிலையானதா? போன்ற வினாக்களுக்கு விடை காணமுடியாது தத்தளித்தான். சோகத்தினால் தனது அவனது கையிலிருந்த காண்டீபம் கைநழுவி கீழே விழுந்தது.

இத்தகைய சூழ்நிலையில் அர்ச்சுணனது கவலையை நீக்கவும் யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதற்கும் பகவான் கிருஷ்ணனால் அர்ச்சுணனுக்கு உபதேசிக்கப்பட்ட உபதேசமே பகவத்கீதையாக விளங்குகின்றது.

## 4.3 பகவத்கீதையில் தர்மம் பற்றிய சிந்தனை

பகவத்கீதையானது அறம் சார்ந்த கருத்துக்களை எடுத்துக்கூறி மக்களது வாழ்விற்கு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. இங்கு அறம் என்பது மேலான நெறி அல்லது செவ்விய நெறி அல்லது மேலான ஒழுக்கம் என்பதனை குறித்து நிற்கின்றது.பகவத்கீதையானது தர்மத்தை சுவதர்மம் எனக்கூறுகின்றது. சுவதர்மம் என்பது ஒரு குல தர்மமாகும். ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைச் செய்வதனைக் குறிக்கும். இவை வாழ்க்கைக்கு அவசியமான கடமைகளாகும்.

பகவத்கீதை செயலில் துறவினை ஒழுக்கமாக வலியுறுத்துகிறது. இதனையே பகவான் கிருஷ்ணன் அர்ச்சுணனுக்கு ‘‘கடமையைச் செய் பலனை எதிர்பாராதே’’ எனக் கூறியிருந்தார். நாம் ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளை திரிகரண சுத்தியுடன் ஆற்றவேண்டும் என்பதையே பகவத்கீதை வலியுறுத்துகின்றது. இதில் நிஷ்காமிய கன்மம் ஒரு வழிபாடாக காணப்படுகின்றது. இது ஆன்ம ஈடேற்றத்தினை பொறுத்த வரையில் வேத உபாசணைக்கும் மந்திர உபாசணைக்கும் ஞான நெறிக்கும் நிகரானதாக கருதப்படுகின்றது.

நாம் ஒரு கடமையினைப் பொறுப்பேற்றால் அதிலிருந்து சிறிதளவேனும் பின்வாங்கலாகாது என்பதனை பகவத்கீதை வலியுறுத்துகின்றது. நாம் ஆசைக்கு அடிமையாகுதல் ஆகாது, கடமையை கடமையாகவே செய்ய வேண்டும், வெற்றியினையும் தோல்வியினையும் நிகராகக் கருதவேண்டும் எனவும் கூறியிருந்தது. பகவத்கீதையில் தர்மம் வெல்லும் ஆனால் அதர்மம் என்றோ ஒருநாள் அழியும் எனும் கருத்து வலியுறுத்தப்பட்ட அதேவேளையில் உலகிலே தர்மமானது அழிந்து அதர்மமானது தலைதூக்கும் போது தர்மத்தை காத்து அதர்மத்தை அழிக்க இறைவன் யுகங்கள் தோறும் அவதாரமெடுப்பார். எனும் சிந்தனை முன்வைக்கப்பட்டிருந்தன.

## 4.4 பகவத்கீதை கூறும் தத்துவ சிந்தனைகள்

தத்துவ சிந்தனையில் பகவத்கீதை முக்கியமான இடத்தினை வகிக்கின்றது. பகவத்கீதையிலுள்ள 18 அத்தியாயங்களும் உபநிடத மகாவாக்கியமாக ‘‘தத்துவம்

அஸி'' என்னும் மகா வாக்கியத்திற்கு விளக்கம் வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வகையில் முதல் ஆறு அத்தியாயங்களும் ''துவம்'' என்னும் ஆன்மா பற்றியும் அடுத்த ஆறு அத்தியாயங்களும் ''தத்'' எனும் பிரமம் பற்றியும் இறுதி ஆறு அத்தியாயங்களும ் ''அஸி'' என்னும் பொருளுடைய பிரமத்திற்கும் ஆன்மாவிற்கும் இடையிலான தொடர்பு பற்றி கூறுவதாக அமைந்திருந்தது.

### 4.4.1 ஆன்மா

பகவத்கீதை காட்டும் ஆன்மா உண்மைப்பொருள், எண்ணிறைந்தது. அது கொல்வதுமில்லை கொல்லப்படுவதுமில்லை அதாவது ஆன்மா அழிவற்றது என்று கொள்ளப்படுகின்றது. அத்துடன் சரீரத்தில் இருந்து வேறுபட்ட ஒன்றாக காணப்படுகின்றது. ஆன்மாவானது தீயிலே எரியாது, மழையிலே நனையாது, குளிரிலே நடுங்காது, நரை, திரை, மூப்பு, இறப்பு என்பவை எதுவுமே ஆன்மாவை பீடிப்பதில்லை என்றும் கூறப்படுகின்றது. இவ்வகையில் கிருஷ்ணர் அர்ச்சுணனுக்கு ஆன்மாவின் இயல்பு பற்றி மேல்வருமாறு போதிக்கின்றார்.

**"ஆத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை இல்லாமல் இருந்து புதிதாக உண்டாகி விடுவதுமில்லை. உண்டாகிய பின்பு அது அழிந்து போவதும் இல்லை இவ்வாறு பிறப்பற்ற அந்த ஆன்மா மரணமடைவதில்லை"** என்று கூறுகின்றார். - இவ்வாறான ஆன்மா ஸ்ரீமத் நாராயணன் வீற்றிருக்கும் வைகுண்டத்தை அடைந்து கொள்ளுதல் அவனுடைய பாதார விந்தங்களை சரணாகதி அடைதல் முக்திநிலை என்று கூறப்படுகின்றது. இம்முக்தி நிலையை அடைவதற்கு கீதை கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், இராஜயோகம் ஆகிய நான்கும் வழியாக அமைகின்றது. - கர்மயோகத்தில் நிஷ்காமிய வழிபாடும் பக்தியோகத்தில் பிரபக்தி வழிபாடும் ஆன்ம விடுதலையை மிகையாக கூட்டுவிக்கும் என்று கீதை கூறுகின்றது.

### 4.4.2 கடவுள்

உபநிடதங்கள் பிரமத்திற்கு அளித்த முக்கியத்துவத்தினை பகவத்கீதை விஷ்ணுவிற்கு அளித்துள்ளது. விஷ்ணுவே பிரமம் என்று கூறுகின்றது. - பகவத்கீதை காட்டும் பிரமம் உண்மைப்பொருள், பரிபூரணமானது, அநாதியானது, தவறான வழியில் செல்லும் ஆன்மாக்களினை தடுத்து நிறுத்தி நேரிய வழியினைக் காட்டும் இப் பிரமத்தின் உள்ளேயே பிரபஞ்சத்தின் உற்பத்தி, இயக்கம், ஒழுக்கம் என்பன நிகழுகின்றன.

**“நானே பிரமம் நானே உலகம் நானே அனைத்திலும் நிறைந்துள்ளேன் உன்னை இயக்கும் சக்தியும் நானே உன் செயலானது ஒன்றும் இல்லை அனைத்தும் என்செயலே”** என்ற கிருஷ்ணரின் உரைகளில் இருந்து பரம்பொருளின் இயல்பினை அறிந்து கொள்ள முடியும்.

கீதையில் வரும் பத்தாம், பதினொராம் அத்தியாயங்கள் கடவுள், ஆன்மா, பிரபஞ்சம் ஆகிய மூன்று தத்துவத்தினையும் விளக்கி காட்டுகின்றது. பத்தாம் அத்தியாயத்திலே **“பிரபஞ்சத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் நானே காரணம்”** என்றும் பதினொராம் அத்தியாயமாகிய விஷ்பருபதரிசனத்திலே என்று கூறப்படும். கருத்துக்களும் கீதையில் மிக ஆழமான தத்துவங்களாகும்.

காற்று, கடலலை, சூரியன், சந்திரன், கோள்கள் என்பன பிரமத்தினாலே இயங்குகின்றன. - பிரபஞ்சத்தை அவதானிப்பவரும் கட்டுப்படுத்தபவரும் அவரே (பிரமம்). இவ்வாறு விளங்கும் பிரமம் உலகிலே தர்மமானது அழிந்து அதர்மமானது தலைதூக்கும் போது தர்மத்தை காத்து அதர்மத்தை அழிப்பதற்கு யுகங்கள் தோறும் அவதாரம் எடுக்கின்றது என்று பகவத்கீதை கூறுகின்றது.

### 4.4.3 பிரபஞ்சம்

பகவத்கீதை காட்டும் பிரபஞ்சமானது உண்மைப்பொருள், சடப்பொருள் என்று பகவத்கீதை கூறுகின்றது. பிரபஞ்சமானது நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆனது. ஆன்மாக்கள் தனது கன்மங்களை அனுபவித்து ஈடேற்றம் பெறுவதற்கு பிரபஞ்சம் நிலைக்களமாக அமைகின்றது. உயிரினங்கள் இல்லாது போனால் பிரபஞ்சம் தேவையில்லாத பொருளாகி போய்விடும் என பகவத்கீதை வலியுறுத்துகின்றது.

இவ்வாறு தத்துவ சிந்தனைகளை கூறும் பகவத்கீதை பிற்கால தத்துவ வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்திருப்பதனை காணுகின்றோம். இதற்கு சான்றாக பகவத்கீதையினைப் பிரமாண நூலாகக் கொண்டு சங்கரர் கேவலாத்துவைதத்தினையும் ராமானுஜர் விஷிட்டாத்துவைதத்தினையும் மத்துவர் துவைதத்தினையும் அருளியிருந்ததினைக் கூறலாம். குறிப்பாக இராமானுஜர் பகவத்கீதைக்கு ‘‘கீதாபாஷியம்’’ எனும் உரை எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. வேதம் பசு அதன் பால் உபநிடதம் பாலிலிருந்து தெளிந்த வெண்ணெய் கீதை என்று பலராலும் வர்ணிக்கப்படுகின்றது. இம் மரபானது கீதை வேதாந்த மரபில் வந்த நூல் என்பதை காட்டுகின்றது.

## 4.5 வைணவ சமய வளர்ச்சி

வைணவ சமயக்கோட்பாட்டில் பகவத்கீதை பெறும் முக்கியத்துவம் பற்றி நோக்கும் போது இந்நூலானது வேதாந்த மரபில் வந்த நூலாக விளங்கிய போதும் அது பாகவதம் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பகவானின் பரத்துவம் பற்றிக் கூறுகின்றது. வைணவ சமய வளர்ச்சிக்கு பாகவதமே மூலாதாரமாக அமைகின்றது. பகவானை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்களே பாகவதர்கள் எனப்பட்டனர். இவர்கள் கிருஷ்ணரை தெய்வ அம்சம் கொண்டவராக கருதினர். இதனால் கிருஷ்ணரின் போதனையாக விளங்கும் பகவத்கீதை வைணவ மரபிலே முக்கிய இடம் வகிக்கின்றது. வேத இலக்கியங்களைத் தொடர்ந்து வைணவக் கருத்துக்களை பரப்பும் வகையில் பகவத்கீதை முதன்மை பெற்றிருந்தது. சிறப்பாக இது வேதங்களுக்கு பிந்திய காலத்தில் ஏற்பட்ட வைணவ வளர்ச்சியை பிரதிபலிப்பதோடு அவற்றை வைணவ பக்திநெறி கனிந்த நிலையில் பிரதிபலித்திருந்ததை காணுகின்றோம். பகவத்கீதை ஆன்மிக அனுபவங்களைப் பெறுவதற்கு வழிகளாக கர்யோகம், பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம் எனும் நால்வகை யோகங்களை எடுத்துக்காட்டுகின்றது.

1. கர்மயோகம் - செயல்வழி ஊடாக இறைவனை அடைதல் எனலாம். இது பற்றின்றி கடமை புரிதல், செயலில் துறவு, நிஸ்காமிய கன்மம் என்பவற்றைக் குறிக்கின்றது. இங்கு கடமை என்பது ஒழுக்கமாகக் கருதப்படுகின்றது.
2. பக்தி யோகம் - அன்பு வழிபாடாகும். இது பக்தி கனிந்த நிலை. வைணவ சமயத்தில் சொல்லப்பட்ட பூரண சரணாகதி என்னும் பிரபக்தி ஞானத்தின் அடிப்படையாக விளக்கப்பட்டுள்ளது.
3. ஞானயோகம் - அறிவு வழியாக இறைவனை அடைதல் ஆகும். இது நான் வேறு பிரமம் வேறு அல்ல என்பதை உணரும் நிலையாகும்.
4. இராஜ யோகம் - இயமம், நியமம், தாரணை முதலான அட்டாங்க யோகம், லகிமா கரிமா முதலான அட்டமாசித்தி என்பவற்றினூடாக இறைவனை அடைதல் இந்நிலையாகும்.

பகவத்கீதையானது திருமாலின் ஐவகை நிலைகளாகிய பரம், வியூகம், விபவம், அர்ச்சம், அந்தர்யாமித்துவம் எனும் ஐவகை நிலைகளை கூறியிருந்தது. மகாவிஷ்ணுவின் அவதாரம் பற்றிக் குறிப்பிடும் போது உலகிலே தர்மமானது அழிந்து அதர்மமானது தலைதூக்கும் போது தர்மத்தை காத்து அதர்மத்தை அழிக்க இறைவன் யுகங்கள் தோறும் அவதாரம் எடுப்பார். எனும் சிந்தனை வலியுறுத்தப்பட்டுள்ளது.

தசாவதாரத்தில் கிருஸ்ண அவதாரமே இங்கு சிறப்பித்து சொல்லப்பட்டிருந்தது. பரமாத்மாவினால் ஜீவாத்மாவிற்கு உபதேசிக்கப்பட்ட பகவத்கீதையானது இந்து சமய நெறிகளுக்கிடையே பொதுமையினை வலியுறுத்தும் பாங்கில் அமைந்திருந்தமை வைணவ வளர்ச்சியில் அல்லது வைணவ சம்பிரதாயத்தில் பகவத்கீதை பெறும் முக்கியத்துவத்தை காட்டுகின்றது.

## 4.6 பகவத் கீதையில் வெளிப்படுத்தப்படும் மனித வாழ்வின் இறுதி இலக்கு

வீடுபேற்றினை அடைவது என்பது தளைக்குட்பட்ட அல்லது அறியாமையின் பாற்பட்ட உயிர்கள் அதனின்றும் நீங்கி தமது உண்மையான இயல்பினை அடைவதாகும். அதுவே தன்னையுணர்தல் எனப் பொதுவாகப் பேசப்படுகின்றது. வீடுபேற்று நிலையினை தத்துவங்கள் பல்வேறாகக் கூறுகின்றன. அவ்வகையில் வீடுபேறு என்பதே மனித வாழ்க்கையின் இறுதி இலக்கு ஆகும். அதனடிப்படையில் பகவத் கீதையில் இறுதி இலக்கு பற்றி குறிப்பிடுவதனை இனி அவதானிக்கலாம். பகவத் கீதையில் நான்கு யோகங்களும் ஒன்றை விட ஒன்று மேலானது எனக் கூற இயலாதபடி அனைத்து யோகங்களையும் சமமாகக் காட்டுவது கீதையின் சிறப்பாகும். இவை நான்கும் ஒரே காலத்தில் சேர்ந்து கடைப்பிடிக்கப்படும் போது வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறுவதாகக் கீதை கூறுகின்றது.

மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழும் தன்னலமற்றசேவை மார்க்கமே கர்மயோகம் இதன்வழி பற்றின்றி செயல்களை ஆற்றும் நிலையில் ஆன்மா முத்தியின்பத்தினை அடையும் இதனையே கிருஷ்ணர், ‘‘பற்றின்றி பெருவினை ஆற்று அவ்வாறு செயல் புரிபவன் பெரு நிலையினை அடைகின்றான்’’ என்று கர்ம யோகத்தில் எடுத்துரைக்கின்றார்.

மோட்ச நிலைக்கும், ஒப்பற்ற இன்பத்திற்கும் பரமாத்மாவே காரணம் எனவே பரமாத்மாவை அடைந்தவர்கள் மறுபிறவியை அடைவதில்லை. பரமபதம் என்பது இந்த உலகைப்போன்ற ஓர் இடமல்ல எனக் கீதை கூறுகின்றது. அது அமைதியான, பேரின்பமான மனநிலையே ஆகும். இதனையே சித்தாந்திகள் சத், சித், ஆனந்தம் (உண்மையான உள்ளார்ந்த பேரின்பம்) என்று கூறப்படுகின்றது. அதனடிப்படையில் அமைதிநிலைதான் பிரம்ம நிலை என்கிறது கீதை. இதனை ‘‘ இதுவே பிரம்மநிலைபேறு ஆகும். இதனை அடைபவனுக்கு மோகமில்லை. இறுதிக்காலத்திலாவது இதில் நிலைத்திருப்பவன் பிரம்மநிர்வாணத்தினை அடைகின்றான்’’ எனும் சுலோகம் எடுத்துரைக்கின்றது.

இறுதிக்காலத்தில் பரமாத்மாவை நினைத்தபடி இறப்பவன் பரமாத்மாவின் இயல்பை எய்துவான். ஏனெனில் இறக்கின்ற தருவாயில் ஒருவன் எதை நினைப்பவனாய் இருக்கிறானோ அதுவாகவே வடிவெடுப்பான் எனக் கீதை கூறுகின்றது. இதனை, ‘‘மரணக்காலத்திலும் என்னையே நினைத்துக்கொண்டு உடலைத்துறந்து யார் போகின்றானோ அவன் என் சொரூபத்தினை அடைகின்றான் என்றும் இறுதிக்காலத்தில் எப்பொருளை எண்ணிக்கொண்டு ஒருவன் உடலை உகுக்கின்றானோ எப்பொழுதும் அப்பொருளைப் பாவிப்பவனாகிய அவன் அதையே அடைகின்றான்’’ எனக் கீதை எடுத்துரைக்கின்றது.

பிறப்பு, இறப்பு என்ற பிணைப்பிலிருந்து விடுபட்டு, பரமாத்மாவை அடைந்து பரமானந்தத்தில் திளைப்பதுதான் முத்தி அல்லது இறுதி இலக்கு எனப்படும். மரணகாலத்திலும் பரமாத்வை எண்ணிக்கொண்டிருக்கும் ஆத்மாக்கள் அவரை அடைகின்றனர். அவ்வாறு ஆன்ம விடுதலை அடைந்துவிட்ட ஆன்மாக்கள் மறுபிறவி அடைவதில்லை. இதனை,

‘‘மிக உயர்ந்த சித்தியை அடைந்த மகாத்மாக்கள்
என்னை அடைந்த விட்ட பிறகு துன்பங்களுக்கு உறைவிடமானதும்
நிலையற்றதுமான மறுபிறவியை அடைவதில்லை’’

எனும் வரிகள் விளக்குகின்றன.

ஆன்ம விடுதலைக்கு வர்ணப்பாகுபாடு தேவையில்லை. பகவானை தஞ்சமடையும் எவராயினும் மோட்சத்தினைப் பெற்றக் கொள்ள முடியும். ‘‘பார்த்தா! பெண்கள், வைசியர், சூத்திரர் என்று எவ்வகையானவரும் என்னையே தஞ்சமடையும் மேலான மோட்சத்தைப் பெறுகின்றார்கள்’’ என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பக்தி மூலம் இறைவனை வழிபடுபவர்களும் பலன் கருதாது கடமை புரியும் கர்ம யோகிகளும் ஆன்ம விடுதலையைப் பெற்றுக் கொள்கின்றனர். இதனை,

‘‘பக்தி மூலம் ஒருவன் என்னை உள்ளபடி அறிகின்றான். அப்படி என்னை அறிந்து
கொண்டவன் அக்கணமே என்னில் ஐக்கியம் அடைகின்றான்’’

எனவும்,

‘‘என்னைச் சரணடையும் கர்மயோகி எப்போதும் எல்லாக் கர்மங்களையும் செய்த
போதும் எனதருளால் நிலையா என்றுமுள்ள பரமபதத்தினை அடைகின்றான்’’

என்று கீதையானது புலப்படுத்துகின்றது.

அகந்தை, மமதை, பற்று, காமம் இன்றி பரமாத்மாவின் சொரூபத்தில் நிலை பெற்றவன் பரமானந்தம் அடைகிறான் என பகவத்கீதை கூறுகின்றது. ஆன்ம விடுதலை பற்றி விளக்குகவதில் பகவத்கீதை மேலான இடத்தை பெறுகின்றது. வாழ்க்கையின்குறிக்கோள் ஆன்ம விடுதலை என்பதை இது நன்கு தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறு பற்றற்று செயல் புரிதல், ஆன்மாவை பிரம்மம் என அறிந்து கொள்ளல், புலன்களை மட்டுப்படுத்தி பரமாத்மாவில் நிலை பெறுதல் போன்றவற்றின் மூலம் ஆன்ம விடுதலையை பெறமுடியும் எனக் கிருஷ்ணர் தனது உரையாடலில் கூறியுள்ளார்.

பரமாத்மா மீது பக்கி செலுத்துவதே இறைவனை அடைவதற்கான வழி என்பதை கீதை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் குறிப்பிடுகையில் **“மனதை என்னிடத்தில் வைத்து, என்பால் பக்தி பண்ணி என்னையே வணங்கு. என்னைக் குறியாகக் கொண்டு, உள்ளத்தை உறுதிப்படுத்தி என்னையே அடைவாய்”** (ராஜயோக சுலோகம் 34) எனவும்,

**“என்னிடத்தில் மனதை வைத்து, என்னிடத்து பக்கியை செலுத்துக, பின்பு என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகம் இல்லை”** (பக்தி யோகம் : சுலோகம் - 8) எனவும் பக்கி மூலம் பரமாத்மாவை அடைவது பற்றி குறிப்பிடுகின்றது. ஆசைகளை அகற்றி புலன்ளை ஒடுக்கி இன்ப துன்பங்களை சமனாக மதிப்பவனே முற்றறிஞன் இத்திறன் கைவரப்பெற்றவன் சாந்தியடைகிறான். அதுவே பிரம்ம நிலைபேறாகும். என கீதை கூறுகின்றது.

மேலும், பகவத்கீதை குறிப்பிடும் முத்தி பற்றி நோக்குமிடத்து, கீதை இரண்டாம் அத்தியாயம், இரண்டாம் சுலோகத்திலே முத்தி பற்றி கூற ஆரம்பித்து அவ்அத்தியாயத்தின் இறுதிச்சுலோகமே மனிதன் அடைய வேண்டிய இறுதி இலட்சியம் என்ன என்பதைக் கூறுகின்றது. அந்த இலட்சியமே ‘‘பிரம்மநிர்வாணம்’’ என்று கீதை அறுதியிட்டுக்கூறுகின்றது. அதுவே பிரம்ம நிலைபேறு, மனம் வாக்குக்கு எட்டாத பேரானந்தப்பெருநிலை, இந்தப்பெரு நிலையை அடைந்தவனே மேலான சுகமடைகிறான் என கீதை விளக்குகின்றது. தியான யோகத்தில் ஒரு சுலோகம் இந்த மேலான சுகம் பற்றி இவ்வாறு கூறுகின்றது. ‘‘மிகச் சாந்தமான மனத்தையுடைய, ரஜோகுணத்தின் வேகம் தணிந்த, பாவமற்ற, தானே பிரம்மமான யோகிக்கே கிட்டுகிறது.’’

பகவத் கீதையில் முத்தியடைவதற்கான வழிகளென கர்மயோகம், ஞான யோகம், தியான யோகம், பக்தியோகம் போன்றன கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஏதாவது ஒருவழியைப் பின்பற்றுவதன் மூலம் முத்தி அடையலாம். பிறவாப் பெருநிலையினை கர்மயோகத்தினால் பெறலாம் எனக் கீதை கூறுகின்றது. இதனை, ''பற்றற்றுப் பண்புடன் பெருவினையாற்றுக ஏனெனில் பற்றின்றி தொழில் புரியும் புருஷனே பெருநிலையைப் பெருகின்றான்'' எனக் கூறுகின்றது.

## 4.7 பகவத் கீதையில் அட்டாங்க யோகம்

கீதையில் உள்ள பதினெட்டு அத்தியாயங்களுள் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒவ்வொரு யோகம் என்றவகையில் அமைகின்றது. மனத்தின் பண்பாடு யோகமாகின்றது. பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள யோக நெறிகள் திருமூலரும் பதஞ்சலியும் கூறும் அட்டாங்க யோகத்தில் வருகின்ற இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலியவற்றின் விளக்கமாக அமைகின்றது.

பதினெட்டு அத்தியாயங்களில் உள்ள பதினெட்டு யோகங்களையும் மேலும் தொகுத்து நான்கு யோகங்களில் அடக்கிக் கூறுகின்றது. கர்ம யோகம், ஞான யோகம், ராஜ யோகம், பக்தி யோகம் என்பவை அந்த நான்கு யோகங்களாகும். இந்த நான்கு யோகங்களையும் அரும்பு, பிஞ்சு, காய், கனி எனப் பொருள்படுத்துவர். கீதையில் இந்த யோகங்களை கிருஷ்ணர் வேறுபடுத்திக் கூறவில்லை.

**இயமம்**

இயமம் என்பது அனைவரும் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் ஒழுக்க பண்புகளாகும். கீதையில் இரண்டாவதாக இடம்பெறும் சாங்கிய யோகம், சிரத்தாத்ராய விபாக யோகம் போன்றன மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய கர்மங்களை எடுத்துரைக்கின்றது.

''செயலில் ஈடுபடுவதே ஒருவனுடைய கடமையாகும். பலனை எதிர்பார்த்து செய்யும் பணி கடமையாகாது. வெற்றியையும் தோல்வியையும் சமமாகக் கருத வேண்டும். பற்றின்றி செயற்படும்போது தான் மனதினில் சலனமும் கவலையும் ஏற்படாமல் இருக்கும். இத்தகைய அடைந்தவனே யோகி அவனே உயர்ந்தவன்'' (31வது சுலோகம்).

இவ்வாறு பல்வேறு வகையில் மனத்தினைக் கட்டுப்படுத்தும் பல நெறிகள் பற்றி இரண்டாவது அத்தியாயம் விளக்கம் தருகின்றது. மனதினை பயிற்சியின் மூலம் கட்டுப்படுத்தலாம் இந்தப் பயிற்சிதான் யோகம் என்று கீதை குறிப்பிடுகின்றது. பதினேழாவது அத்தியாயத்தின் 27 – 28 வரையான சுலோகங்கள் மனிதன் நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியற் நெறிகளை புலப்படுத்துகின்றன.

**நியமம்**

தானம், தவம் முதலியவற்றால் இடையறாது இறைவனை வணங்கி நற்பண்புகளைப் பெறுதலே நியமமாகும். செயலில் ஈடுபடாமல் இருப்பதினாலும் செயலைக் கைவிடுவதினாலும், ஞானத்திற்கு தேவையான முழுமையை ஒருவன் அடைய முடியாது. ஐம்பொறிகளையும் செயலில் ஈடுபடுத்தாமல் அவற்றை முடக்கிவிட்டு தனக்கு ஞானம் கிட்டிவிட்டது என்று சொல்வது வெறும் பாசாங்காகும். ஒரு பொருளை அடைந்தாக வேண்டும் என்று அதன் மீது பற்று வைக்காமல் செயலில் ஈடுபடுபவனே உயர்ந்த ஞானத்தை படிப்படியாக பெறமுடியும். ஒவ்வொரு மனிதனும் தனக்கு விதிக்கப்பட்ட வேலையை செய்வதே செயல் ஆகும். இந்தக் கடமையைச் செய்வதிலிருந்து மனிதன் தவறக் கூடாது. கடமை வேள்விக்கு ஒப்பானது. என்று இறைவன் குறிப்பிட்டு அனைவரும் கடமையாற்ற வேண்டும் என்று நியமத்தை வலியுறுத்துகிறார்.

**ஆசனம்**

யோகம் புரிவதற்குக் கால், கை உள்ளிட்ட உடல் உறுப்புக்களைத் தக்கவாறு அமைத்துக் கொண்டு அமர்ந்திருக்கும் முறையினை இது குறிக்கும். கீதையின் தியான யோகம் மற்றும் ஏழாவது அத்தியாயமான ஞானவிஞ்ஞான யோகமும் தெளிவுறுத்துகின்றன. யோகப்பயிற்சியின் போது உடலை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அப்போது செய்பவரது ஆசனம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதும் தியான யோகத்தில் வரும் சுலோகங்கள் விளக்குகின்றன.

அந்தவகையில் ‘‘தேகம், தலை, கழுத்து இவைகளை நேராக அசையாது வைத்துக் கொண்டு உறுதியாயிருந்து தன் நுனியினைப் பார்ப்பவன் போன்று திசைகளைப் பாராதிருத்தல் வேண்டும் எனவும் உள்ளம் அமைதி பெற்று, அச்சத்தை அகற்றி, பிரம்மச்சாரிய விரதம் காத்து, மனதை அடக்கி, சித்தத்தை என்பால் இசைத்து, என்னைக் குறியாகக் கொண்டு யோகத்தில் அமர்ந்திருக்க வேண்டும்’’ என்றுஆசன முறைகள் பகவத்கீதையில் விளக்கப் பெறுகின்றன.

**பிராத்தியாகாரம்**

பிரத்தியாகாரம் என்பது புலன்களால் பெறப்படும் புலனுகர்வு அனுபவங்களை ஞானேந்திரியங்கள் மனதிற்குள் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தி, மனதினைக் கட்டுப்படுத்தும் பயிற்சியாகும். ஏழைவது அத்தியாயமாகிய ஞானவிக்ஞான யோகம், எட்டாவது அத்தியாயமாகிய ராஜவித்யாராஜகுஹ்ய போன்றவை எடுத்துரைக்கப்படுகின்றன.

‘‘பொறிவாயில் யாவையும் அடக்கி மனதை இருதயத்தில் நிறுத்தி தன் பிராணனை உச்சந்தலையில் வைத்து யோக தாரணையில் நிலைத்திருந்து ஓம் என்கிற ஏகாட்ஷரமாகிய பிரம்ம மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு என்னை நினைத்துக் கொண்டு யார் உடலை நீத்துப் போகிறானோ அவன் பரமகதியைப் பெறுகின்றான்’’ என்று மனதினை நிறுத்தும் பயில்முறைகளை பகவத்கீதையானது இவ்வத்தியாயங்களில் எடுத்துரைக்கின்றது.

**தாரணை**

தாரணையாவது தரிக்கச் செய்தல் எனப்படும். அதாவது புறத்தே புலன்களின் வாயிலாக திரிகின்ற மனதினை அடக்கி ஒரே குறியில் நிலைபெறச் செய்தல். மனதினை ஆதாரங்களில் தொடர்ந்து நிலைபெறச் செய்வதாகும். இத் தாரணையானது பகவத் கீதையின் அனைத்து அத்தியாயங்களிலும் விபரிக்கப்பட்டுள்ளது.

‘‘வேறு எண்ணமின்றி யார் என்னை நெடிது இடையறாது நினைக்கின்றானோ அந்த ஒரு நிலைப்பட்ட யோகிக்கு நான் எளிதில் அகப்படுகின்றேன்’’ எனவும் ‘‘உடலை விட்டு பிரியும்போது என்னை வந்தடைகின்றான் இதில் சந்தேகம் எதுவும் இல்லை’’ அத்துடன் ‘‘வேறு எதையும் எண்ணாத யோகத்தால் என்னிடம் தளர்வில்லாத பக்தியினை செலுத்துதல், தனியிடத்தை நாடுதல், ஜனக்கூட்டத்தில் விருப்பமின்மை, ஆத்ம ஞானத்தில் நிலைபேறு, உண்மைப் பொருள் ஆராய்ச்சி இவையாவும் ஞானமாகும்’’.

இவையாவும் சேத்திர சேத்திர ஞாவிபாக யோகத்தில் கீதை குறிப்பிடுகின்றது. மனதை ஒரு நிலைக்க வைத்து யோக முத்தி பெறலாம் என கீதை வழிகாட்டுகின்றது.

**தியானம்**

தியானமானது ஒன்றையே நினைத்திருத்தல் குறிப்பதாகும். ஐம்புலன்களையும் புத்தியையும் நீங்கி நிற்கும் நிலையே தியானம் எனப்படும். கீதையின் ஆறாவது அத்தியாயமாகிய தியான யோகம் யோகத்தினை எவ்வாறு தியானமாக மாற்றுவது என்பதனை விபரிக்கின்றது.

''அளவு கடந்து உண்பவனுக்கு யோகமில்லை. அறவே உண்ணாதவனுக்கும் யோகமென்பது இல்லை. மிகையாக உறங்குபவனுக்கும் மிகையாக விழித்திருப்பவனுக்கும் யோகம் இல்லை. மிதமாக உண்டு உடற்பயிற்சி செய்பவனுக்கு அளவுடன் கர்மங்களைச் செய்து உறக்கத்திலும் விழிப்பிலும் முறைமை வகிப்பவனுக்கும் யோகம் துன்பத்தினை துடைக்கின்றது.

என்று தியானத்தின் வாயிலாக இறைவனை நெருங்க இயலும் என்று இவ்வத்தியாயத்தின் ஊடாக கீதை குறிப்பிடுகின்றது. பந்த பாசங்கள் வலையாகப் பின்னியிருந்த போதிலும் பற்றற்ற செயல்களின் வாயிலாக இக்கட்டுக்களிலிருந்தும் வெளியேறும் பக்குவத்தை ஞானி அடைகின்றான் எனத் தியான யோகமானது எமக்குத் தெளிவாகின்றது.

**சமாதி**

சமாதியானது உயிரும் இறைவனும் இரண்டற ஒன்றி நிற்றலாகும். இயமம் முதலாகவுள்ள படிகளின் முறையே பயின்று வந்தால் சமாதி நிலையை அடைய முடியும். குணத்ரய விபாக யோகம் (14வது அத்தியாயம்), புருஷோத்தம யோகம் (15 வது யோகம்), தெய்வாஸ்ர ஸம்பத் விபாக யோகம் (16வது அத்தியாயம்), மோசக்ஷ ஸந்யாஸ யோகம் (18வது அத்தியாயம்) முதலிய அத்தியாயங்களில் சமாதி பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சத்துவம், ராஜஸம், தாமஸம் என்னும் மூன்று கணங்களினால் மனிதன் ஆளப்படுகின்றான். இவற்றைக் கொண்டுதான் மனிதன் முதல், இடை, கடை என்று வரிசைப்படுத்துகிறான. சத்துவ குணம் கொண்டவன் உத்தமன் என போற்றப்படுகிறான். அன்பு, அருள், ஈகை போன்றவை இவனிடம் நிரம்பிக் கிடக்கும். ராஜஸம் குணம் கொண்டவன் எல்லா சுகங்களையும் அனுபவிக்க ஆசைப்படுபவன். இந்தக் கணம் கொண்டவன் அடுத்தவரின் பொருளை கவர்வது தவறு என்று எண்ணமாட்டான். தன்னிடம் இருப்பதைக் கொண்டு அவன் திருப்தியடைவதில்லை பிறரது பொருளைப் பொருளைப் பறிக்கும் தொழிலில் துணிந்து இறங்குவான். இடை பட்டவனாகக் கருதப்படுகிறான். தாமஸகுணம் கொண்டவன் சோம்பலின் சின்னமாக

இருப்பவன். நல்லுரைகளைக் காதில் போட்டுக் கொள்மாட்டான். நற்செயல்களில் ஈடுபடமாட்டான். ஈடுபடுவது கடமை என்று உணர்த்தப்பட்டாலும் எதையும் செய்யாது காலத்தை வீணாகப் போக்குபவன். எனவே இவன் கடையனாக கருதப்படுகிறான்.
சத்துவ குணம் அறிவைக் கொடுக்கும் ராஜஸம் ஆரையைத் தூண்டும். தாமஸம் இருட்டில் தள்ளும். எனவே சத்துவ குணமுடையவன் இறைவன் அடைவான். ராஜஸ குணத்தினை உடையவன் மறுபடியும் பிறப்பும், இறப்புமாகிய சக்கரத்தில் சிக்கித் தவிப்பான். தாமஸ குணத்தினன் அறிவில் கேவலமான செயல்களில் ஈடுபடும் பிறவிகளைப் பெறுவான்.

வாழ்நாளில் அறிவைத் திரட்டும் மனிதன் தான் கடவுளுடன் கலக்கவும் முடியும். அதாவது சமாதி நிலையை அடைய முடியும். அவன் தான் உத்தமன் ( 14 வது அத்,5 -18 சுலோகங்கள்).

பிறப்பிலிருந்து விடுபட்டு இறைவனுடன் கலப்பதே மனிதனின் இலட்சியமாகும். இதுவே பிறவியின் பயனாகும் ஞானம் அடையாத மனிதனால் இறைவனை அடைய முடியாது (15 அத்) என இவ்வத்தியாயம் எடுத்துரைக்கிறது. மனிதன் தெய்வம்சமாக மாறி இறைவனுடன் கலத்தல் வேண்டும் என்பதை 16, அத்தியாயத்தின் 7-18 வரையிலுள்ள சுலோகங்கள் தெளிவுறுத்துகின்றன.

கீதையின் 18வது அத்தியாயம் சமாதி நிலையாகிய கடவுளுடன் இரண்டறக் கலக்கும் வழியை எடுத்துரைக்கிறது “ எல்லாவற்றுக்கும் காரணம் அவனே என்று பாரத்தைக் கடவுளின் மீது போட்டு விட்டு மனிதன் கடமையை செய்ய வேண்டும். இதை உணர்வதுதான் அறிவு. இதுவே கடவுளுடன் ஆத்மாவைக் கலக்க வைக்கும் நெறி இதை அறிந்தவதான் இரகசியத்தை அறிந்தவன் ஆகிறான்.

பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்பவனே கடவுளை நெருங்க முடியும். ஏனென்றால் அவன்தான் இறைவனின் விருப்பத்துக்கு உரியவனாகிறான்” ( 18,74-78) என்று அட்டாங்க யோகத்தின் சமாதி நிலையை கீதை நன்கு எடுத்துரைக்கின்றது.

இவ்வாறு பகவத்கீதையானது சமய நூலாக மட்டுமின்றி மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் யோக நுலாகவும் விளங்குவது போற்றுதற்குரியது பகவத்கீதை நம் உள்ளத்தையும், உடலையும் வளப்படுத்தும் உன்னத வாழ்க்கை நூலாகவும் சமயச் சார்பின்றி அனைவரும் கற்போம் வலிமையான உடல் மற்றும் உள நலத்தைப் பெற்று வாழ்வோம்.

**பயிற்சி வினாக்கள்**

1. இந்துத் தத்துவ மரபில் “ஸ்ரீமத் பகவத்கீதை” பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.
2. ஸ்ரீமத் பகவத்கீதையில் இடம்பெறும் தத்துவக் கருத்துக்களின் சிறப்பினை ஆராய்க.
3. பகவத் கீதையின் கட்டமைப்புக்களை விளக்கி, கீதையின் சிறப்புக்களையும் எடுத்துரைக்குக.
4. வைணவ சமயம் பெற்றிருந்த செல்வாக்கினை பகவத்கீதையின் துணை கொண்டு ஆராய்க.
5. பகவத் கீதையின் துணைகொண்டு,
   அ. தோற்றப் பின்னனி
   ஆ. தர்மம்
   இ. கர்மயோகம்
   போன்றவற்றினை விளக்குக.

**உசாத்துணைகள்**


*மாகாதேவன், ரி. எம் .பி., (2001), இந்து சமயத் தத்துவம், குமரன் புத்தக இல்லம்.*

Banerji, Sures Chandra (1989), A Companion to Sanskrit Literature, Motilal Banarsidass

Bhattacharya, Ashim (2006), Hindu Dharma: Introduction to Scriptures and Theology

Coward, Harold G.; Raja, K. Kunjunni; Potter, Karl, eds. (1990). Encyclopedia of Indian Philosophies, Volume 5: The Philosophy of the Grammarians. Princeton University Press.

Dalal, Roshen (2014), The Vedas: An Introduction to Hinduism's Sacred Texts, Penguin UK,

Doniger, Wendy (2010), The Hindus: An Alternative History, Oxford University Press

Flood, Gavin (1996), An Introduction to Hinduism, Cambridge University Press

Frazier, Jessica, ed. (2011), The Continuum Companion to Hindu Studies, London: Continuum.

# அத்தியாயம் - 05
# பிரமசூத்திரம்

5.1 பிரமசூத்திரம் பற்றிய அறிமுகம்

5.2 பிரம்மசூத்திரத்தின் காலம்

5.3 பிரம்மசூத்திரத்தின் கட்டமைப்பும் பொருள் மரபும்

### அத்தியாயச் சுருக்கம்

இந்து சமயத்திற்கு அடிப்படையாக விளங்குவன வேதங்கள். வேதங்களின் இறுதிப்பகுதியாகவும், இவற்றின் சாரமாகவும் கருதப்படுபவை உபநிடதங்களாகும். நூற்றுக்கு மேற்பட்டவையாக உள்ள இந்த உபநிடதங்கள் பல்வேறு காலப்பகுதியில் உருவானதாலும், பலரால் இயற்றப்பட்டதாலும் இவற்றிலுள்ள தகவல்கள் ஒழுங்கின்றியும், சிதறிய நிலையிலும் பல சமயங்களில் ஒன்றுக்கொன்று முரணாகவும் தோன்றுவதால் இவற்றை வாசித்து விளங்கிக் கொள்வது மிகக் கடினமானது. ஆகவே மேற்கூறிய பிரச்சணைகளை தீர்க்கும் முகமாக பிரமசூத்திரம் படைக்கப்பட்டது. சூத்திரம் என்றாலே சுருங்கக் கூறுவது. மிகப்பெரிய உண்மைகளை மிகச் சில சொற்களால் சொல்கின்றது பிரம்ம சூத்திரம். உபநிடதங்களில் உள்ளவையும் கீதையில் பேசப்படுபவையும் பிரமசூத்திரத்தில் அடங்கும். அண்டத்தில் உள்ளதை அணுவாக்கி தந்துள்ளார் வியாசர்.

### அத்தியாயத்தின் நோக்கம்

இந்து நாகரிகத்தினை ஒரு பாடமாக் கற்கின்ற மாணவர்களுக்கு பிரமசூத்திரம் பற்றியும் பற்றிய விரிவாக அறிவினை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

### கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தினை மாணவர்கள் திறன்பட கற்பதன் மூலம் பிரமசூத்திரம் பற்றி அறிந்து கொள்வதுடன் இந்நூலின் நான்கு அத்தியாயங்கள் குறித்த தெளிவான அறிவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

### 5.1 பிரம்மசூத்திரம் பற்றிய அறிமுகம்

வேதாந்தத் தத்துவத்திலே மூன்று நூல்கள் முக்கியம் பெறுகின்றன. அவை பகவத்கீதை, உபநிடதம், பிரம்மசூத்திரம் என்பனவாகும். இவை பிரஸ்தான திரயங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. உபநிடதங்களை சுருதிப்பிரஸ்ானம் எனவும், பகவத்கீதையை ஸ்மிருதிப்பிரஸ்தானம் எனவும், பிரம்மசூத்திரத்தை நையாயப்பிரஸ்தானம் எனவும் அழைப்பர். சுருதி என்றால் கேட்பது, ஸ்மிருதி என்றால் நினைவில் இருத்துவது, நையாயம் என்றால் கோர்வையான தர்க்கம் எனப் பொருள்படுகின்றது.

இந்து மெய்யியல் மரபில் பிரஸ்தானத்திரயங்கள் (முக்கியமான மூன்று) என மதிக்கப்படுகின்ற மூன்று பனுவல்களில் பிரம்மசூத்திரமும் உள்ளடக்கப்படுகின்றமை அதன் சிறப்பைக் காட்டி நிற்கின்றது. பிரம்மத்தைப் பற்றிய கருத்தாடல்களை உள்ளடக்கியதனால் பிரம்ம சூத்திரம் என்றும் சரீரத்துள் உறைகின்ற சரீரியாகிய ஆத்மாவின் தன்னியல்புகள் குறித்து விவாதிப்பதனால் சாரீரக சூத்திரம் என்றும் இந்நூல் அழைக்கப்படுகிறது. உபநிடதங்களில் ஆராயப்பட்டுள்ள பரம்பொருள் சார்ந்த மெய்யியல் ஆராய்ச்சிகளை விபரிப்பதனால் உத்தர மீமாம்சக சூத்திரம் என்றும் ஸந்நியாச லட்சியத்தை முடிவாகச் சொல்வதனால் பிஷூசூத்திரம் என்றும் வழங்கப்பெறுகிறது. இந்நூல் பாதராயணர் என்பவரால் இயற்றப்பட்டது.

### 5.2 பிரம்மசூத்திரத்தின் காலம்.

பிரம்மசூத்திரம் இயற்றப்பட்ட காலம் தொடர்பாகத் தெளிவான ஆதாரங்கள் எதுவும் அறியப்படவில்லை. இதிகாச நாயகர்களான இராமன், கிருஷ்ணன் பற்றிய குறிப்புக்கள் எதுவும் பிரம்ம சூத்திரத்தில் இடம் பெறவில்லை. இதனைக் கருத்திற் கொண்டு இந்நூல் இதிகாசங்கள் தொகுக்கப்பட்ட காலப்பகுதிக்கு முற்பட்டது என்ற கருத்து ஆய்வாளர்களிடையே நிலவுகிறது. மக்ஸ்மூலரும் பகவத்கீதையின் காலம் எதுவோ பிரம்மசூத்திரம் நிச்சயமாகப் பகவத்கீதைக்கு முற்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

மனுஸ்மிருதி, பத்மபுராணம் ஆகியவற்றில் பிரம்மசூத்திரம் பற்றிய குறிப்புக்கள் இடம் பெறுவதனைச் சுட்டிக்காட்டுகின்ற ஹொப்கின்ஸ் (ர்ழிமனைள) பிரம்மசூத்திரம் கி.பி 200க்கு முற்பட்டது எனக் குறிப்பிடுகின்றார். பேராசிரியர் கீத் (முநவைா) என்பவரும் பிரம்மசூத்திர காலத்தின் கீழெல்லையாக கி.பி 200ஐயே சுட்டியுள்ளார்.

ஆயினும் பிரம்மசூத்திரம் தோன்றிய காலத்தின் மேலெல்லையாக கி.மு 400ஐ பிரேசர் (குயசணநச) என்ற அறிஞர் கருதுகிறார். பேராசிரியர் ளு.தாஸ்குப்தாவும்

பிரம்மசூத்திரம் கி.மு 2ஆம் நூற்றாண்டு காலத்தில் தோன்றியிருக்கலாம் எனக் கருத்துரைத்துள்ளார். ஆகவே பிரம்மசூத்திரம் கி.மு 200 – கி.பி 200 இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றியிருக்கலாம் எனக்கொள்வது பொருத்தமானதாகும்.

### 5.3 நூலின் கட்டமைப்பும் பொருள் மரபும்

சங்கரரின் கருத்துப்படி பிரம்ம சூத்திரம் ஐந்நூற்றைம்பத்தைந்து சூத்திரங்களையுடையது. இராமானுஜர் ஐந்நூற்று நாற்பத்தைந்து எனவும், மத்துவர் ஐந்நூற்று அறுபத்து நான்கு எனவும் சூத்திரங்களை வரையறுக்கின்றனர். இவை சமன்வயம், அவிரோதம், சாதனம், பலன் ஆகிய நான்கு இயல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் நான்கு பாதங்களாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பாதத்திலும் உள்ள சூத்திரங்கள் 192 அதிகரணங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

#### 5.3.1 சமன்வயம்

சமன்வயம் என்றால் ஒத்திசைவு (ர்யசஅழலெ) எனப்பொருள்படும். உபநிடதச் சிந்தனைகளில் உள்ள முரண்பாடுகளை இசைவுபடுத்தி உபநிடதப் பொருள் மரபில் சில அடிப்படையான மெய்யியற் பொதுமைகளை கட்டமைப்பதற்கான முயற்சியே இந்த இயலின் நோக்கமாகும். உயிருள்ளவை, உயிரற்றவை நிரம்பிய இந்தப் பிரபஞ்சம் படைக்கப்பட்டதா? படைத்தது யார்? படைப்புக்கு முன் இந்தப் பிரபஞ்சமே எப்படி, எங்கே இருந்தது? இதற்கு இறுதி உண்டா? இது போன்ற சிக்கலான விடைகளுக்கான விடைகளை இவ்வியல் தருகின்றது.

#### 5.3.2 அவிரோதம்

‘‘அவிரோதம்’’ பிரம்ம சூத்திரத்தின் இரண்டாவது அத்தியாயம் ஆக அமைகிறது. ‘‘பிரம்மமே பிரபஞ்சத்தின் இருப்புக்கு ஆதிகாரணமானது’’ என்று அறுதியிட்டுக் கூறுகின்ற பிரம்மசூத்திரத்தின் முதலாவது அத்தியாயத்திற்கு முரண்பாடான தத்துவசிந்தனாகூலங்களை தர்க்கரீதியாக மறுத்துரைப்பதே ‘‘அவிரோத’’ அத்தியாயத்தின் அடிப்படை நோக்கம் எனலாம். ‘‘அவிரோதம்’’ – முரண்பாட்டு நீக்கம் எனப் பொருள்படுகிறது.

சமன்வயத்தில் கட்டமைக்கப்பட்ட கருத்தியல்களுடன் மாறுபடுகின்ற சிந்தனாகூலங்களை இனங்கண்டு அவற்றைத் தர்க்கரீதியாக மறுத்தலும் தமது கருத்தை நிலைநிறுத்தலுமே இரண்டாவது இயலாகிய ‘‘அவிரோதத்தின்’’ பிரயத்தனமாகும். எடுத்துக்கொண்ட கருத்துக்களைத் தர்க்கரீதியாக

நிலைநிறுத்துவதும் முரண்பாடுடைய கருத்தியல்களை நியாயித்து மறுத்தலும் தத்துவ ஆராய்ச்சியுலகின் அத்தியாவசிய பரிமாணங்களாகும்.

இந்துதத்துவ வரலாற்றில் ஆதிசங்கரரின் பாஷ்யங்களில் தொடங்கி சிவஞானசித்தியரின் பரபக்கம், சங்கற்பநிராகரணம் வரையில் இப்போக்கின் செழுமைகளை நன்கு அவதானிக்க முடிகிறது. பிரம்மசூத்திரத்தின் அவிரோத அத்தியாயத்தினை இப்போக்கிற்கான ஆரம்பவித்தாகக் கொள்ளமுடியும். அந்தவகையில் பிரம்மசூத்திரத்தின் அவிரோத அத்தியாயமானது பிரம்மசூத்திரம்நிலைநிறுத்த விரும்பிய தத்துவக் கொள்கைக்கு முரணான சிந்தனா கூலங்களை தர்க்கரீதியாக மறுத்துரைக்கிறது.

இந்தவகையிலே தனது தத்துவ நிலைப்பாட்டுடன் மாறுபடுகின்ற சாங்கியம், யோகம், வைஷேடியம், சமணம், பௌத்த மெய்யியற்கிளைகளான சூனியவாதம், விஞ்ஞானவாதம் ஆகியவற்றுடன் பாசுபதசைவக் கருத்தியல்களையும் அவிரோத அத்தியாயம் தர்க்கரீதியாக மறுத்துரைக்கிறது. இந்து தத்துவ மரபில் ஆதிசங்கரரின் தத்துவ விவாதங்களில் இருந்து மெய்கண்ட சந்தானமரபின் பரபக்கம், சங்கற்பநிராகரணம் வரையில் மறுப்பதை மறுத்தல், மறுத்ததை நிலைநிறுத்தல் என்ற தளங்களில் தத்துவப் போராட்டங்களுக்கான அரிச்சுவடியாகவும் பிரம்மசூத்திரத்தின் அவிரோத அத்தியாயமே விளங்குகிறது எனலாம்.

### 5.3.3 சாதனம்

வாழ்வின் இயற்கை, உலகியல் குறைபாடுகள், இக்குறைபாடுகளிலிருந்து விடுபட்டுப் பிரம்மஞானத்தை அடைவதற்கான வழிமுறைகள் (சாதனங்கள்) என்பன பற்றி விபரிப்பதாகப் பிரம்மசூத்திரத்தின் மூன்றாவது இயலாகிய ‘‘சாதனம்’’ அமைகிறது.

இவ்வியல் நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 182 சூத்திரங்கள் உள்ளடங்குகின்றன. இவ்வியல் உயிர் ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலுக்குச் செல்லும்போது சூட்சுமமாக ஐந்து பூதங்களோடும், கர்மத்தோடும் இணைந்தே இருக்கிறது என்கிறது. விழிப்பி நிலையில், உயிருக்கு உள்ள குறைபாடுகளும் இதில் கூறப்பட்டுள்ளன.

### 5.3.4 பயன்

பிரம்மசூத்திரத்தின் இறுதிப்பகுதி ‘‘பயன்’’ என்பதாகும். இறப்பு, இறப்புக்குப்பிந்தியநிலை, மறுமையியல் (நுளஉாயவழடழபல) தொடர்பான

கருத்துக்கள் இவ்வியலில் உள்ளடங்கியுள்ளன. பிரம்மஞானத்தினை எய்தியவன் பெறும் பயன் தொடர்பாயும் இவ்வியலில் குறிப்புக்கள் உள்ளன.

பிரம்மத்தை பிரம்மஞானிக்கு உண்டாகும் பயன்கள், விளைவுகள் என்பன என்ன என்பது ஆராயப்படுகின்றது. பிரம்மஞானி மோட்சத்தை அடைகின்றான். அந்தமில் பேரின்பத்தை அடைந்தவர் மறுபடி பூமிக்குத் திரும்புவதில்லை. மோட்சத்தை அடைந்தவனின் மிச்சமுள்ள கருமங்கள் என்ன ஆகின்றன? உடலை விட்டு அவன் எங்கெல்லாம் செல்கிறான், மோட்சத்தில் அவனுக்கு கிடைக்கும் சுகங்கள் எவை? போன்ற விடயங்கள் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

பிரம்மசூத்திரம் மிகுந்த சொற்செட்டும் பொருட்செறிவும் கொண்ட சூத்திரங்களால் அமையப்பெற்றது. இந்து மெய்யியல் மரபில் தத்துவாசிரியர்கள் என்று தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கான தகுதிப்பாட்டைப் பெறுவதற்குப் பிரம்மசூத்திரத்திற்கு வியாக்கியானம் செய்யவேண்டியது இன்றியமையாததாகும். ஆதிசங்கரர், பாஸ்கரர், யாதவப்பிரகாசர், இராமானுஜர், கேசவர், நீலகண்டர், மத்துவாசாரியார், பலதேவர், வல்லபர், விஞ்ஞானபிட்சு என இதற்கு வியாக்கியானம் செய்த தத்துவவாதிகளின் பட்டியல் நீண்டு செல்கிறது. இது இந்நூலின் சிறப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் உள்ளது.

**பயிற்சி வினாக்கள்**

01. பிரமசூத்திரம் தோற்றம் பெற்றமைக்கான காரணத்தை விளக்குக.
02. பிரமசூத்திரத்தின் நான்கு அத்தியாயத்தையும் குறிப்பிட்டு அவற்றின் சிறப்புகளை எடுத்துரைக்குக.

**உசாத்துணைநூல்கள்**

சுகவனேச்வரன், அ, வெ., (2005), பிரம்மசூத்திரம், கண்ணதாசன் சாலை தியாகராச நகர் சென்னை.

*பத்மநாதன், சி.,(2005), இந்துக்கலைக்களஞ்சியம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து சமய அலுவல்கள் அமைச்சு*

*மாகாதேவன், ரி. எம் .பி., (2001), இந்து சமயத் தத்துவம், குமரன் புத்தக இல்லம்.*

Banerji, Sures Chandra (1989), A Companion to Sanskrit Literature, Motilal Banarsidass

# அத்தியாயம் 06

# தர்மசாஸ்திரம்

6.1 தர்மசாஸ்திரத்தின் காலமும் கட்டமைப்பும்

6.2 தர்மசாஸ்திரத்தின் பொருள் மரபு

6.3 முக்கிய தர்மசாஸ்திரங்கள்

6.4 சட்டமும், நீதியும்

6.5 தர்மசாத்திரங்கள் குறிப்பிடும் குற்றங்களும் தண்டனை முறையும்

6.6 தனிமனித, சமூக தர்மங்கள்

**அத்தியாயச் சுருக்கம்**

இந்துக்களின் இலக்கிய வரிசையில் வேத, புராண, இதிகாசங்களை அடுத்து சிறப்பிடம் பெறுவது தர்ம சாஸ்திரங்களாகும். தர்மசாஸ்திரங்கள் வடமொழி இந்து இலக்கியங்களில் தர்மம் பற்றிப் பேசுகின்றன. வேதங்களில் தர்மத்தின் மூலமாய் அமைந்த சுருதிகளை அடிப்படையாகக் கொண்டு சமயக் கடமைகள், தத்துவங்களைப் பற்றிப் பேசுவதற்கு எழுந்தவையே தர்மசாஸ்திரங்களாகும். தர்மசாஸ்திரங்கள் ‘‘ஸ்மிருதி’’ என்று அழைக்கப்படுகின்றது. ஸ்மிருதிகள் - ‘‘நிர்ணயிக்கப்பட்டது’’ என்று பொருள்படுகின்றது. சுருதி - ‘‘கேட்கப்பட்டவை’’ என்று பொருள் கொள்ளப்படுகின்றது. சுருதிகள் நேரடியாக இறையனுபவத்தின் மூலம் ரிஷிகளுக்கு உணர்த்தப்பட்ட என்றுமுள்ள உண்மைகள். இவ்வனுபவங்களை நினைத்துச் செய்யப்பட்டவை ஸ்மிருதிகள் எனப்பட்டன.

ஸ்மிருதி எனச் சரியாக வழங்கப்படும் நூல்கள் விதிநூல்கள் எனும் தர்மசாஸ்திரங்களாகும். தர்மசாஸ்திரம் என்ற சொல்லுக்கு மனித வாழ்வுக்குரிய நீதி நியாயங்களை விதிகளாக விளக்கும் நூல் என்று விளக்கப்பட்டுள்ளது. புராதன இந்து சமயத்தில் வாழ்க்கைநெறி என்பதையும் தர்மம் எனக் குறித்தார்கள். வாழ்வியல் பற்றிய மிகப் புராதனமான நூல்கள் தர்மசூத்திரங்களாகும். இத்தர்ம சூத்திரங்களைப் பொருள் மரபில் ஒத்தவையாய் அவற்றினின்றும் விரிந்தவையாய் சமகால சிந்தனைகளைக் கொண்டவையாய் செய்யுள் நடையில் அமைந்தவையே தர்மசாத்திரங்களாகும்.

### அத்தியாயத்தின் நோக்கம்

மாணவர்களுக்கு தர்மசாத்திரங்கள் குறித்த தெளிவினை வழங்குதல். தர்மசாத்திரத்தில் இடம்பெறுகின்ற அறக்கருத்துக்கள், சமயக்கருத்துக்கள், அரச தர்மம் போன்றவற்றினை எடுத்துரைத்தல். சட்டமும் நீதிபரிபாலனமும், குற்றங்களும் தண்டணைகளும், வர்ணாச்சிரம தர்மத்தின் அவசியம் முதலியவற்றினை தெளிவுபடுத்துவதே இவ்வத்தியாயத்தின் நோக்கங்களாக அமைகின்றது.

### கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தினைக் கற்பதன் மூலம் மாணவர்களிடையே பண்டைய இந்துக்களது வாழ்வியலில் தர்மசாத்திரங்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ள முடிவதுடன், அரசியல் தர்மங்கள் பற்றி ஸ்மிருதி நூல்கள் எடுத்துரைக்கின்ற விடயங்களினையும் அறிய முடியும்.

### 6.1 தர்மசாஸ்திரத்தின் காலமும் கட்டமைப்பும்

இந்துக்களின் இலக்கிய வரிசையில் வேத, புராண, இதிகாசங்களை அடுத்து சிறப்பிடம் பெறுவது தர்மசாஸ்திரங்களாகும். தர்மசாஸ்திரங்கள் வடமொழி இந்து இலக்கியங்களில் தர்மம் பற்றிப் பேசுகின்றன. வேதங்களில் தர்மத்தின் மூலமாய் அமைந்த சுருதிகளை அடிப்படையாக கொண்டு சமயக் கடமைகள், தத்துவங்களைப் பற்றி பேசுவதற்கு எழுந்தவையே தர்மசாஸ்திரங்கள் ஆகும். தர்மசாஸ்திரங்கள் ஸ்மிருதிகள் என்று அழைக்கப்படுகின்றது. ஸ்மிருதிகள் - நிர்ணயிக்கப்பட்டது என்று பொருள் படுகின்றது. சுருதி கேட்பவை என்று பொருள் கொள்ளப்படுகின்றது.

சுருதிகள் நேடியாக இறையனுபவத்தின் மூலம் ரிஷிகளுக்கு உணர்த்தப்பட்ட என்றுமுள்ள உண்மைகள். இவ்வனுபவங்களை நினைத்துச் செய்யப்பட்டவை ஸ்மிருதிகள் எனப்பட்டன. ஸ்மிருதி எனச் சரியாக வழங்கப்படும் நூல்கள் விதிநூல்கள் எனும் தர்மசாஸ்திரங்களாகும்.

தர்மசாஸ்திரம் என்ற சொல்லுக்கு மனித வாழ்வுக்குரிய நீதி நியாயங்களை விதிகளாக விளக்கும் நூல் என்று விளக்கப்பட்டுள்ளது. புராதன இந்து சமயத்தில் வாழ்கைநெறி என்பதையும் தர்மம் எனக் குறித்தார்கள். வாழ்வியல் பற்றிய மிக புராதனமான நூல்கள் தர்மசூத்திரங்களாகும். இத் தர்மசூத்திரங்களைப் பொருள் மரபில் ஒத்தவையாய் அவற்றினின்றும் விரிந்தவையாய் சமகால சிந்தனைகளைக் கொண்டவையாய் செய்யுள் நடையில் அமைந்தவையே தர்மசாத்திரங்களாகும்.

கி.மு முதலாம் நூற்றாண்டில் தரும சூத்திரங்கள் செய்யுள் வடிவமாக்கப்பட்டுச் சட்ட நோக்குகள் அதிகம் பெற்று விளங்குமாறு செய்யப்பட்டன. இவை பொதுவாக தர்ம சாத்திரங்கள் எனப்படும். கானே என்பவர் ஐயாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தர்ம காத்திரங்களை இயற்றியுள்ளனர் என்று குறிப்பிடுகின்றார். இவற்றுள் முக்கியமாவை மனு,யக்ஞ வால்க்யா்,நாரதா், பிரகஸ்பதி ஆகியவர்களின் பெயர்களால் வழங்கப்படுகின்றன. இவர்கள் அனைவரும் பழம்பெரு முனிவர்கள் என்பது அறிந்ததே. சமூகத்தில் தரும சாத்திரங்கள் மதிப்பும், பெருமையும் பெறும் பொருட்டும் இவற்றுக்கு அதிகாரம் ஏற்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்தும் இத் தரும சாத்திரங்களை உருவாக்கியவர்கள் மனு போன்றவர்களின் பெயர்களில் இவற்றை வழங்கியிருத்தல் கூடும். இந் நூல்கள் யாரால் எக் காலத்தில் இயற்றப்பட்டன என்பதற்குத் தெளிவான தடயங்கள் கிடைக்கவில்லை. எப்படியான போதிலும் இத் தரும சாத்திரங்கள் சமூகநெறி ஒழுங்குகளை வரையறைப்படுத்தி இந்து மதக் கோட்பாடுகளோடு இணைந்து இந்து சட்ட நெறித் தொகுதிகளாக வெகு காலமாக விளங்கி வருகின்றன. என்பதில் ஐயமில்லை.

விவடையும் சமூதாயத்தின் சிக்கல்களைச் சமாளிக்கவும், தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வேதங்களும், சூத்திரங்களும் போதாமையினால் இவற்றை ஒட்டியும், விரித்தும் தர்மசாத்திரங்கள் ஏற்படலாயின. காலப் போக்கில் வேதக் கல்வியில் தரும சாத்திரங்களும் இன்றியமையாத பகுதிகளாக விளங்கி வேதங்களை ஒத்த மதிப்பினைப் பெற்றன.

கொள்கை அளவிலும், அனுபவ ரீதியிலும் சமூக வாழ்வின் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கி இயற்றப்பட்டனவோ என ஐயுறத்தக்க அளவில் குடும்ப, சமூக, அரசியல் வாழ்வுகளின் பல சிக்கலான பிரச்சனைகள் மனு தர்ம சாத்திரத்திலும், பிற தரும சாத்திரங்களிலும் இடம் பெற்றுள்ளன.

அர்த்தசாத்திரங்களைப் போலல்லாது வேதபூர்வமான புனித மரபுச் சடங்குகளையே தரும சாத்திரங்கள் ஏற்றுக் கூறுகின்றன. அர்த்த சாத்திரத்திற்கும் தரும சாத்திரத்திற்கும் ஒரு பிரச்சனையை தீர்க்கும் முறையில் வேறுபாடு காணப்பட்டால் தர்ம சாத்திரத்தினை ஒட்டியே அதற்கு தீர்வு காணுதல் வேண்டும் என யக்ஞ வால்க்யா் கூறுகின்றார். என்றாலும் இவ் இரண்டிற்குமிடையே உள்ள வேறுபாடுகள் எங்கும் விளக்கமாக கூறப்படவில்லை. மனு ஸ்மிருதி, யக்ஞ வால்க்ய ஸ்மிருதி ஆகிய இரண்டும் தருமம், அர்த்தம் ஆகிய இரண்டையுமே கூறும் சாத்திரங்களாகும். பிரகஸ்பதி, ஸ்மிருதி இலக்கியங்களுக்கும் ஆரம்பத்தில் அதிக வேறுபாடுகள் இல்லை என்பது புலனாகும். கௌடில்யர், காமந்தகியா் ஆகியோரது அர்த்த

சாத்திரங்களுக்குப் பிறகே இவ் வருகை சாத்திரங்களுக்குமிடையே உள்ள வேறுபாடானது ஓரளவு தெளிவாகப் புலப்படுகின்றது.

ஆரம்பகாலங்களிலே 56 ஸ்மிருதிகள் இருந்தன என்றும் அவற்றில் 18 ஸ்மிருதிகள் பிற்காலத்தில் கிடைத்தன என்றும் கூறப்படுகின்றது. இவற்றிலே,

- மனுதர்ம சாஸ்திரம்
- பிரகஸ்பதி தர்மசாஸ்திரம்
- நாதர தர்மசாஸ்திரம்

போன்றன குறிப்பிடத்தக்கன.

## *6.2 தர்மசாஸ்திரத்தின் பொருள் மரபு*

இந்நூலானது சமய நம்பிக்கை, சமூக கட்டமைப்பு, ஆட்சி முறை, நீதி, சட்டம், குற்றங்கள், தண்டனைகள், தனிமனித ஒழுக்கம், வர்ணபாகுபாடு, ஆச்சிரம வாழ்க்கை, அரசனது கடமைகள், அதிகாரம், கிரியை முறைகள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கமாக் கொண்டுள்ளது.
தர்மசாஸ்திரங்கள் மூன்று காண்டங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

- ஆசார காண்டம் - ஆசார ஒழுக்கம், தனிமனிதனுக்குரிய ஒழுக்கம், சமூகக் கட்டமைப்பு, சமூகவாழ்க்கை முறை, நால்வகை வர்ணத்தவரின் கடமைகள் போன்றன கூறுப்பட்டுள்ளன.
- வியவகார காண்டம் - அரசனுடைய ஆட்சி முறை, அவனுக்குரிய அதிகாரம், கடமைகள், அரச நீதிகள், சட்டம், நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் போன்றன விளக்கப்பட்டுள்ளன.
- பிராயச்சித்த காண்டம் - மனிதர்கள் செய்கின்ற குற்றங்களுக்குரிய தண்டனைகள், தண்டணைக்கான பிராயச்சித்தம், நான்கு வர்ணத்தவர் செய்கின்ற குற்றங்களுக்குரிய தண்டனைகள் பற்றியும் தண்டனைகள் தொடர்பான வரையறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இயமங்கள், நியமங்கள் போன்றவற்றிற்கும் இங்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

- இயமங்கள் - அஹிம்சை, சத்தியம், தூய்மை, புலனடக்கம், பொறுமை, சாந்தி, கருணை.
- நியமங்கள் - நான்கு வர்ணத்தவர்களின் கடமைகள், ஆச்சிரம நிலையில் உள்ளவர்களின் கடமைகள் போன்றன விளக்கப்பட்டுள்ளன.

## 6.3 முக்கிய தாமசாத்திரங்கள்

### 6.3.1 மனுஸ்மிருதி

மனு தரும சாத்திரம் தரும சாத்திரங்களில் முதன்மையாகவும், புகழ் பெற்றதாகவும் விளங்குகிறது. இந்து சட்டத்தில் அதிகாரப் பூர்வமாகக் கொள்ளப்படுவதும் இதுவே. மனு மனசாட்சியினையும் புனிதச் சட்டத்திற்கு ஆதாரமாகக் கூறுவார். பழைய ஒழுக்கத்தைக் காட்டிலும் நல்லொழுக்கமே சட்டத்திற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என இவர் கூறுகின்றார். சட்ட பிரச்சனைகளில் தீர்வு காணும் போது முன்பு வழக்கில் இவை போன்றவை எவ்வாறு தீர்க்கப்பட்டன என்பதை ஒட்டியே தீர்வு காண வேண்டும் என்றும் கூறுகின்றார். மனுவும் அரசன் ஏற்றம் பெற்று விளங்க வேண்டியதன் அவசியத்தை கூறுகின்றார். அரசன் இல்லாவிடிலோ அல்லது தண்டம் செலுத்தத் தவறியபோதிலோ பலம் படைத்தவன் பலவீனர்களைத் துன்புறுத்தி வாழ்வான் என்னும் மச்ச நீதிக் கொள்கையினைக் கூறுகிறார்.

அரசன் இறைவனால் படைக்கப்பட்டு அரசாட்சி செய்ய நியமிக்கப்படுகிறான். மச்ச நீதிச் சூழ்நிலையிலிருந்து மக்களை காக்கும் பொறுப்பு அவனுடையது என்று கூறுகிறார். இந்திரன், வாய், சூரியன், யமன், வருணன், சந்திரன், அக்கினி, பிருதுவி ஆகிய தேவர்களின் கூறுகள் பெற்று அரசன் விளங்கினாலும் இறைவன் ஆவன் என்பது சொல்லப்படவில்லை தவிர மனம் போனபடி அதிகாரம் செலுத்தவும் கூடாது. இரு முனையும் கூரான வாள் போன்றது தண்டம். இது தவறாக செலுத்தப்பட்டால் தன்னைத் தானே அரசன் அழித்துக் கொள்ள நேரிடும்.

வருணச்சிரம தருமம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. இதனைக் காப்பது அரசன் கடமை என்பது மனுவில் வலியுருத்தப்பட்டுள்ளது. பிராமணரின் மேன்மைக்கு முதலிடம் தருவது போல் மனுஸ்மிருதி அமைந்துள்ளது. சமூக வளமானது அரசனைப் பொறுத்திருந்த போதிலும் அரசனின் சக்தி பிராமணர்களின் ஆன்மீக சக்தியினைப் பெறுத்தே விளங்குகின்றதென்றும் சத்திரியரும் பிராமணரும் ஒருவருக்கொருவர் துணையாக நின்றால் தான் இரு சாதியினரும் வளர முடியும் என்றும் கூறப்படுவதிலிருந்து இது விளங்கும்.

மனு கூறும் நாட்டின் ஏழு உறுப்புக் கொள்கையானது கௌடில்யர் கூறும் ஏழு உறுப்புக் கொள்கையிலிருந்து சற்றே மாறுபட்டுள்ளது. ஏழு உறுப்புக்கள் இரண்டு நூல்களிலும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும் இவை ஒன்றிற் கொன்று தொடர்புபடுத்தப்படுவதில் வேற்றுமை உள்ளது. மனுவில் ஏழு உறுப்புகளில்

அனைத்துமே சமமாக வைத்து எண்ணப்படுகின்றன. மனுவும் அர்த்த சாத்திரத்தில் உள்ளது போன்ற மண்டலக் கொள்கையினைக் கூறியுள்ளார். ஆனால் இது விரிவாக அமையவில்லை எனலாம்.

### 6.3.2 யக்ஞ வால்க்ய ஸ்மிருதி

யக்ஞ வால்க்ய ஸ்மிருதி கௌடில்ய அர்த்த சாத்திரத்தையும், மனு தரும சாத்திரத்தையும் ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. இது குப்தர் காலத்து நூலாக இருக்கலாம். இந்நூல் மூன்று பகுதிகளாக விளங்குகின்றது. முதல் பகுதியில் நன்னடத்தை எது என்பதும், இரண்டாவதில் பிராயச்சித்தமும் மூன்றாவதில் குற்றவியல் சட்டமும் சொல்லப்படுகின்றன. இதில் தர்மக் கொள்கைகளை விட அரசியல் சட்ட கொள்கைகள் அதிக இடம் பெறுகின்றன. அரசனின் அதிகாரமும், கடமைகளும் மனுவில் உள்ளதை விட அதிகமாகக் காணப்படுகின்றன. சட்டத் தொகுதிகளுக்குள் முரண்பாடு இருப்பின் பரவலாக வழக்கில் இருக்கும் முறையை ஒட்டித் தீர்ப்பளிக்கலாமெனவும், புனிதச் சட்டமானது பெரும்பாலோரின் அதிருப்புக்கு உள்ளாகும் போது அதனை அவர்களுக்கு இணக்கமாக மாற்றி அமைக்க வேண்டும் எனவும், தன் ஆட்சியின் கீழ் வரும் அந்திய நாட்டினரின் மரபினை மதித்து நடக்க வேண்டும் எனவும் இதில் கூறப்பட்டுள்ளது. மதச் சட்டமும், மதச் சார்பற்ற பொதுச் சட்டமும் தனியே பிரிக்கப்பட்டு விளங்குகின்றன.

நாரத ஸ்மிருதியில் மத, நன்னடத்தைக் கேட்பாடுகள் சொல்லப்படாமல், சட்டவியலாக மனித ஒழுக்கம் ஆராயப்படுகின்றது. அரசன் இயற்றும் சட்டம் மற்ற வகை சட்டங்களைப் போல் முக்கியமானதாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்மிருதிகள் ஒன்றில் இருந்து ஒன்று சிற் சில வகைகளில் வேறுபட்டிருந்தாலும் பொரும்பாலம் அவற்றிக்கிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அரசனின் கடமைகள், பிராமண சத்திரிய தொடர்பு, வருணச்சிரம தருமம், சட்டத்தின் கூறுகள், தண்ட கொள்கை ஆகியவற்றில் பெரும்பாலும் உடன்பாடு காணப்படுகின்றது.

### 6.4 சட்டமும், நீதியும்

சட்டப் பிரச்சனைகள் பதினெட்டு வகையாகப் பிரிக்கப் படலாம் என்று மனு கூறுகின்றார். கீழ்க்கண்டவற்றிலிருந்து பிரச்சனைகள் எழக்கூடும் என்கிறார்.

1. கடனை திருப்பிக் கொடுக்காதிருத்தல்
2. பொருளினைப் பாதுகாப்புக்காக அளித்திருத்தல்
3. சொந்தமற்ற பொருளிளை விற்றல்
4. கூட்டுறவு

5. அன்பளிப்புக்கள்
6. ஊதியம் அளிக்காதிருத்தல்
7. ஒப்பந்தங்களை நிறைவேற்றதிருத்தல்
8. விற்றல், வாங்கல்
9. வேலைக்காரர்களுடன் தகறாறு
10. எல்லைத் தகறாறு
11. அடிதடி
12. தூற்றல்
13. திருட்டு
14. கொள்கை, காயமேற்படுத்தல்
15. முறையற்ற ஆண் - பெண் தொடர்பு
16. கணவன், மனைவி கடமைகள்
17. செத்துக்களைப் பிடுங்குதல்
18. சூதாடுதல்

பிரகஸ்பதி ஸ்மிருதியில் குத்து வெட்டு, சொத்து தகறாறு ஆகிய இரண்டு வகைகளின் கீழ்ச் சட்டப் பிரச்சனைகள் பிரிக்கப்பட்டுள்ளன. குற்றவாளி எத் தொழிலைச் செய்பவனோ அத் தொழில் செய்பவர்களாலேயே விசாரிக்கப்பட வேண்டும் என்று மனு, யக்ஞ்வால்க்யர், பிருகஸ்பதி ஆகிய மூவரும் கருதுகின்றார்கள். சாட்சிகள் எந்த வருணத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் அவர்களது சாட்சியம் ஒப்புக்கொள்ளப்பட்டது. என்றாலும் கீழ் வருணத்தைச் சேர்ந்தவர் மேல் வருணத்தாருக்கு எதிராகச் சாட்சி சொல்வது ஒப்புக்கொள்ளப்படவில்லை. பெண்கள், சிறுவயதினர், அரசாங்க அலுவலர், அங்க குறைபாடுள்ளவர், குற்றவாளிகள் ஆகியோர் தகுந்த சாட்சிகளாகக் கருதப்படவில்லை. உண்மை கூறுவதனால் ஒருவன் மரணதண்டனைக் குள்ளாகலாம் என்னும் நிலையில் அவனைக் காக்க பொய்சாட்சி சொல்லலாம் என மனு கூறுகிறார். இதே போல் தன் பொருளை மாற்றானிடமிருந்து எவ் வழியிலும் தானே சட்டத்தின் துணையின்றி மீட்கலாம் என்றும் கருதுகின்றார்.

சாட்சியங்களும், சான்றுகளும் குற்றவாளியை நிர்ணயிக்க போதுமானவைகளாயில்லாத போது துன்புறுத்தல் வழிகள் மேற் கொள்ளப்பட்டன. அநேகமாகப் பிராமணர்களுக்குத் தண்டனையில் சலுகைகள் காட்டப்பட்டன.

காத்யாயன ஸ்மிருதியல் மட்டும் சத்திரியர்களுக்கும், பிராமணர்களுக்கும், மற்றவருக்கும் விதிக்கப்படுவது போல் இரண்டு அல்லது நான்கு மடங்கு தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. தண்டனைகளில் உடல் துன்புருத்தலும், சிறைத்

தண்டனையும், கட்டாய வேலையும், அபராதமும் முக்கிய முறைகளாக விளங்கின. மரண தண்டனையும் சொல்லப்பட்டுள்ளது. மக்களின் கருத்தை அறிந்து கொண்டு காலப்போக்கில் ஏற்படும் சமூக மாற்றங்களை அறிந்து அவற்றை ஒட்டிச் சட்ட நீதிமுறை அமைய வேண்டும் என்னும் கருத்து யக்ஞ்வால்க்ய ஸ்மிருதியில் காணப்படுகின்றது. மொத்ததில் இவைகள் தான் சட்டங்கள் என மக்களால் அங்கிகரிக்கப்பட்டன என்றும் சட்டங்களாக இந்து மதத்தில் விளங்கின என்று கூறலாம்.

பிராமணர்களே நீதிபதிகளாக விளங்கினர். தவறாக தீர்ப்பளிப்பின் குற்றத்தின் பாவம் அவர்களைச் சாரும் என்று சொல்லப்பட்டுள்ளது. குற்றவியல் சட்டப்படி வழக்கின் இரு தரப்பினரும் தாமே வாதாடவும், சீரியல் சட்டப்படி சட்டமறிந்து அறிஞர் துணையுடன் வாதாடவும் வழிகள் இருந்தன. வழக்குகள் பகிரங்கமாக விசாரிக்கப்பட்டன. நீதிக்குத் துணையாக நடுவர்களும் இருந்தனரென்று ஸ்மிருதிகளில் இருந்து தெரிகின்றது. இவர்கள் பிராமணர்களாக இருக்க வேண்டும் என்று அவை கூறுகின்றன. சில விடயங்களில் வழக்கில் தொடர்புடையவர்களின் மரபுச் சட்டங்கள் பற்றிய செய்திகளே விசாரிக்கப்பட வேண்டிய நிலை இருந்தால் அவர்களின் வருணத்தாரே நடுவர்களாக இருக்கலாம் எனவும் தெரிகிறது.

குற்றத்தை விசாரித்து தண்டிப்பதில் நடுநிலை வழுவாது குற்றம் ஏன் எவரால் செய்யப்பட்டது என்பதை பார்த்து நடுவரும், நீதிபதியும் செயல்பட வேண்டும். பைத்தியக்காரர்கள், குடிபோதையில் உள்ளவர்கள், வியாதிகாரர்கள் செய்யும் ஒப்பந்தங்கள் அவர்களைக் கட்டுப்படுத்தாவென மனு கூறுகிறது. வழக்கை விசாரணைக்கு கொண்டு வருவதில் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும் எனவும், சட்டங்கள் கட்டளைகள் இவை யாவருக்கும் தெரியும்படி செய்யப்பட வேண்டுமெனவும் கூறப்படுகின்றன.

கௌடில்ய அர்த்த சாத்திரத்தில் சொல்லப்படுவது போல் வெளிநாட்டு கொள்கை விவரித்துக் கூறப்படாத போதிலும் மற்ற முறைகள் பயனளிக்காதபோதே போர் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. தூதர் அமைதிக்குப் போராடுபவராக விளங்குகிறார்.

எல்லாச் சாத்திரங்களையும் அறிந்தவனாகவும், சொற்குறி, முகக்குறி, செய்கைக்குறி இவைகளை அறிந்து கொள்வதில் தேர்ச்சி பெற்றவனாகவும், நாணயம், திறமை, நற்குலப் பிறப்பு ஆகியவை உடையவனாகவும் இருப்பவனைத் தூதுவனாக அரசன் நியமிக்க வேண்டும். அத் தூதுவன் அனைவரிடத்தும் அன்புடையவனாகவும், திறமை

மிக்கவனாகவும், ஞாபக சக்தி நிரம்பியவனாகவும் ஒரு செயலைச் செய்வதற்கு ஏற்ற இடம், காலம் ஆகியவற்றை அறிந்தவனாகவும், அழகு, உறுதி, சொல்வன்மை ஆகியவை உடையவனாகவும் இருந்தால் தன் அரசனுக்குப் புகழ் சேர்ப்பவன் ஆவான்.

அரசன் பகைவனிடமிருந்து தன் தளர்ச்சியை மறைக்க வேண்டும், பகைவர்களின் தளர்ச்சியை அறிய வேண்டும். ஆமையானது தன் உறுப்புக்களை ஓட்டினுள் மறைத்துக் கொள்வதைப் போல அரசனும் தன் அலுவலர்களையும், தளர்ச்சியையும் மறைத்துக் கொள்ள வேண்டும். கொக்கைப் போல பொறுமையுடனும் உறுதியுடனும் செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும். சிங்கத்தைப் போல் தன் வலிமையைக் காட்ட வேண்டும். ஓநாயைப் போல் எதிரியைக் கவ்வ வேண்டும். முயலைப்போல் விரைந்து தப்ப வேண்டும். இவ்வாறு வெற்றி நோக்கில் ஈடுபட்டிருக்கையில் தனக்கு ஊறு விளைவிப்போரைச் சாமம், தானம், பேதம், தண்டம் உபாயங்களால் அடக்க வேண்டும். பகைவர்கள் முதன் மூன்று உபாயங்களினால் அடங்காவிடின் அவர்களைக் கடைசி உபாயத்தால் அடக்க வேண்டும். இந்து நான்கு உபாயங்களில் சாமம், தண்டம் ஆகிய இரண்டும் நாட்டின் வளமைக்கு அடிகோலுகின்றன என்கின்றார் மனு.

தனக்கும் குடிகளுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் அரசன் வரியும் தீர்வையும் விதிக்க வேண்டும். அட்டை, கன்று, வண்டு இவைகள் தம் உணவை எவ்வாறு சிறுகச் சிறுக உண்கின்றனவோ அதோபோல் அரசனும் குடிமக்களிடமிருந்து அளவாக வரி ஈட்ட வேண்டும். பொருள், பசு இவற்றின் வருவாயில் ஐம்பதில் ஒரு பங்கும், தானியத்தில் ஆறு, எட்டு அல்லது பன்னிரண்டில் ஒரு பங்கும் வரியாகப் பெறவேண்டும். மரம், இறைச்சி, தேன், நெய், வாசனைத் திரவியங்கள், மருந்து மூலிகைகள், பூ, பழம், கிழங்கு, இலை, காய், புல், பிரம்பு, மூங்கில், தோல், மண்பாண்டங்கள், கற்கள் ஆகியவற்றின் இலாபத்தில் ஆறில் ஒரு பங்கை அரசன் வரியாக விதிக்கலாம். வறுமைப்பட்ட நிலையிலும் அரசன் கற்றறிந்த பிராமணனிடத்தும் வரி வாங்குதல் கூடாது. அத்தகைய பிராமணர்கள் எவரும் பசியினால் தன் நாட்டில் துன்பப்பட விடக்கூடாது.

**6.5 தர்மசாத்திரங்கள் குறிப்பிடும் குற்றங்களும் தண்டனை முறையும்**

மனு தர்மசாஸ்திரத்தில் எட்டாம் அத்தியாயத்தில் பெண்ணானவள் தனது புனித தன்மையை இழந்து ஒழுக்கம் அற்று விபச்சாரம் செய்து ஆதாரங்களுடன் குற்றம் சுமத்தப்பட்டு நிரூபிக்கப்படுமாயின் அப் பெண்ணுக்கு நூறு நாணயங்கள் தண்டனையாக விதிக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

கணவனானவன் சூதாடும் பழக்கம் கொண்டவனாகவும் குடிப்பழக்கம் கொண்டவனாகவும் நோய் நொடிகளுக்கு உட்பட்டவனாகவும் இருப்பினும் அவனுக்குரிய கடமைகளை மனைவி எவ்வித மனச்சஞ்சலமும் இன்றி ஆற்றல் வேண்டும் என்று கூறுகின்றது. அவ்வாறு மேற்கொள்ளாது விடின் அவளுக்கு தன்னை அழகு செய்வதிலிருந்தும் ஆடைகள் மற்றும் அவளுக்கான படுக்கை என்பவற்றை தடுத்து மூன்று மாதங்களுக்கு இவைகலிருந்து விலக்கி தனிமையில் வைத்தல் வேண்டும் என்று உன்பதாம் அத்தியாயத்தில் 78ஆவது செய்யுள் கூறுகின்றது.

ஒரு குற்றத்திற்கான தண்டனையாக ஒரு குற்றச்சாட்டுக்கு போலியான சாட்சி கூறி குறித்த நபரினை காப்பாற்ற எண்ணும் நபரினை அனைத்து குற்றங்களை விடவும் இழிவான செயல் செய்தவராக நாட்டு மக்கள் அறியும் படியாக அவரைப் பற்றி தகவலினை அரசன் வெளிவிடுவான்.

விஸ்ணுஸ்மிருதியானது நீதிபதி அநீதி இழைத்தவராகவோ கையூட்டுப் பெற்றவராகவோ காணப்படின் அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்று கூறுகின்றது. குலமகளை கொலை செய்த பொன்னை களவாடிய பிராமணர்க்கு கொலையே தண்டம் என விஷ்ணுஸ்மிருதி கூறுகின்றது. இங்கு பிராமணர்கள் குற்றம் செய்திருப்பினும் அவர்களுக்கு ஏனையவர்கள் போன்று சட்டத்தின் முன் சமமாக தண்டனை வழங்கப்படும் என்பது புலப்படுகிறது. இருவர் சண்டையிடும் போது ஒருவர் உடன் இறந்தாலோ அல்லது ஏழு நாட்களுக்குள் இறந்தாலோ அவர் கொலைக் குற்றவாளியாகக் கருதப்பட்டு கொலைத் தண்டனை வழங்கப்பட்டது.

தாய், தந்தை, உடன் பிறந்தவர்களை துன்புறுத்தல், அந்தப் புறத்தில் அத்துமீறி பிரவேசித்தல் பகையரசனுக்கு துணைபுரிதல், நாட்டுக்கு எதிராக சதி செய்தல் போன்ற குற்றங்களை இழைப்பவர்களுக்கு உயிருடன் தீயிட்டு ஏரித்தல் எனும் தண்டனை வழங்கப்பட்டது.

ஒரு சூத்திரனானவன் பிராமணனைத் திட்டினால் அவனது நாக்கை அறுக்க வேண்டும் என்று கூறுகின்றது. இவ்வாறு வர்ணத்தவருக்குரிய தண்டனைகள் பற்றி அத்தியாயம் எட்டில் கூறப்பட்டுள்ளது.

சூத்திரன் பிராமணர்களின் பெயர், ஜாதி இவைகளை சொல்லித்திட்டினால் பத்து அங்குல நீளமுள்ள இரும்பைக் காய்ச்சி அவன் வாயில் வைக்க வேண்டும். மேலும்

சூத்திரன் பிராமணனைப் பார்த்து நீ இதைச் செய்ய வேண்டும் என்று கூறினால் அவனது வாயிலும் காதிலும் எண்ணெயை காய்ச்சி ஊற்ற வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

சூத்திரன் பிராமணனுடன் ஒரே ஆசனத்தில் உட்கார்ந்தால் அவனது இடுப்பில் சூடு போட்டு ஊரைவிட்டு துரத்த வேண்டும். மேலும் பிராமணன், சத்திரிய, வைசியன் போன்றோரின் மனைவியை சூத்திரன் ஒருவன் தனது வலிமையால் கூடினால் உயிர்போகும் வரை அவனைத் தண்டிக்க வேண்டும்.

மேலும் குற்றமிழைத்தவன் சத்திரியனாயிருப்பினும் ஆயிரம் பணம் தண்டம் விதித்து கழுதை மூத்திரத்தை விட்டு அவன் தலையை மொட்டை இடுக என்று மனு தர்மசாஸ்திரம் கூறுகின்றது.

மேலும் சித்ரவதை முறைகள் பற்றியும் தர்மகாத்திரங்கள் கூறுகின்றது. கர்ப்பிணிகள், குழந்தைகள், நோயாளிகள், முதியோர்கள் போன்றோர் சித்திரவதையிலிருந்து விடுபட்டனர்.

### 6.6 தனிமனித, சமூக தர்மங்கள்

தர்மசாத்திரங்களானவை வர்ணக்கோட்பாடு, ஆச்சிரம வாழ்க்கை, கல்வி, திருமணம், சமூக ஒருங்கிணைப்பு, ஆண் பெண் சமத்துவம், தனிமனித ஒழுக்கம், மூட நம்பிக்கைகளை கலைதல் போன்ற ஏராளமான அம்சங்களைக் குறிப்பிடுகின்றது. இவை தனிமனிதனதும் சமூகத்தினதும் கடமைகளாக வருணாச்சிரம தர்மக் கோட்பாட்டை விளக்குகின்றன.

இருக்குவேத புருஷசூக்தத்தில் குறிப்பிடப்பட்ட பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரரெனும் நால்வகை வர்ணங்களையும் அவற்றுக்குரிய கடமைகளையும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் வருண தருமம் குறிப்பிடுகின்றது.

நால்வகை வர்ணத்தாருக்குரிய கடமைகளைப் பின்வறுமாறு குறிப்பிடுகின்றன.

- பிராமணர் - ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்
- சத்திரியர் - முறையான நீதிபரிபாலணம் செய்து நாட்டைப் பாதுகாத்தல், வேட்டலும் ஓதுதலும்.
- வைசிகர் - வேட்டலும் ஓதுதலும், சிறப்பாக நிறையோம்புதலும் உழுது பயிரிடுதலும் வாணிகம் செய்தலும் வட்டிக்குப் பணம் கொடுத்தலும்.

- சூத்திரர் - முதல் மூன்று வருணத்தாருக்கும் சிறப்பாகஊழியஞ் செய்தல்.

இவ்வர்ணப் பாகுபாட்டிற்கு அடிப்படை தத்துவமாக தொழிற்பிரிப்பு அமைந்துள்ளது. இப்பாகுபாடு நாளடைவில் பிறப்புப்பற்றிய பிரிவுகளாய் மாறிவிட்டன. சமூதாய அமைப்பை ஒரு சீரான நிலையில் வைத்துக் கொள்ளவே இந்த வர்ணதருமம் பேணப்பட்டது என்பர்.

மனு தமது நூலில் வர்ணக் கோட்பாட்டை மிக இறுக்கமாக வலியுறுத்தியதோடு மற்றுமொரு கருத்தையும் முன்வைக்கிறார்.

‘‘பிராமணன் வேதத்தைப் படிக்காமல் வேறு தொழில் செய்தால், அவன் சந்ததியோடு சூத்திரனாகிவிடுகிறான். அதே போன்று தன் நடத்தையினாலும் ஒரு சூத்திரன் பிராமணனாகி விடுவதும், பிராமணன் சூத்திரனாகி விடுவதும் உண்டு. இதே விதி சத்திரியனாய்ப் பிறந்தவனுக்கும் வைசியனாய் பிறந்தவனுக்கும் பொருந்தும்’’ என்கின்றார்.இக்கருத்து ஒருவன் பிறப்பில் அன்றி, தன் நடத்தையாலும் உயர்ந்தவனாகக் கருதப்பட முடியும் என்ற உண்மையை உணர்த்துவதாக அமையும்.

சமூகக் கட்டுக்கோப்பை பேணுமுகமாக வர்ண தருமத்தை முன்வைத்த தர்மசாத்திரங்கள் தனிமனிதனின் வாழ்க்கைப் படிநிலைகளில் ஒருவன் ஆற்றவேண்டிய கடமைகளை ஆச்சிரமங்கள் என்று குறிப்பிடுகின்றது. ஆச்சிரமங்கள் வாழ்க்கையின் நான்கு நிலைகளாகும். அவை பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பனவாகும்.

- பிரமச்சரியம் - வாழ்க்கையின் முதன் நிலையான பிரமச்சரியம் கல்வியும் ஒழுக்கமும் கற்கும் நிலையாகும். தர்மசாத்திரங்கள் உபநயனம் பெறத் தகுதியுடைய பிராமண, சத்திரிய, வைசிய மாணாருக்குரியது எனவும் சூத்திரர் தந்தை வழியில் அக்கல்வியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அது தொழில்சார் கல்வியாக அமையும் எனவும் கூறுகின்றன.
- கிருகஸ்தம் - ஒருவன் மணமுடித்து குடும்பத் தலைவனாக வாழும் நிலை எனவும் இந்நிலையில் அவன் பஞ்சயக்ஞம் முதலிய கடமைகளை ஆற்ற வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றன.
- வானப்பிரஸ்தம் - குடும்பக் கடமைகளை நிறைவு செய்த பின்பு பந்தபாசங்களை விடுத்து காட்டில் சென்று புலனடக்கத்தோடு ஆன்மீக விடயங்களில் நாட்டம் செலுத்த வேண்டும் எனக் கூறுகின்றது.

- சந்நியாசம் - வானப்பிரஸ்த நிலையில் ஆன்மீக பயிற்சி பெற்ற ஒருவன் முற்றும் துறந்த நிலையில் வீடுபேற்றுக்காக முயற்சிக்கும் நிலையாகும். இந்நிலையே மனிதவாழ்வின் இலட்சியமாகும் என தர்மசாத்திரங்கள் கூறுகின்றன.

தனிமனிதன் ஒவ்வொருவரதும் ஒழுக்கத்தை விளக்கும் படிமுறைகளுடாக, சமூகக் கட்டுக்கோப்பினை வளர்ப்பதற்கும் அறவாழ்வில் ,ஈடுபடுவதற்கும் மோட்சநிலையைப் பெறுவதற்கும் ஆச்சிரம தருமங்களை தர்மசாத்திரங்கள் வலியுருத்துகின்றன.

தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களில் சாதாரண தர்மங்கள் பற்றியும் தர்மசாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. அவை தூய்மை, தன்னடக்கம், பற்றின்மை, சத்தியம், அஹம்சை ஆகிய ஐந்து அறப்பண்புகளை அடிப்படையாகக் கொண்ட உயர்ந்த ஒழுக்க கோட்பாடுகளாகும். இவை எல்லோராலும் எக்காலத்திலும் கடைப்பிடிக்க வேண்டியவையாகக் கருதப்படுகின்றன.

மனுதர்ம சாத்திரத்தின் இரண்டாம் அத்தியாயம் இந்துக்களின் கல்வி முறை பற்றியும் பத்தாம் அத்தியாயம் கலப்புத் திருமணம் பற்றியும் எட்டாம், ஒன்பதாம் அத்தியாயங்கள் ஆண், பெண் சமத்துவம் பற்றியும் குறிப்பிடுகின்றன.

***பயிற்சி வினாக்கள்***

1. *தர்ம சாத்திரம் பற்றி மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.*
   *அ. தர்ம சாத்திரங்களின் கட்டமைப்பு*
   *ஆ. சால்வர்ணத்தவரும் அவர்தம் கடமைகளும்*
   *இ. சட்டங்கள்*
2. *தர்மம் பற்றிய நூல்கள் எனும் வகையில் ஸ்மிருதிநூல்கள் பெறும்முக்கியத்தவத்தினை விளக்குக.*
3. *''தர்ம சிந்தனைகளினதும் வழமைகளினதும் கருவூலமாகத் திகழ்பவை ஸ்மிருதிகள்'' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.*

**உசாத்துணைகள்**


1. Banerji, Sures Chandra.(1999). A Brief History of Dharmaśastra. Abhinav Publications.
2. Donald R. Davis, Jr (2010). The Spirit of Hindu Law. Cambridge University Press.
3. Mandagadde Rama Jois (1984). Legal and Constitutional History of India: Ancient legal, judicial, and constitutional system. Universal Law Publishing.
4. Kane, P.V. (1973). History of DharmaŚastra. Poona: Bhandarkar Oriental Research Institute.

# அத்தியாயம் - 07
# இராமாயணம்

7.1 இதிகாசங்கள் ஓர் அறிமுகம்
7.2 இராமாயணம் - அறிமுகம்
7.3 வான்மீகி இராமாயணத்தின் அமைப்பு
7.4 இராமாயணம் குறிப்பிடும் சமூகநெறி
7.5 இராமாயணத்தில் சமயம்
7.6 இராமாயணத்தில் கல்வி

**அத்தியாயச் சுருக்கம்**

இதிகாசம் என்பது கடவுள், கடவுள் அவதாரம் அல்லது பெரும் வீரர்கள் நிகழ்த்திய அரும்பெரும் வீரச் செயல்களையும், நீதிநெறிகளையும் விபரிக்கும் புராண வரலாறாகும். இதி-ஹ-ஆஸ என்பதற்கு இப்படி உண்மையில் இருந்தது என்பது அர்த்தமாகும். இந்துமதத்தைப் பொறுத்தளவில் இராமாயணம், மகாபாரதம், சிவரகசியமும் இதிகாசங்கள் என்றழைக்கப்படுகின்றன. நில உடமைச் சமுதாயம் ஒரு காலகட்டம் வரை இருந்து அடுத்த கட்டத்திற்கு மாறிச் செல்லும் போது அதன் பரிணாமங்கள், நிகழ்வுகள், மாறுதல்கள் அனைத்தும் வாய்மொழியாக ஒருகாலகட்டம் வரையிலும் குருவின் மூலமாக சீடர்களுக்குச் சொல்லி வைக்கப்பட்டது. செவிவழிச் செய்தியாக சில காலம் வரையிலும் இருந்து சமுதாய பரிணாம வளர்ச்சியை தனதாக்கிக் கொண்டு பல ஆயிரம் ஆண்டுகள் கால ஓட்டத்தையும், அதன் சமூக நியதிகளை இதிலிருந்து எடுத்து மேற்கொள்கள் காட்டிட வும், நீதி சொல்லவும், சமுதாய சட்டங்களாகவும் காலத்தை கடந்தும், தெளிவாகவும், எளிமையாகவும், சிக்கலான, நெருடலான, மனிதகுலச் சிந்தனைகளை உள்வாங்கி உயர்ந்து நிற்கிற வரலாற்றுப் பெட்டகமே இதிசாசமாகும்.

**அத்தியாயத்தின் நோக்கம்**

இந்து நாகரிகத்தினை ஒரு பாடமாக் கற்கின்ற மாணவர்களுக்கு இராமாயணம் தோற்றம் பெற்ற காலப்பிண்ணனி, அதன் கட்டமைப்பு, மக்களது வாழ்க்கையில் இந்நூல் பெற்றுள்ள முக்கியத்துவம் பற்றி விரிவாக அறிவினை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தினை மாணவர்கள் திறன்பட கற்பதன் மூலம் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணம் பற்றி அறிந்து கொள்வதுடன் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சமய, சமூக, அரசநெறி பற்றியும் இது மக்களிடம் கொண்டுள்ள தொடர்பு குறித்து தெளிவான அறிவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

### 7.1 இதிகாசங்கள் ஓர் அறிமுகம்

இந்துப்பண்பாட்டு வளர்ச்சிலே புராணங்களை அடுத்து முக்கியத்துவம் பெறுகின்ற இலக்கியம் இதிகாசங்களாகும். இதிகாசம் என்பது இதி + ஹ + ஆஸ எனப் பிரித்து பொருள் விளக்கப்படுகின்றது. இதி - இவ்வாறு, ஹ - எங்கும் பிரசித்தமாகிய, ஆஸ - இருப்பது எனப் பொருள்படுகிறது. இதன் பொருளை இப்படி இவ்வாறு நடந்தது என்று கூறுவர்.

இதிகாசம் தோன்றிய பின்னணி குறித்து நோக்குகின்ற போது வேத இலக்கியங்களிலும் உபநிடதங்களிலும் பேசப்பட்ட தத்துவ கருத்துக்கள் பாமர மக்களை சென்றடையாமையினால் இத்தகைய கருத்துக்களை பாமர மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிய கற்பனை கலந்த கதைகளாக எடுத்தும் விளக்கும் வகையில் இதிகாசங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு வேத இலக்கியங்களில் கூறப்பட்ட கருத்துக்களை விரிவுபடுத்திக் கூறும் நெறியாக விளங்குவதனால் இதிகாசங்களை ஐந்தாம் வேதம் என்றும் அழைக்கின்ற மரபும் காணப்படுகின்றது. அத்தோடு சட்டமும் ஒழுங்கும் இல்லாத காலத்தில் இந்து சமூதாயத்தை நெறிப்படுத்தி வழிநடத்த எழுந்த இலக்கியங்களாக இதிகாசங்களின் தோற்றத்தினை கருதுபவர்களும் உள்ளனர். மக்கள், தேவர், அரசர் முதலியோர்களுக்கிடையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் கதைகளையும் கொண்டு சமய நெறியினையும் தத்துவத்தினையும் ஒழுக்கங்களையும் மக்களுடைய நல் வாழ்வுக்கு ஏற்ற வகையில் போதிக்கும் இலக்கியங்களாக இதிகாசங்கள் தோற்றம் பெற்றன.

### 7.2 இராமாயணம் - அறிமுகம்

இதிகாசங்களில் முதலில் தோன்றிய இலக்கியம் இராமாயணமாகும். இராமாயணமானது வான்மீகி என்னும் முனிவரால் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்ட மிகப் பழைய இதிகாசமாகும். இது கி.மு 5ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 2ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இயற்றப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது. இது இந்து சமயத்தின் முக்கியமான நூல்களுள் ஒன்றாகும்.

மூலநூலான வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவிப் பல இந்திய மொழிகளிலும் பிறநாட்டு மொழிகளிலும் இராமாயணம் இயற்றப்பட்டுள்ளது.

சோழர்காலத்திலே கம்பர் எனும் புலவரால் தமிழ் மொழியிலும் இந்திமொழியிலே துளசிதாசர் என்பவராலும் மலையாள மொழியிலே எழுத்தச்சன் என்பவராலும் அசாமில் மாதவ் கங்குனி என்பவராலும் ஓரியாவில் பலராம்தாகவ் என்பவராலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி கெமர் மொழியிலுள்ள ரீம்கெர், தாய்மொழியில் உள்ள ராமயென், லாவோ மொழியில் எழுதப்பட்ட ப்ரா லாக் ப்ரா லாம், மலாய் மொழியில் எழுதப்பட்ட இக்காயத் சேரி ராமா போன்றவை வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவி எழுந்தவையாகும்.

இராமாயணம் என்னும் பெயர் இராமன், அயனம் என்னும் சொற்களின் கூட்டாகும். காவியத்தின் மையப் பாத்திரத்தின் பெயரான இராம, இரண்டு சூழ்நிலை அர்த்தங்களை கொண்டுள்ளது. அதர்வ வேதத்தில் இது அடர், அடர் நிறம், கருப்பு என்று பொருள்படும். மற்றும் இரவின் இருள் அல்லது அமைதி என்று பொருள்படும் அயனம் என்னும் சொல் சமஸ்கிருதத்தில் பயணம் என்னும் பொருளுடையது. இதனால் இராமாயணம் என்பது இராமனின் பயணம் என்று பொருள்படும்.

வெவ்வேறு காலத்தில் இடம் பெற்ற இந்துசமயக் கதைகளின் தொகுப்பாக இராமாயணம் முக்கியத்துவம் பெறுகின்றது. இராம அவதாரம் விஷ்ணுவின் அவதாரமாகக் கொள்ளப்படும். இது இராமாயணத்தின் அடிப்படைக் கேட்பாகும்.

இராமாயணம் இந்து தர்மநெறிக்கும் மானுட வசிழுமியங்களுக்கும் அடிப்படையாகும். இராமாயணத்தில் நட்பு, தவம், அரச உபாயம், ஒழுக்கம் ஆகிய விடயங்கள் சிறப்பாகப் போதிக்கப்பட்டுள்ளன.

இராமாயணக் கதை மூலம் வட இந்திய கலாசார மரபுகள் தமிழகத்தில் பரவிய வரலாற்றை அறியமுடியும். இவை புதிய கலை மரபுகள் தோன்றுவதற்கும் அடிப்படையாக அமைந்தன. இந்துக்களின் விருந்தோம்பல், செய்ந்நன்றி அறிதல், யுத்த தர்மம், ஆச்சிரம வாழ்க்கை முறைகள் என்பவற்றை அவை பிரதிபலிக்கின்றன.

### 7.3 வான்மீகி இராமாயணத்தின் அமைப்பு

இராமாயணத்தின் கதை பல மட்டங்களில் தொழிற்படுகின்றது. ஒரு மட்டத்தில் இது அக்கால சமூகத்தை விவரிக்கின்றது. பரந்த பேரரசுகள், அடுத்த அரசர்களாக வரவிருக்கும் இளவரசர்களின் வாழ்க்கை, தாய்மாருக்கும் மாற்றாந் தாய்மாருக்கும்

இடையிலான போட்டி, உடன் பிறந்தோருக்கு இடையிலான அன்புப்பிணைப்பும் விசுவாசமும், இளவரசிகளை மணம் முடிப்பதற்கான போட்டிகள் போன்றவை இவற்றுள் அடங்கும். இன்னொரு வகையில் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும் ஒரு மனிதன், ஒரு தலைவனாக எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதையும் நிலைமைகளை ஒன்று போல எதிர்கொண்டு, சமயத்திற்கு தக்கபடி நடந்து, தனது சொந்தத் துன்பங்களுக்கு அப்பால் குடிமக்களை எவ்வாறு வழிநடத்துகிறான் என்பதையும் காட்டுகிறது. வேறோரு மட்டத்தில் இது, தீமையை ஒழித்து நீதியை நிலை நாட்டுவதற்காக மனிதனாகத் தனது ஏழாவது அவதாரத்தை எடுத்த விஷ்ணுவின் கதையும் ஆகும்.

இவ் இராமாயணத்தை வடமொழியில் பாடியவர் வான்மீகி முனிவராவார். இதனால் வான்மீகி இராமாயணம் எனவும் இது அழைக்கப்படுகின்றது. இவ் இராமாயணத்தைக் கற்றுணர்ந்த ஆரியவர்த்தனர் வான்மீகியை ஆதிகவி என்று புகழ்ந்தார். இதனால் இவருடைய இராமாயணம் ஆதிகாவியம் என்று அழைக்கப்பட்டது.

வால்மீகி இராமாயணம் 24000 சுலோகங்களையும் 500 சருக்கங்களையும் கொண்டமைந்த நூலாகும். இவை மொத்தம் ஏழு காண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இவை இராமரின் பிறப்பில் இருந்தும் இறப்பு வரை விளக்குகின்றன. அவை

1. பால காண்டம் - இராமனினதும் உடன் பிறந்தோரினதும் பிறப்பு, கல்வி, திருமணம் என்பவை பற்றிய கதைப் பகுதி
2. அயோத்தி காண்டம் - இராமன் சீதையை மணந்து கொண்ட பின்னர் இளவரசனாக அயோத்தியில் வாழ்ந்த காலத்துக் கதைப் பகுதி.
3. ஆரண்ய காண்டம் - இராமன் காட்டுக்குச் சென்றதும் அங்கு வாழ்ததும்.
4. கிஷ்கிந்தா காண்டம் - கடத்திச் செல்லப்பட்ட சீதையைத் தேடிச் செல்லும் போது வானரர் நாட்டில் இராமனது வாழ்க்கை.
5. சுந்தர காண்டம் - சீதையைச் தேடி அனுமன் இலங்கைக்குச் சென்றது, அங்கே சீதையைக் கண்டது ஆகியவற்றை உள்ளடக்கிய கதைப் பகுதி
6. யுத்த காண்டம் - இராமனுக்கும் இராவணனுக்கும் இடையிலான போரை உள்ளடக்கிய கதைப் பகுதி.
7. உத்தர காண்டம் - இராமன் அயோத்திக்கு திரும்ப வந்து அரசனானதையும் சீதை மீண்டும் காட்டுக்கு அனுப்பப்பட்டதையும் உள்ளடக்கிய கதைப் பகுதி.

இந்த இராமாயணத்தில் காணப்படும் முதல் காண்டமும் இறுதிக் காண்டமும் வால்மீகியால் எழுதப்பட்டதா என்பதில் சில ஐயப்பாடுகளும் நிலவுகின்றன. இவ்விரு

பகுதிகளினதும் மொழி நடை ஏனைய பகுதிகளிலிருந்து வேறுபடுவதும் அவற்றின் உள்ளடக்கங்களில் முரண்பாடுகள் காணப்படுவதும் இத்தகைய ஐயப்பாடுகளுக்குக் காரணமாகும். எனினும் பலர் இவ்வேழு காண்டங்களும் வால்மீகியால் எழுதப்பட்டதாகவே நம்புகின்றனர்.

### 7.4 இராமாயணம் குறிப்பிடும் சமூகநெறி

இராமாயணத்திலே ஒரு மனிதன் சமூகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு தேவையான நல்வழிகளைக் கூறுகின்றது. இவை சமூக அறநெறிக் கருத்துக்களை விளக்கியுள்ளன. ஒரு மனிதன் தன்னிலும் பெரியவர்களோடு எவ்வாறு பழகவேண்டும், தன்னிலும் இளமையானவரோடு எவ்வாறு பழக வேண்டும், சமூக வாழ்க்கையில் எவ்வாறான அறங்களைப் போற்ற வேண்டும், எவ்வாறான விடயங்களை தம் வாழ்விலிருந்து விளக்க வேண்டும் போன்ற சமூக அறநீதிக் கருத்துக்கள் படிப்படியாக புகட்டப்பட்டுள்ளன. குறிப்பாக மூத்தோரை மதித்தல், சகோதர பாசம், நன்றி மறவாமை, இல்லறம், விருந்தோம்பல், குருபக்தி, ஏகபத்தினி விரதம், கற்பு, பிறர்மனை நயவாமை, கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுதல், கள்ளுண்ணாமை, அடைக்கலம் வழங்குதல், சாதிவேறுபாடற்ற நட்பு போன்ற சமூக அறநீதிக் கருத்துக்கள் இராமாயணத்திலே வெளிக்காட்டப்பட்டுள்ளன.

சமூக அறவாழ்விலே மூத்தோரை மதித்தல் என்பது மதித்தல் என்ற உயரிய பண்பு. மேன்மையானது என்பதை இராமாயணத்திலே இராமன் தன் தந்தையினதும் சிற்றனையினதும் கட்டளைக்கு மதிப்பளித்து கானகம் செல்கின்றான். இராவணன் அதர்ம வழியில் போகின்றான் என்பதை அறிந்தும் அவன் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து போர்க்களம் புகுந்து உயிர் துறக்கின்றான் கும்பகர்ணன். பரதனுடன் போர் தொடுக்க சினந்தெழுந்த இலக்குமணன் இராமன் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு அமைததியாகின்றான்.

சகோதரத்துவப் பாசம் என்ற ஒரு விடயமானது இராமாயணத்திலே சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. இராமனனும் அவன் உடன் பிறந்தவர்களும், இராவணனும் அவன் உடன் பிறந்தவர்களும், வாலியும் சுக்கிரீவனும், சடாயுவும் சம்பாதியும் என்று இராமாயணம் என்பது உடன் பிறந்தவர்களது கதையாக உள்ளது. கருத்து வேறுபாட்டுக்கு இடம் தராமல் வாழ்ந்த உடன் பிறப்பாளர்கள் தசரதனின் மக்கள் நால்வர் மட்டுமே. அத்தோடு பிறகுடிப் பிறப்பாளல்களையும் உடன் பிறந்தவர்களாகவே கருதினான் கருதினான் இராமன். இராமனுக்குத் தானே விழைந்து அருந்தொண்டு செய்தவனை செய்தவன் இலக்குமன், இராமனுடைய கட்டளைக்கு பணிந்து ஆட்சியை ஏற்றவன் இராமனின் திருவடிகளைக் கொண்டு

ஆட்சி செய்கின்றான் பரதன். இராமன் தன் உடன்பிறப்பாளராக குகன், வாலியின் தம்பி சுக்கிரீவன், இராவணனின் தம்பி விபீஷனன் ஆகியோரை தனது உடன் பிறந்தவர்களதக ஏற்றுக் கொண்டான்.

நன்றி மறவாமை என்ற அறநீதிக் கருத்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இராவணனுக்காக போர்க்களம் சென்று தனது நன்றிக்கடனைத் தீர்த்துக் கொள்கின்றான் கும்பகர்ணன். இறந்த வாலியின் மீது விழுந்து புலம்பிய தாரை வாலியின் உதவியாதல் அமுதத்தைப் பெற்ற தேவனான இராமன் நன்றியுணர்வின்றி அவன் உயிர் கவர்ந்தவனாய் பேசப்படுகின்றது. செய்நன்றி உணர்தலும், அதற்கு கைமாறாக உயிரையே கொடுத்தலும் அறமாக கருதப்படுவதை அனுமான் கூற்று பின்வருமாரு விளக்குகுவதை,

''உதவாமல் ஒருவன் செய்த
உதவிக்குக் கைம்மாறாக
மற்றும் உண்டோ வயிற்றோ,
சிதையாத செலவில் அன்னான்
முன்கென்று ஆவி உலவானல்''

என்பதனால் அறியலாம்.

குருபக்தி என்ற சமூக அறநீதிக் கருத்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இராமன் தனது குருவாகிய வசிஷ்டர் மீது அதிக பக்தி கொண்டவனாக விளங்குகின்றான்.

இராமாயணத்திலே இல்லறம் பற்றியும் இல்லறத்தால் மேற்கொள்ள வேண்டிய விருந்தோம்பல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பரத்துவாச முனிவர் பரதனின் பெரும் சேனைக்கு தேவலோக போகத்தை வரவழைத்து விருந்தளிக்கின்றான். சீதை அசோக வனத்திலே சிறையிருந்த போது ஆச்சிரமத்திற்கு வரும் விருந்தினர்களை தான் இல்லாது இராமன் எவ்வாறு உபசரிப்பாரோ என்று ஏங்குகின்றாள். இதனை,

''அருந்து மெல்லடகு ஆரிட அருந்து மென்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்...''

எனும் பாடல் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

பிறர்மனை நயவாமை என்ற சமூக அறநீதிக் கருத்தும் இராமாயணத்திலே விளக்கப்பட்டுள்ளது. இராவணன் சீதை மீது மோகம் கொண்டதாலும் சுக்ரீவனின் மனைவி மீது வாலி மோகம் கொண்டதாலும் இறுதியில் அழிவடைகின்றனர். மேலும் இந்திரன் கௌதம முனிவரின் வேடத்தில் வந்து அகலிகையுடன் கூடியதால் சாபத்திற்கு உள்ளாகின்றான். தசரதன் மகன் இராமன் ஏகபத்தினி விரதனாக

இருந்ததை இராமாயணம் சுட்டிக் காட்டுகின்றது. இராவணன் சீதை மீது ஆசை கொண்டு பிறர்மனை நயந்த செயலை,

''….. ….. வேறு ஒரு குலத்தால்

தேவியை நயந்து சிறை வைத்த செயல் நன்றோ''

என மாலியவான் விலக்கவும் தமிழரின் பிறர்மனை நயவாப் பண்பை வெளிப்படுத்துகின்றன.

இதிகாசங்களிலே கற்பு, ஏகபத்தினி விரதம் பற்றிய கருத்துக்களும் காணப்படுகின்றன. இராமன் சீதையைத் தவிர வேறெந்தப் பெண்ணையும் மனதளவிலேனும் நினைத்துப் பார்க்காது ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஏகபத்தினி விரதத்தைக் கடைப்பிடிக்கின்றான். மேலும் கற்புக்கு இலக்கணமாக சீதை கூறப்படுகின்றாள். இதனை அசோக வனத்திலே சீதையைக் கண்டு வந்து இராமனிடம் அனுமன் கூறும் கூற்று மூலம் அறிய முடிகின்றது.

''கண்டனன் கற்பினுக் கணியைக் கண்ணால்'' என சுந்தர காண்டம் 72ஆவது பாடலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுதல் எனும் சிந்தனையானது வெளிப்படுத்தப்படுகின்றது. இராமாயணத்திலே தசரசன், கைகேயி கேட்ட வரத்திற்கிணங்க பதினான்கு வருடகாலம் இராமன் வனவாசம் செல்ல ஒப்புக் கொள்கின்றான். சுக்கிரீவனின் மனைவியை வாலி கவர்ந்த வேளையில் இராமனிடம் சுக்கரீவன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இராமனும் அவ்வாறே செய்கிறான்.
பெண்பாவம் பொல்லாதது என்னும் சிந்தனையானது புலப்படுகின்றது. எடுத்துக்காட்டாக இராவணன் சிறந்த சிவபக்தனாக விளங்கிய போதும் அவன் சீதையைச் சிறைப்பிடித்ததன் காரணமாக அவளின் கண்ணீரால் அவன் அழிந்தது மட்டுமின்றி தனது சாம்ராஜ்யத்தையும் அழித்துக் கொண்டான்.

பழியுணர்ச்சி என்பது அழிவையே தரும் எனும் சிந்தனையானது புலப்படுத்தப்படுகின்றது. மந்தரை(கூனி) என்பவள் இைாமன் மீது சிறுவயதிலே கொண்ட பழியுணர்ச்சியின் காரணமாக கைகேயி மனதிலே நஞ்சை விதைத்து பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. இதனைக் கம்பர் விளக்குமிடத்து கூனி பழியுணர்ச்சியைத் தீர்த்துக் கொள்ளும் நோக்குடன் பரதன் மேல் பரிதாபம் கொண்டவளாய்,

''தந்தையும் கொடியவன், நற்றாயும் தீயால்

எந்தையே பரதனே என் செய்வான்…..''

என்று கலங்குவதாகக் கூறுகின்றார்.

சாதி வேறுபாடற்ற தூய நட்பு பற்றியும் இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளது. அன்பாலும், நட்பாலும் ஒன்று சேர்ந்து உற்றுழி உதலிகள் பெறும் உயர்ந்த நிலையை இராமனின் நட்புச் சூழல் புலப்படுத்துகின்றது. அரச குடும்பத்தைச் சார்ந்த இராமன் வேடர் குல குகனுடன் நட்பு கொண்டார். வானர இனத்தினைச் சேர்ந்த சுக்கீரிவனுடன் நட்பு கொண்டார். தாயினும் நல்லானாகியகுகனைப் பார்த்து இராமன் என்னுயிர் அனையாய் நீ என்று பொற்றுகின்றார். மேலும்,

‘‘குககொடும் ஐவர் ஆனோம் முன்பு பின் குன்று சூழ்வார்
மகனொடும் அறுவர் ஆனோம் எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்’’

என்று உடன் பிறந்தவராக நோக்கும் உயர் பண்பே உண்மையான நட்புக்கு இலக்கணமாக காட்டப்படுகின்றது. அன்பும் தூய உள்ளமும் சாதி வேற்றுமையை அடித்து வீழ்த்திய நிலையை இதன் மூலம் நாம் காணலாம்.

அடைக்கலம் நல்கும் பண்பு உதவி நாடி வந்தவர்க்கு உறுதுணையாக நின்று அடைக்கலம் அளிக்கும் உயர்ந்த பண்பு இராமாயணத்தில் புலப்படுகின்றது. பகைவன் தம்பி ஆயினும் அடைக்கலம் வேண்டி அண்டியவனை ஏற்று பாதுகாப்பளித்த உயரிய பண்பு இராமனிடம் அமைகின்றது. விபீஷணன் அடைக்கலம் பற்றி இராமனினுடன் இருந்தவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் போது மாருதி ஆற்றிய பேரூரை,

‘‘ஆவத்தின் வந்து அபயம் என்றானை
ஆயிர்த்த அகல விடுதி ஆயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடல் அயிர்த்தது
ஒவ்வாதோ’’

என அமைந்துள்ள அடிகளால் இவ்வெண்ணம் வெளிப்படுவதைக் காணலாம்.

கள்ளுண்ணாமை பற்றி இராமாயணத்திலே எமுத்தியம்பப்பட்டுள்ளது. கள்ளுண்ணாமை பற்றிய கருத்துக்களைச் சக்கீரிவன் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது. கள்ளுண்பவன் செய்நன்றியை மறக்கின்றான், சூழ்நிலை உணர்வின்றி மயங்குகின்றான், தீய செயல்களில் ஈடுபடுகின்றான். கள்ளுண்டு நிலையிழந்த சுக்கீரிவனே கள்ளுண்ணலின் தீமையை,

‘‘வஞ்சமும் களவும் பொய்யும்
மயக்கமும் மரபுஇல் கொட்பும்

தஞ்சம் என்றாரை நீக்கும்
தன்மையும் களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் அணங்கும் தீரும்
கள்ளினால் அருந்தினான்
நஞ்சமும் கொல்வது அல்லால்
நரகினை நல்காது அன்றே''

என்று கூறுகிறார். தீமைகள் பலவற்றுக்கும் அடிப்படையாகவும், தூண்டுதலாகவும் கள்ளுண்ணல் அமையும் பாங்கு இதனுடாக இராமாயணத்தில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

**7.5 இராமாயணத்தில் சமயம்**

பண்டைய இந்தியர் இம்மைக்கும் மறுமைக்கும் உதவுவன தெய்வங்களே என்ற நம்பிக்கையுடையவர்களாதலால் உலோகாயதத்தை வெறுத்தனர். நாஸ்திகம் இராசதோஷத்தில் ஏற்படுவதெனவும் முறை திறம் பாத மன்னர், மக்களையும் அவர்களது நம்பிக்கையையும் இரசிப்பவரெனவும் கருதப்பட்டன. அரசஅதிகாரத்தோடு பாரமார்த்திகக் கருமத்தையும் தொடர்பு படுத்தியமையில் இருந்து தங்கள் சமயத்தின் மீது பண்டைய இந்தியர் கொண்டுள்ள பற்றை அறியலாம். மக்களுள் வைதிகர்களாயுள்ளவர்களின் சமயத்தை இராமாயணம் போற்றும் முறைமையாலே தான் புத்தரைநாத்திகன் என இராமன் கூறுவதாக பிற்காலத்தில் இடைசெருகல்காரர் பல பாக்களை புகுத்தினார்கள்.

வைதிக மதத்தை போற்றும் இராமாயணம் பண்டைய இந்தியர் சமயக் கிரியைகளில் அழ்ந்திருந்தனரென கூறுகின்றது. காரல, மாலை தேவர்களையும் பிதிரர்களையும் பூசித்தல், யாகங்கள் செய்தல், சிந்ததையை அடக்கித் தியானித்தல், விரதங்கள் அனுட்டித்தல், விசேட தினங்களில் கலவி தவிர்த்தல் என்பவற்றை நியமமாகக் கொண்டனரெனக் கூறுகின்றது. சந்தோசமான கொண்டாட்டங்களிலும் துக்க தினங்களிலும் தேசியக் கொண்டாட்டங்களிலும் சமயானுஷ்டானங்கள் மேற் கொள்ளப்பட்டன.

இராமனது விவாகம், முடிசூடல், அவன் அயோத்திக்கு (வனவாச முடிந்து) மீளல் முதலிய சம்பவங்களின் போது சமயச் சடங்குகள் பல நிகழ்த்தப்பட்டன. எண்ணிய எண்ணியாங்கு முடித்தற்குத் தன்னடக்கத்தை மேற்கொள்ளல், கடவுளரை வேண்டல், துர்நிமித்தங்களின் போது தெய்வந்தொழுதல் முதலியவற்றை நாளாந்த வாழ்க்கையில் இன்றுள்ள இந்துக்கள், பௌத்தர்கள் மேற்கொள்வது போல கடைப்பிடித்து வந்தனர். இருடிகள்(முனிவர்கள், யதுக்கள்) மக்களால் மேலாக

மதிக்கப்பட்டனர். இவர்கள் பிரமத்தையறிந்தவர்கள், வேதாத்தியாயனம் செய்பவர்கள், மாவுரி தரித்தவர்கள், தவத்தையும் தன்னடக்கத்தையும் கடைப்பிடிப்பவர்கள், அஹிம்சா விரதிகள், சத்திய நெறியினர், விருப்பு வெறுப்பு அற்றவர்கள், அரசர்களாலும் வணங்கப்படுவர்கள். பெரும்பாலும் துறவற வாழ்க்கை பிராமணரது ஏகபோக உரிமையாகவே இருந்தது. பிரமரிஷி, இராசரிஷி என்னும் பதங்கள் பிராமணர் மட்டும் அல்ல சத்திரியரும் இருடிகளாகலாமென்பதைக் காட்டுகின்றன.

இராமாயணம் பிரதிபலிக்கும் மதம், பல தெய்வக் கொள்கையுடைய புறச் சமயமாகும். வேதத்திற் கூறப்படும் தெய்வங்கள் எல்லாம் இராமாணத்தில் இடம் பெறுகின்றன. நாளாந்தம் தெய்வ வழிபாடு செய்தல் பண்டைய இந்தியர்களின் சிறப்பான இயல்பாகும். பிரமன், விஷ்ணு, பிரஸாபதி, மாருதி, இயமன், மித்திரன், ஆதித்தர், உருத்திரர், ஸ்கந்தர், மகேஸ்வரன், சோமன், சுக்கிரன், பிரகஸ்பதி முதலிய தெய்வங்கள் இராமாயண பாத்திரங்களால் வழிபடப்பட்டன. இவர்கள் மதபேதமின்றி வேதத்தில் கூறப்பட்ட தெய்வங்கள் எல்லாவற்றையும் மக்கள் வழிபட்ட தெய்வங்களை நோக்குமிடத்து மதபேதமின்றி வேதத்தில் கூறப்பட்ட தெய்வங்கள் எல்லாவற்றையும் மக்கள் வழிபட்டு வந்தனர். வேதத்தில் கூறப்பட்ட தெய்வங்களை விட காமன், கார்த்திகேயன் முதலிய தெய்வங்களும் இராமாயணத்தில் அறிமுகப்படுத்தபப்பட்டன.

மேலும் வைஷ்ணவர்களுக்கும் சைவர்களுக்கும் இடையில் பிற்காலத்தில் ஏற்பட்ட மதபேதங்களுக்குரிய சில போக்குகள் இராமாயணத்தில் பதியப்பட்டிருக்கின்றன. இராமாயணத்தின் பிற்பகுதியில் வைணவமத வளர்ச்சிக்குரிய சுவடுகள் காணப்படுகின்றன. எனினும் வைணவர்களின் ஓர் அம்சமாகிய ‘‘இராமமதம்’’ வளர்ச்சியுற்றமையே இக்காவியம் பிரதிபலிக்கின்றது. இராமனைப் பின் தொடர்ந்தால் சுவர்க்கத்தை அடையலாம் என அயோத்தி மக்கள் இலக்குமணனுக்கு கூறிய கூற்று காலாந்தரத்தில் சமய முக்கித்துவம் பெற்றது எனலாம். இராமனை வழிபடுபவர்கள் சந்தானம் என்னும் சுவர்க்கத்தை அடைவார்கள் என கூறப்பட்டிருக்கின்றது. வைணவத்தின் இராமவழிபாடு பிற்காலத்தில் இராமாயணத்தோடு சேர்க்கப்பட்ட பகுதிகளால் பூரணத்துவம் அடைந்துள்ளது.

சைவசமய வளர்ச்சியைப் பற்றியும் இராமாயணம் குறிப்பிடுகின்றது. கௌசலை சிவனை வழிபட்டதாகவும், இராவணன் தான் செல்லுமிடம் எல்லாம் சிவலிங்கம் ஒன்றை எடுத்துச் சென்று முறைப்படி பூசித்து வந்தான் எனவும், 108 நாமங்களால் அர்ச்சித்தான் எனவும், அதனை வழிபட்ட பின்பு எடுத்த காரியங்கள் அனைத்திலும்

வெற்றி பெற்றான் எனவும் குறிப்பிடப்படுகின்றது. உத்தர காண்டத்தில் சிவவழிபாடு பற்றிய பூரணமான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. பால காண்டத்தில் உமையைப் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. உத்தர காண்டம் எழுதப்பட்ட கால கட்டத்தில் சிவவழிபாடு நன்கு தாபிக்கப்பட்டு விட்டது. ஆதியில் ஆடல் பாடல்களால் சிவவழிபாடு செய்யப்பட்டது. பின்னரே தந்திரங்களில் காணப்படும் விரிவான கிரியைகள் ஏற்பட்டன.

பசு வணக்கம் இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புசவை அடித்தால் மகா பாதகம் எனக் கொள்ளப்பட்டது. பசு பரிசுத்தமான விலங்கு என ஆரியர் மதித்தனர். வானரமெனினும் தெய்வசக்தி படைத்த தெய்வப்பிறவியெனவும் அநுமனின் வணக்கம் இராமாயணத்தோடு தொடர்புள்ளதெனவும், இராமாயண காலத்துக்கு முன் அநுமன் வணக்கம் இருந்திருக்க வில்லை எனவும் இராமாயணத்தில் அறியப்படுகின்றது. பரத்துவாசரின் வேண்டுகோளின் படி சீதை சியாமா என்னும் ஆலமரத்தை வழிபட்டார் எனவும் இராவணன் தன்னை கவர்ந்து செல்லும் போது பல்வேறு மரங்களுக்கும் உரிய தெய்வங்களை தன்னை இராவணன் கவர்ந்து செல்லும் விஷயத்தை இராமனுக்கு தெரிவிக்கும்படி வேண்டினாள் என்று கூறுவதில் இருந்து மரவணக்கம் அந்நாளில் நிலவியதென்றும் கொள்ளலாம்.

கங்கை, யமுனை, காளிந்தி, தருமதை போன்ற நதிகளும் பரிசுத்தமானவையெனக் கருதப்பட்டு வழிபடப்பட்டன. கங்கா – யனுனை சங்கமும் புண்ணிய தீர்த்தமாகக் கொள்ளப்பட்டது. இந்நதிகளில் நீராடுதல் பாவத்தை தீர்க்கும் எனவும் கருதப்பட்டது. இராமன் இராச்சியத்தை மீண்டும் பெற உதவும்படி கங்கைக்கு வழிபாடியற்றினால் சீதை. இராவணன் நருமதையை வழிபட்டான். இராமன் நீராடியதால் நதிகளும், வாவிகளும் பரிசுத்தமடைந்தனவென அயோத்திய காண்டச் செய்யுள் ஒன்று கூறுகின்றது. எனவே நதி வணக்கம் பணடையது என்பதும் பிரசித்தி பெற்றது என்பதுவும் அறியப்படுகின்றது.

### 7.6 இராமாயணத்தில் கல்வி

இராமாயண காலத்தில் எல்லாச் சாதியாரிடையிலும் கல்வி வளர்ந்து வந்தது. மக்களெல்லோரும் அறிவியலில் சிறந்த ஞானம் பெற்றிருந்தனர். விவேகத்தையும் கல்வியையும் ஆதாரமாகக் கொண்டு சீவனேபாயஞ் செய்தவர்கள் பலர் அந்நாளில் இருந்தனர். இராமாயண பாத்திரங்கள் எல்லோரும் சிறந்த அறிவாளிகள். கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு இருந்தது.

நாவன்மை பாண்டியத்தின் அறிகுறியாகக் கொள்ளப்பட்டது. அநுமன் ‘‘சொல்லின் செல்வன்’’ இராமனால் வர்ணிக்கப்படுகிறான். கோட்டார்ப் பிணிக்குந்தகைய சொற்களால் அழகாக பேசக்கூடியவன் அநுமன் என இராமன் கூறுகின்றான்.

ஆச்சிரமங்களில் பிரமச்சாரிகள் பாரமார்த்திகச் சார்புள்ள கல்வி கற்றார்கள். நகரங்களிலும் கல்விக் கழகங்கள் இருந்தன. வேத பாடசாலைகளும் பல இருந்தன. இற்றைக்கால பாடசாலைகள் போன்று ஒழுங்கான முறையில் அவை அமைந்திருந்தனவோவெனக் கூற முடியாது. வழக்கமாகப் பிராமணர்களே ஆசிரியர்களாக இருந்தனர். சத்திரிய, வைசிய வருணத்தாரும் ஆனையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை முதலியவற்றைக் கற்பித்தனர். தத்துவசாத்திரத்தை பிராமணர்களும், ஞான முதிர்ச்சியும், சுகுணமும், முதுமை உடையோர்களும் கற்பித்தனர். ஆசிரியர் ஐம்பெருங் குரவருள் ஒருவரென மதிக்கப்பட்டார். ஆசிரிய மாணவ சம்பந்தம் முறையே ஒருமரத்தின் வேருக்கும் அதன் கிளைக்கும் உள்ள தொடர்பு போன்றதென இராமாயணம் கூறுகின்றது. சமூகத்தில் ஆசிரியருக்கு மிக உயர்ந்த மதிப்பு இருந்து வந்தது.

கற்பிக்கத் தொடங்கமுன் மாணவர்கள் நீரைத் தொட்டுத் தம்மைச் சுத்தஞ்செய்து கொள்ளுமாறு பணிக்கப்பட்டனர். சில பாடங்கள் வருடத்தில் குறிப்பிட்ட பருவங்களிலேயே கற்பிக்கப்பட்டன. சாம வேதம் ஆவணி, புரட்டாதி மாதங்களில் கற்பிக்கப்பட்டது. நூல்களை மனப்பாடாக்கும் முறை அந்நாளில் நிழவியது. வேதங்களை மனனஞ் செய்தலும் வேதாப்பியாசம் செய்தலும் மாணவர் கடமையாகும். வேதங்கள் நெட்டுரப்பண்ணப்பட்டன. தர்மசாத்திரங்களின் படியே வேதங்கள் கற்பிக்கப்பட்டன. வேதங்கள் சொல்பவற்றை எல்லோரும் எற்றுக் கொள்ள வேண்டும். சமய தத்துவ விவாதங்கள் நடைபெற்றன.

**பயிற்சி வினாக்கள்**

(அ) வான்மீகி இராமாயணம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) இராமாயணம் கூறும் சமயநெறி பற்றி கருத்துரைக்குக.

(இ) இராமாயணம் கூறும் சமூகநெறி விளக்குக.

(உ) இராமாயணம் மக்களுடன் கொண்டுள்ள தொடர்புகளை ஆராய்க

***உசாத்துணைநூல்கள்***

1. கலாநிதி ஆனந்த குருகே., (1966), இராமாயண சமூகம், கலைவாணி புத்தக நிலையம், இலங்கை.
2. சியாமளா,ம., (2022), கம்பராமாணம் கூறும் வாழ்வியல் ஆய்வுக்கட்டுரை, குருநானக் கல்லூரி, சென்னை.
3. Raghunathan, N. (transl.), Srimad Valmiki Ramayanam, Vighneswara Publishing House, Madras (1981)
4. Sattar, Arshia (transl.) (1996). The Rāmāyaṇa by Vālmīki. Viking.
5. Sachithanantham, Singaravelu (2004). The Ramayana Tradition in Southeast Asia. Kuala Lumpur: University of Malaya Press.
6. Sundararajan, K.R. (1989). "The Ideal of Perfect Life : The Ramayana". In Krishna Sivaraman; Bithika Mukerji (eds.). Hindu spirituality: Vedas through Vedanta. The Crossroad Publishing Co.

# அத்தியாயம் 08

## மகாபாரதம்

8.1 மகாபாரதத்தின் கட்டமைப்பும் காலமும்

8.2 மகாபாரதத்தில் தர்மம் பற்றிய சிந்தனைகள்

8.3 மகாபாரதத்தில் பொருளியல் சிந்தனைகள்

8.4 மகாபாரதத்தில் விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகள்

8.5 மகாபாரதத்தில் அரசியல் சிந்தனைகள்

8.6 மகாபாரதத்தில் வெளிப்படுத்தும் வாழ்வியல் ஒழுக்க நெறிகள்

**அத்தியாயச் சுருக்கம்**

வேதத்தின் கருத்துக்களினை விளக்குவதற்கு தோற்றம் பெற்ற இலக்கியங்களில் இதிகாசமும் ஒன்று. இவ்விலக்கியங்கள் இந்திய நாட்டின் இந்துப் பண்பாட்டை வெளிப்படுத்தும் மூலங்களாக அமைகின்றன. இந்த இதிகாசங்கள் இந்துப் பண்பாட்டு அம்சங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. இதிகாசம் என்பது இதி + காசம் எனப் பிரிக்கப்பட்டு பொருள கொள்ளப்படுகின்றது. அதாவது இது இவ்வாறு முன்பு நடந்த கதை என்பதனை உணர்த்துகின்றது.

மகாபாரதம் பாரதத்தின் இரண்டு இதிகாசங்களில் ஒன்றாகும். வியாச முனிவர் கூற விநாயகர் எழுதியதாக இது சமஸ்கிருததில் இயற்றப்பட்டுள்ளது. இந்தியத் துணைக்கண்டப் பண்பாட்டை பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த இதிகாசம் இந்து சமயத்தின் முக்கியமான நூல்களில் ஒன்று.

அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் மனிதனுடைய நால்வகை நோக்கங்களையும், சமூகத்துடனும், உலகத்துடனும் தனிப்பட்டவருக்குரிய உறவுகளையும், பழ வினைகள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

தர்மத்தினை வாழ்வின் இலட்சியமாகக் கொள்ள வேண்டுமென போதிக்கும் இதிகாசமான மகாபாரத நூலினது சிறப்பினையும் அந்நூல் வெளிப்படுத்தும் தத்துவக்கருத்துக்களையும் ஆராய்வதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இந்த அத்தியாயத்தினைக் கற்பதனூடாக மாணவர்களிடம் இதிகாசங்கள் இந்து நாகரிக கற்கையில் பெறும் முக்கியத்துவத்தினையும் மகாபாரதம் மனிதனது வாழ்வியலை பண்படுத்தும் ஒரு இலக்கியமாக திகழ்வதனையும் அந்நூலானது இந்து மக்களிடையே பெறுகின்ற சிறப்பினையும் அறிந்து கொள்ள முடியும்.

**8.1 மகாபாரதத்தின் கட்டமைப்பும் காலமும்**

இவ்விலக்கிமானது 74,000ற்கு மேற்பட்ட பாடல் அடிகளையும், நீளமான உரைநடைப் பத்திகளையும் கொண்டு விளங்கும் இந்த ஆக்கத்தில் 18 இலட்சம் சொற்கள் காணப்படுகின்றன. இதனால் இது உலகின் மிக நீண்ட இதிகாசங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

மகாபாரதத்தின் முற்பட்ட பகுதிகள் வேதகாலத்தின் இறுதிப் பகுதியைச் (கி.மு. 5ஆம் நூற்றாண்டு) சேர்ந்தவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தொடங்கிய குப்தர் காலத்தில் இவ்விலக்கியமானது இதன் முழு வடிவத்தினைப் பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

நீண்டகாலமாகப் படிப்படியாக வளர்ச்சியடைந்தே இது இதன் முழு வடிவத்தைப் பெற்றிருக்கலாம் எனக்கூறப்படுகின்றது. முறையான பாரதம் எனப்படும் நூலின் மூலப்பகுதி 24,000 அடிகளைக் கொண்டது என மகாபாரதத்திலே அடையாளம் காணப்பட்டுள்ளது. வியாசரால் இயற்றப்பட்ட பாரதத்தின் மூலப்படுதி 8,000 அடிகளைக் கொண்டிருந்தது என மகாபாரதத்தின் ஆதி பருவம் கூறுகின்றது.

பாரத வம்சத்தின் பெருங்கதையினை உலகிற்கு எடுத்துரைப்பதே இவ்விலக்கியமாகும். இது குருசேத்திரப் போர் எனப்படும் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையிலான பெரும் போரை மையப்படுத்திய கதையாக இருந்தபோதும் இதில் பிரம்மம், ஆன்மா, உலகம் தொடர்பான த்துங்களையும் தன்னகத்தே விளக்கமாகக் கொண்டுள்ளமை சிறப்பாகும்.

ஒருவன் தனது செயல்களில் வெளிப்படுத்த வினைத்தூய்மையையும் வினைத்திட்பங்களையும் மகாபாரதம்இனிதே விளக்குகின்றது. இறுதியில் செயலில் தூய்மை இல்லாத அரசியல் சித்தாந்தங்களும் அதர்ம வழியில் முன்னேறும் வாழ்வியல் செயற்பாடுகளும் அழிவையேத் ஏற்படுத்தும் என்று உலகிற்கு எடுத்தியம்பும் இலக்கியமாகவும் திகழ்கின்றது என சிங்காரவேலு என்பவர் குறிப்பிடுகின்றார்.

மேலும், பின்வரும் பாடலின் ஊடாக மகாபாரதம் ஒரு ஞானக் களஞ்சியம் என்றும் அது மக்களின் நல்லொழுக்கத்திற்கும் சீரிய வாழ்விற்கும் சிறந்த வழிகாட்டியாகவும் அமைகின்றது என்பது புலனாகின்றது.

“விண்ணமுதை யொத்த வியாசர் விருந்தளித்த
புண்ணியனே வேதாந்தப் போதகனே! தண்ணிய நீள்
ஆழிசூழ் இவ்வுலகில் ஆழியான இன்னருளால்
வாழிநீ ஐயா மகிழ்ந்து”

மகாபாரதமானது 18 பருவங்களைக் கொண்ட விளங்குகின்றது.

1. ஆதி பருவம் - குரு இளவரசர்களது பிறப்பு மற்றும் இளமைக்காலம்
2. சபா பருவம் - இந்திரப்பிரஸ்த இராஜசூய யாகம் தொடக்கம் தருமன் சூது விளையாட்டில் ஈடுபட்டு வனத்திற்குச் செல்லுதல் வரை
3. ஆரண்யக பருவம் - பாண்டவர்களது 12 வருடகால வனவாசம் பற்றி எடுத்துரைப்பது.
4. விராட பருவம் - பாண்டவர்கள் விராடநாட்டில் மறைந்து வாழ்ந்த ஒரு வருடகால நிகழ்வுகள்
5. உத்யோக பருவம் - கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் அமைதியினை ஏற்படுத்த முயற்சிகளும், அம்முயற்சிகள் தோல்வியுற்றதும் போருக்கான நடவடிக்கைகள் பற்றியும் கூறப்படுகின்றது.
6. பீஷ்ம பருவம் - பகவத் கீதையானது கிருஷ்ணரால் அர்ச்சுனனுக்கு அருளப்பட்டமையும் பீஷமர் அமபுப் படுக்கையில் விழுவதனையும் விளக்குகின்றது.
7. துரோண பருவம் - துரோணரது தலைமையில் போர் தொடர்தல்.
8. கர்ண பருவம் - கர்ணனைத் தளபதியாகக் கொண்டு போர் தொடர்தல்.
9. சல்லிய பருவம் - சல்லியனைத் தளபதியாகக் கொண்டு இடம்பெற்ற இறுதிநாள் போர் இப்பர்வத்தில் கூறப்படுகின்றது.

10. சௌப்திக பருவம் - அசுவத்தாமனும், கிருபனும், கிருதவர்மனும் போரில் எஞ்சிய பாண்டவப் படைகளில் பலரை அவர்கள் தூக்கத்தில் இருந்தபோது கொன்றது பற்றி இப் பர்வத்தில் கூறப்பட்டுள்ளது.
11. ஸ்திரீ பர்வம் - இப் பர்வத்தில் காந்தாரி, குந்தி முதலிய குரு மற்றும் பாண்டவர் பக்கங்களைச் சேர்ந்த பெண்கள் துயரப்படுவது கூறப்படுகின்றது.
12. சாந்தி பருவம் - அஸ்தினாபுரத்தின் அரசனனாகத் தருமருக்கு முடிசூட்டுவதும்,புதிய அரசருக்கு சமூகம், பொருளியல், அரசியல் ஆகியவை தொடர்பில் பீஷ்மர் வழங்கிய அறிவுரைகளும் இதில் அடங்கியுள்ளன.
13. அனுசாசன பருவம் - இரண்டு துணைப்ப பர்வங்களை அடக்கியது. பீஷ்மரின் இறுதி அறிவுரைகள்.
14. அசுவமேத பருவம் - அசுவமேத யாகம் செய்வதனையும் உலகைக் கைப்பற்றுவதனையும் இது உள்ளடக்குகின்றது.
15. ஆசிரமவாசிக பருவம் - திருதராஷ்டிரன், காந்தாரி, குந்தி மற்றும் விதுரன் ஆகியோர் இமயமலையில் வனப்பிரஸ்தம் ஆச்சிரமத்தில் வாழ்ந்தபோது காட்டுத் தீக்கு இரையானது இப் பர்வத்தில் கூறப்பட்டுள்ளது.
16. மௌசல பருவம் - யாதவர்கள் தங்களுக்குள் நிகழ்த்திய சண்டையில் அவர்கள் அழிந்துபோனதை இப்பர்வம் விளக்குகின்றது.
17. மகாபிரஸ்தானிக பருவம் - பாண்டவர்கள் ஐவரும் இமயமலைக்குச் சென்றது, அங்கே தருமர் தவிர ஏனையோர் இறந்து வீழ்வது ஆகிய நிகழ்ச்சிகள் இப் பர்வத்தில் விளக்கப்பட்டுள்ளது.
18. சுவர்க்க ஆரோஹன பருவம் - தருமரின் இறுதிப் பரீட்சையும், பாண்டவர் சுவர்க்கம் செல்வதும் இதில் கூறப்பட்டுள்ளன.

## 8.2 மகாபாரதத்தில் தர்மம் பற்றிய சிந்தனைகள்

தர்மமே மகாபாரதத்தின் உயர்ந்த பண்பாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது, அன்பு தர்மமாகும் மோகம் அதர்மமாகும் என்பதனை போதிக்கின்ற நூலாக இது திகழ்கின்றது. கிருஷ்ணர், குலவழக்கத்தில் தர்மம் அடங்கியுள்ளது. தர்மத்தினை காக்கவும் குலவழக்கமானது பேருதவியாக உள்ளது. உண்மையில் கல்லிற்குள் சிற்பம் எங்ஙனம் அடங்கியுள்ளதோ அதுபோலவே குலவழக்கத்தில் தர்மம் அடங்கியுள்ளது. வாழ்வில் ஒவ்வொருவரும் தர்மத்தினை தேடி அறிவது அவசியம். அதைப்போலவே இந்திர பூஜையின் வழக்கத்தினை விடுத்து கோவர்த்தன பூஜையின் தர்மத்தினை அறியாவிடில் யாதவர்கள் முத்திக்கான மார்க்கத்தினை அறியமாட்டார்கள். அதாவது, குலவழக்கத்தினை தியாகம் செய்பவனும்

தர்மத்திலிருந்து விடுபடுகின்றான். குலவழக்கத்தினை முழுமையாக கடைபிடிப்பவனும் தர்மத்தின் பிராப்தத்தினை பெறுவதில்லை.

அன்னப்பறவையானது, பாலில் கலந்துள்ள நீரினை விடுத்து பாலை மட்டுமே அருந்தும் சக்தி கொண்டது. அந்தவகையில் உண்மையான தர்மத்தின் பிராப்தம் பெறுவதற்கு விவேகம் என்னும் ஞானத்தினை பெறுவது அவசியம். அப்படி ஒரு ஞானத்தினைப் பெறாமல் எது தர்மம் என்று ஏற்கப்பட்டதோ அது தர்மம் அல்லாமலும் இருக்கலாம். அதாவது ணயர்வதற்கு விவேகத்துடன் செயலாற்ற வேண்டும்.

தர்மத்தினை கடைபிடிப்பதனால் சுகம் ஏற்படும் என்பது தவறு அதாவது தர்மத்தினை பின்பற்றுவதே சுகம்தான் என்பதை அறிதல் வேண்டும். சுகத்தின் வழியில் ஈர்க்கப்படாது  தர்ம வழியில் திடமான நிலையில் நின்றால் எல்லாம் வல்ல இறைவனது நல்லருள் விலகிச்செல்லாது.

தர்மம் எங்கு உள்ளதோ  அங்கு இறைவன் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்வான். அதாவது இறைவன் வெளிப்பட வேண்டும் எனில் அங்கே தர்மம் இருக்க வேண்டும். தரமம் ஒன்று மட்டுமே தெய்வத்தினை வெளிப்படுத்தும் வல்லமை கொண்டது தர்மமே. சுபாவத்திலே தர்மத்தினை கடைபிடிப்பவர்களை மகாத்மாக்கள் என்பார்கள். தர்மபுத்திரர், கர்ணண், பீஷ்மர் முதலியோர் தர்மத்தின் அடையாளமாகக் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

தரம நிலையில் தவறாது நிற்பவர்களுக்கு மனத்தெளிவு இருக்கும். அவர் மனதில் ஐயம் இருக்காது. ‘‘தர்ம வாணிஞ்ய கோ ஈனஹ ஜஹன்ய புருஷாதமஹ!’’ அதாவது தர்மம் நமக்கு ஏதோ தரும் என்ற ஆசையில் தர்மத்தினைக் கடைபித்தால் அது தர்ம வியாபாரம் ஆகும். அதாவது தர்மத்தின் வழியில் நடப்பதே சவாழ்வின் இலட்சியமாகக் கொண்டு நடக்க வேண்டும் என இந்நூல் வலியுறுத்துகின்றது.

தர்மத்தினைக் கடைபிடித்து வரும்போது துன்பத்தினை பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் எம்முள் உருவாகிவிடுகின்றது. நாம் கடைபிடிக்கும் தர்மத்தால் இறைவன் நமக்குத் துணையாய் இருப்பார் என்பதே மகாபாரதத்தின் எடுத்துரைக்கப்படும் உயர்ந்த அம்சமாகும்.

## 8.3 மகாபாரதத்தில் பொருளியல் சிந்தனைகள்

மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ள பொருளியல் தொடர்பான கருத்துக்களில் வரிசேகரிப்பு, மக்கள் நலன், அவசரகால நிலைமைகளில் திறைசேரி முகாமைத்துவம் போன்ற விடயங்கள் அதிக முக்கியத்தவப் படுத்தப்பட்டுள்ளன. நீதியான முறையில் விளைச்சலில் ஆறில் ஒரு பகுதியைக் கணிப்பிட்டுப்பெறுதல், குற்றம் செய்தவர்களுக்கு விதிக்கப்படும் தண்டங்கள் பறிமுதல்கள், வியாபாரிகள், வர்த்தகர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் பாதுகாப்பிற்கு பதிலாக தர்மசாசனங்களின்படியான தீர்வைகள், ஆகியவற்றைக் கொண்டு ஒரு அரசன் தனது திறைசேரியை நிரப்ப வேண்டும்.

அரசன் முடிந்த அளவுக்கு முழு இராச்சியத்திலிருந்தும் வரிகளைச் சேகரிக்கமுயல வேண்டும். அப்படியிருக்கும்போது முழு இராச்சியமுமே அவனுக்குத் திறைசேரியாவதுடன், அவனது திறைசேரி அவனது படுக்கையறையாகவே ஆகிவிடுகிறது என பீஷ்மர் உபதேசிக்கின்றார். ஆனால், வரிகளைச் சேகரிக்கும் விஷயத்தில் அரசன் சம்பந்தப்பட்ட சாஸ்திரங்களில் கூறப்பட்ட கொள்கைகள், விழுமியங்களைப் பின்பற்றியே ஒழுக வேண்டும். அவற்றை மீறினால், அரசனும் நாடும் அழிந்து போகவேண்டிவரலாம். அந்தவகையில் தனது மூடத்தனத்தால், தர்ம சாஸ்திரங்களில் கூறப்படாத அநியாய வழிகளில், மக்களை வருத்தி வரிகளைச் சேகரிக்கும் பேராசை பிடித்த அரசன் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொள்ளுகின்றான்.

கொடுக்கின்றவரின் வல்லமையைக் கருத்தில் கொள்ளாமல், வரிகள் விதிக்கப்படக்கூடாது. விளைச்சலையும், அதற்காக ஒருவர் பட்டபாட்டையும் கணக்கில் எடுக்காமல் எந்த விதவரியும் வசூலிக்கப்படலாகாது. ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு பாடுபட்ட ஒருவரும், தானும் நீதியான முறையில் பிரித்தெடுக்ககககூடிய விதத்திலே நன்கு சிந்தித்து அரசன் வரிகளை விதிக்க வேண்டும்.

ஒரு நாட்டின் பொருளாதாரச் செழிப்பு பெருமளவிற்க விவசாயிகளிலும், வர்த்தகர்களிலும் மட்டுமே தங்கியிருக்கின்றது. அவர்கள் முறையற்ற வரிவிதிப்பதனால் துன்புறுத்தப்படக்கூடாது என்பதில் மகாபாரதம் அதிக அக்கறை கொண்டுள்ளது.

எவ்வளவு நெருக்கடியான சூழ்நிலையிலும் வறியவர்களினை வருந்தி ஒரு அரசு திறை சேகரிக்கக் கூடாது என்பதும் மகாபாரதத்தில் கடுமையாக

வலியுறுத்தப்பட்டுள்ளது. நகரங்களிலும், மாகாணங்களிலும் உள்ள மக்கள் வறியவர்களாக இருந்தால், தனக்கு எற்ற வகையில் அவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும்.

எவ்வளவுக்கு பெரிய தொகையானவர்களிடமிருந்தும், முடிந்த அளவுக்கு வருமானத்தை ஈட்ட அரசன் முயன்றாலும், இந்த வறியவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக, அவன் அவர்களுக்கு நிதி உதவியும் செய்ய முன்வரவேண்டும்.

வசூலிக்கப்படும் வரிகளைச் செலுத்துவோர் எந்த விதத் தீய விளைவுகளையும் அனுபவிக்காத விதத்திலே அரசன் வரிகளை வசூலிக்க வேண்டும். அவை படிப்படியாகவும், சிறிய அளவுகளிலும் செலுத்துபவரின் வல்லமைக்குப் பொருந்துகின்ற விதத்தில் சேகரிக்கப்பட வேண்டும்.

அரச நிர்வாகத்திற்கான அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பிலும் சாந்திபருவம் கருத்துரைத்துள்ளது. ஒரு அரசனானவன் தன் மக்களிடமிருந்து வரியை வசூலிக்க வேண்டும்.கன்றைப் பட்டினி போடாமலும் பசுவின் முலைகளை காயப்படுத்தாமலும், ஒரு பண்ணையாளர் பாலைக் கறப்பது போல அவன் நடந்துகொள்ள வேண்டும். வரி வசூலிக்கும் விஷயத்தில் ஒரு அட்டை மெதுவாக இரத்தத்தினை உறிஞ்சுவதுபோல நடந்து கொள்ள வேண்டும். ஒரு பெண்புலி தனது குட்டிகளைப் பற்களினால் தூக்கினாலும் காயப்படுத்தாமல் கொண்டு செல்வது போல அவன் தனது மக்களோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்றியமையாத நெருக்கடிகளின் போது மேலதிகமாக வரிகளைப் பெறவேண்டி ஏற்படும்பொழுது தனது நாட்டில் வாழ்கின்ற செல்வந்தர்களிடமிருந்தும் வணிகப் பெருமக்களிடமிருந்தும் அதனைப் பெற்றுக்கொள்ள முயலவேண்டும். அதவேளை நேர்மையான வழியில் பொருளீட்டி வாழ்கின்ற செல்வந்தர்களிடமிருந்து மிக விநயமான முறையிலேயே அரசன் கறித்த வரிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்ற மகாபாரதம் இச் செல்வந்தர்களுக்கு தாமும் நாட்டின் முன்னேற்றத்திலும் நல்லாட்சியிலும் முக்கிய பங்காளிகள் என்ற விடயத்தை அரசன் உணர்த்த வேண்டியது இன்றியமையாதது என்கிறது.

மக்களிடமிருந்து வரவேண்டியதற்கு மேலதிகமாக எடுக்கும் அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதன்பின் நீ அவர்களின் இடத்திற்கு, உரிய தொகையை மட்டும் வசூலிக்கக் கூடிய அதிகாரிகளை நியமிக்க வேண்டும். வரிசேகரிப்பு முறை

ஊழலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். ஊழல் மிகுந்தவர்களும் மக்களை வருந்துகின்றவர்களுமான அதிகாரிகள் தண்டிக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக வேறு அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்பதனை விபரித்துள்ள மகாபாரதமானது ஊழல்களற்ற அரச நிர்வாக பொறிமுறையின் அவசியத்தினை அநேக சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளது.

எதிரியொருவன் இராச்சியத்தைத் தாக்கவதன் காரணமாகத், திறைசேரி காலியாகுமானால், பிராமணர் தவிர்ந்த ஏனைய எல்லோரிடமிருந்தும் செல்வத்தைப் பெற்று அதனை நிரப்பலாம். இதுபோன்ற பிறநாடுகளின் மீது படையெடுத்துச் வெல்லும்போதும் மேலதிக வரிகள் சேகரிக்க வேண்டி ஏற்படலாம். ஆனால் இத்தகைய மேலதிகத் தேவைகள் குறித்து வரிசெலுத்துபவர்களுக்குத் தெளிவாகப் புரிய வைக்கப்பட்ட பின்னரே இத்தகைய ஆபத்தக்கால வரிகள் அறவிடப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் மகாபாரதத்தில் பொருளியல் சிந்தனைகளை எடுத்துரைக்கலாம்.

### 8.4 மகாபாரதத்தில் விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகள்

அதிதியாக செல்பவர்களும் அதிதியை உபசரிப்பவர்களும் நடந்து கொள்ளும் விதம் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது. வாரணாவதம் - அரக்கு மாளிகைக்கு தீயிட்டு பாண்டவர்களையும் குந்திதேவியையும் அழிப்பதற்கு சகுனியுடன் இணைந்து துரியோதணண் போட்ட திட்டத்தினை அறிந்த பாண்டவர்கள் தமது தாயையும் உடன் அழைத்துக் கொண்டு அரண்மனையை விட்டு ரகசியமாக வெளியேறி விடுகின்றனர். இந்நிலையில் ஏகசக்பபுரம் என்ற ஓர் கிராமத்தில் அந்தனர் ஒருவரின் வீட்டில் அவர்கள் தங்க வாய்ப்பு கிடைக்கின்றது. அன்றைய தினம் அந்தணரின் குடும்பத்தினர் பகாசுரன் எனும் அரக்கனுக்கு உணவளிக்கும் முறையாக இருந்தபோது, தாயின் கூற்றுக்கிணங்க வீமன் அந்தணருடன் சென்று பகாசுரனுடன் யுத்தம் செய்து அனைவரையும் துன்பத்திலிருந்து விடுவித்தல்.

விருந்தோம்பலில் ஏற்ற தாழ்வு இன்மை. பாண்டவர்களது வனவாசத்தின் போது அரக்க குலத்தினரால் (இடும்பனின் சகோதரியினால் வழங்கப்பட்ட உபசரிப்பு) வழங்கப்பட்ட விருந்துபசாரத்தினை நல்மனதுடன் ஏற்றமை. கர்ணணின் தாய் - யசோதை – சிறந்த விருந்தோம்பல் பண்பினைக் கொண்டவள். திரௌபதி மற்றும் தர்மர் வனவாசத்தின் போது, வனத்தில் தவம் செய்கின்ற அனைத்து ரிஷிகளுக்கும் இனிதே விருந்துபசாரம் வழங்கியமை. ‘‘வயிற்றிற்கு சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்’’ – மகாகவி பாரதியார்

உபசரிப்பதில் பணிவும், ஆர்வமும் மிக முக்கியமானது. துரியோதனண் அரண்மனைக்கு விருந்தினராக கிருஷ்ணர் சென்றிருந்தவேளை அவன் மிக ஆடம்பரமாக விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் கிருஷ்ணண் அதனை ஏற்க மறுத்தார். அதற்கு காரணம் அவனிடம் பணிவு இன்மையாகும். அரசபோக விருந்தினை நிராகரித்த பகவான் விதுரரின் வீட்டில் தங்கியிருந்து விருந்தினை உண்டார். விதுரரின் வரவேற்பும், பக்தியும், பணிவுமே அவரை அங்கு மகிழ்வித்தது. எனவே வீட்டிற்கு விருந்தினர் வரும்போது நாம் அவர்களை மெய்யான அன்போடு வரவேற்க வேண்டும் என்பது அவசியம். அதாவது விருந்தினரை தெய்வமாக போற்ற வேண்டும் என்பது இந்துக்களது மரபாக காணப்படுகின்றது. இதனையே உபநிடதங்கள், ''அதிதிதேவ பவ'' எனும் மகா வாக்கியத்தினூடாகச் சுட்டுகின்றமை சிறப்பாகும்.

விருந்தினருக்கு அளவோடு உணவினைப் பரிமாறல் சிறப்பாகும். கந்தமாதனமலை – முனிவரது உடல் பொன்னிறம் ஆனால் வாய் கருத்து துர்நாற்றம் வீசுதல் - சாபம் விருந்தினரின் தேவைக்கு அதிகமாக வற்புறுத்தி உணவினை வழங்குதல். குருசேத்திர போரின் பின் - அஸ்தினாபுரம் - தர்மர் - இராஜசூஜயாகம் - பீமனுக்கு மக்களை உபசரிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. பீமன் - கிருஷ்ணரை உணவுண்ண வற்புறுத்தும்போது அச்சம்பவத்திபை நினைவுபடுத்தகின்றார்.

**8.5 மகாபாரதத்தில் அரசியல் சிந்தனைகள்**

மகாபாரதத்தில் அரசியல் கருத்துக்கள் பல வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பூவுலகில் ''அரசு'' என்ற ஒன்று உருவாகாதிருப்பின் அங்கே அராஜகம் தலைவிரித்தாடும் என்பதனையும் சாந்தி பருவம் நன்கு விபரித்துள்ளது.

''அரசன் மட்டும் மக்களைப் பாதுகாக்கவில்லை என்றால், செல்வம் படைத்தவர்கள் எல்லோருமே மரணத்தையும் சிறைவாசத்தையும், கொடுமையையும் அனுபவிக்க வேண்டி நேர்வதோடு செல்வம் என்பதன் அர்த்தமே அறைந்திருக்கும்.''

''பாவம் கட்டுப்படுத்தா விட்டால் தர்மம் அழிந்து அதர்மம் தலைவிரித்தாடும். பாவம் கட்டுப்படுத்தப்படாவிட்டால், சொத்துக்கள் சம்பந்தமாக நீதிநூல்களில் கூறப்பட்டபடி, ''இது என்னுடையது என்றோ இது என்னுடையதல்ல'' என்றோ கூற முடியாத நிலை ஏற்படும். இந்த உலகத்திலே அராஜகம் நிலவினால், மனிதர்களால் தமது சொந்த மனைவிமார், மிருகங்கள், வயல்கள், வீடுகள், ஆகிய எவற்றின் மீதும் உரிமை கொண்டாட முடியாமற்போய்விடும்.''எனவே அராஜக நிலை உருவாகாது தடுத்து

குடிமக்களை முறையாகப் பரிபாலனம் செய்வதற்கு தண்டத்தை ஒவ்வொரு அரசனும் தக்கபடி கையாளவேண்டியது இன்றியமையாததாகும். இதனை மனுஸ்மிருதியைப் போலவே மகாபாரதத்தின் சாந்திபர்வமும் நன்கு வலியறுத்தியுள்ளது.

சாந்தி பருவத்தினைத் தவிர மகாபாரதத்தின் ஆதி பருவம், சபா பருவம், வன பருவம் ஆகியவற்றிலும் அரசியல் தொடர்பான கருத்துக்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. சர்வ வல்லமை பொருந்திய அரசு தொடர்பாக புகழ்பெற்ற பிற்கால இத்தாலிய அரசியல் ஞானியான மக்கியவல்லியின் கருத்துக்களுக்கு முன்னோடியான சிந்தனைகளை ஆதி பருவத்தின் 142ஆம் அத்தியாயத்தில் இனங்காணமுடிகின்றது. சபா பருவத்தின் 5ஆம் அத்தியாயமானது ஆதர்சமான ராஜ்ய நிர்வாகக்கலை பற்றி விபரித்துள்ளது.

அரசாங்கமொன்றிற்கு போர் மற்றம் இயற்கை அனர்த்தங்களால் நெருக்கடிகள் ஏற்படும்பொழுது முன்னெடுக்கப்பட வேண்டிய அவசரகால நடவடிக்கைகள் தொடர்பாக வன பருவத்தின் 25ஆம், 32ஆம், 33ஆம், மற்றும் 150ஆம் அத்தியாயங்கள் விவரித்துள்ளன. சபா பருவத்தின் 32ஆம் அத்தியாயத்திலும் இது பற்றிய சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன.

நல்லாட்சி பற்றிய அறிவுறுத்தலாக மதுச்சாலைகள், விபச்சாரம், சூதாட்ட நிலையங்கள் ஆகியவற்றிற்குத் தடை விதிக்கப்பட வேண்டும். இவை நாட்டின் நல்லாட்சிக்குள் வாழ்ந்துவரும் நறிபிரஜைகளை நாசமாக்க முயல்கின்றன. எனவே குறித்த நாட்டின் ஒழுங்கீனத்துக்கு காரணமாக இருக்கும் இவையனைத்துமே தடைசெய்யப்பட் வேண்டும் என மகாபாரதம் வலியுறுத்தியுள்ளது.

நகரபரிபாலனம் உள்ளிட்ட உள்நாட்டு நிர்வாக முறைமைகள் தொடர்பாகவும் சார்திபருவத்தில் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ‘‘ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பிரதானி தெரிவு செய்யப்பட வேண்டும். பத்துக் கிராமங்களுக்கு (10 பிரதானிகளுக்கு) ஒரு மேற்பார்வையாளர் இருக்க வேண்டும் இரண்டு மேற்பார்வையாளருக்கு மேல் ஒரு அலுவலர் இருக்க வேண்டும். அதாவது 20 கிராமங்கள் அவருடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும். அவருக்கு மேலே, ஒவ்வொருவரும் நூறு கிராமங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.’’ என விபரித்துள்ள மகாபாரத சாந்திபருவம் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள பிரதான அதிகாரிகளின் கடைமைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது.

“பிரதானி என்பவர், கிராமத்திலுள்ள ஒவ்வொரு நபரின் பண்புகளையும் மட்டுமல்லாமல் அவர்களில் காணப்படும் திருத்தப்பட வேண்டிய தவறுகளையும், அறிந்து வைத்திருக்க வேண்டும். அவர் அவற்றைத் தனக்கு மேலே உள்ள இருபது கிராமங்களுக்குப் பொறுப்பாயிருக்கும் அலுவலருக்கும், அதே போல அந்த அலுவலர், தமக்க மேலே இருக்கும் அதிகாரிக்கும், இவ்வாறாகத் தத்தம் கட்டுப்பாட்டுக்குள் உள்ள ஒவ்வொரு நபரைப்பற்றியும் 100 கிராமங்களுக்குப் பொறுப்பாக இருப்பவருக்கு அறிவிக்க வேண்டும்.

“ஓ யுதிஷ்டிரனே பூவுலகில் அமைதியையும் சுபீட்சத்தையும் நாடிநிற்கும் மனிதர்களின் முதற்கடமை யாதெனில் அவற்றைப் பெறுவதற்கு இன்றியமயாததான பாதுகாப்பை பெற்றுத்தரவல்ல அரசன் ஒருவனைத் தேர்ந்தெடுப்பதாகும்.” இங்கே ஒவ்வொரு பொதுமகனும் தன்னை ஆளுகின்ற அரசைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான விழிப்புணர்வினைப் பெற்றிருக்க வேண்டியதன் அவசியம் சூசகமாக உணர்த்தப்பட்டுள்ளது. இவ்வகையில் அரசியல் சிந்தனைகளை இந்நூலானது மிகையாகக் கொண்டுள்ளது.

### 8.6 மகாபாரதத்தில் வெளிப்படுத்தும் வாழ்வியல் ஒழுக்க நெறிகள்

#### 8.6.1 தர்மத்தின் வழி செயற்பட வேண்டும்

தர்மத்தின் வழியில் நிற்பதனால் வாழ்வில் பல சோதனைகள் வந்தாலும் இறுதியில் வெற்றியே கிட்டும். உற்று நோக்கின் கௌரவர்களின் படையில் நூறுபேர் சகோதரர்கள் அத்துடன் பீஷ்மர்,துரோணாச்சாரியார், கிபாச்சாரியார், கர்ணன், அஸ்வத்தாமன் போன்ற அனைவரும் காணப்பட்டனர். ஆனால்பாண்டவர்களின் படையில் ஐவர்தான் இருந்தனர் கிருஷ்ணர் இருந்தாலும் போர் செய்யமாட்டேன் என சபதம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் அதிக படை பலம் இருந்தபோதிலும் வெற்றி கௌரவர்களுக்கு கிடைக்கவில்லை. பாண்டவர்களே வெற்றி பெற்றனர். இதனை நோக்குமிடத்து பாண்டவர்கள் தர்மத்தின் வழியில் இருந்ததனால் தான் ஆகும். ஆகவே ஒருவன் எவ்வளவு வீரம் பொருந்தியவனாக இருந்தாலும் அவன் அதர்மத்தின் வழியில் செல்வானாயின் வெற்றியென்பது கிட்டாது. ஆமலும் அவன் அழிந்து போவதற்கும் வாய்ப்புண்டு. இதற்கு சிறந்த ஏடுத்துக்காட்டாக பீஷ்மர், கர்ணன், துரோணர், அஸ்வத்தாமன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

### 8.6.2 சத்தியத்தின் மேன்மை

பிதாமகரான பீஷ்மர் பெண்களுக்கு எதிராகவும் ஆயுதம் இல்லாதவனிடமும் போர் செய்ய மாட்டேன் எனும் சத்தியத்தினை செய்திருந்தார். அவரை அழிக்கசிகண்டியை முன்னிறுத்திப பீஷ்மர்மேல் அம்பு மழை பொழிந்து அர்ச்சுணன் கொல்கின்றான். மேலும் கர்ணண் நாகஸ்திரத்தினை ஒரு முறைக்கு மேல் பணன்படுத்த மாட்டேன் எனவும் அர்ச்சணனைத் தவிர வேறு யாரையும் கொல்ல மாட்டேன் என்றும் சத்தியம் செய்து கொடுக்கின்றான். இவ்வாறு இவர்கள் செய்த சத்தியத்தினால் இவர்கள் இருவரும் இறக்கும் நிலை வந்துவிட்டது. ஆனபோதிலும் தமது உயிர் போவதாக இருந்தபோதிலும் தாங்கள் செய்த கொடுத்த சத்தியத்தினை மீறாது கடைபிடித்தனர். தமது உயிரை விட மேலாக சத்தியத்தினை மதித்தமை இங்கு கறிப்பிடத்தக்க விடயமாகும்.

### 8.6.3 நிலையாமை

பாண்டவர்கள் அரண்மணையில் அரச வாழ்க்கை வாழ்ந்தார்கள். சூதாட்டத்தில் தோற்று தமது உடமைகள் அனைத்தையும் இழந்து காட்டிலும் றேு ஒரு நாட்டில் வேலைக்காரர்களாகவும் பணிபுரிந்தனர். கர்ணண் சாதாரண தேரோட்டியின் மகனாக இருந்தான். ஆனால் துரியோதயனின் நட்பினால் அங்கதேசத்திற்கே அரசனாக நியமிக்கப்பட்டான். அரசர்களாக வாழ்ந்த கௌரவர்கள் குருசேத்திர போரில் தோற்று மாண்டு போனார்கள். இத்தகைய விடயங்களின் மூலமாக எமக்கு வாழ்வின் நிலையாமை நன்க புலப்படுகின்றது. எமது இவ்வுலக வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரம் இல்லை என்றோ ஒரு நாள் அனைத்தம் நம்மைவிட்டு நீங்கிப்போகும்.

### பயிற்சி வினாக்கள்

1. மகாபாரதத்தின் அமைப்பினை விளக்கவதோடு, அதில் வெளிப்படும்
   அ. அரசியற் சிந்தனைகள்
   ஆ. பொருளியற் சிந்தனைகள்
   ஆகியவற்றினைப் பற்றி எடுத்துரைக்குக.
2. மகாபாரதக் கதையினூடாக வெளிப்படும் வாழ்வியல் அம்சங்களை தெளிவுறுத்துக.
3. மகாபாரதக் கதைப்பாத்திரங்கள் வெளிப்படுத்தும் விழுமியப் பண்புகள் பற்றி ஆராய்க.

**உசாத்துணைகள்**


1. மாணிக்கம், அ., (1993), வில்லி பாரதம் - மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
2. கிருபானந்த வாரியர்., (2003), மகாபாரதம், குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை.
3. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி, (2003), மகாபாரதம், வானதி பதிப்பகம், சென்னை.
4. ஜேகந்நாசாரியர், சீ., (1986), மகாபாரதச் சுருக்கம், உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,சென்னை.
5. ஜோதி, வ., (1995), வியாச பாரதம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

# அத்தியாயம் 09
# புராணங்கள்

9.1 புராணம் ஓர் அறிமுகம்
9.2 புராணங்களின் தோற்றம்
9.3 புராணங்களின் பகுப்பு
9.4 புராணங்கள் அமைப்பு
9.5 புராணங்களின் முக்கியத்துவம்
9.6 புராணங்களின் சிறப்பு
9.7 பதினெண் புராணங்களும் அவை பற்றிய சுருக்கக் குறிப்புகளும்

**அத்தியாயச் சுருக்கம்**

வேதங்களில் உள்ள கருத்துக்களைத் தெளிவாகக் கூறுவதாகவே புராணங்கள் அமைக்கப்பட்டுள்ளது. புராணம் என்ற சொல்லிற்கு பழமை வாய்ந்தது என்றும் பொருள் உண்டு. காலங்காலமாக செவிவழியாகவே கற்பிக்கப்பட்டு வந்த புராணங்களை வியாசர் நூலாகத் தொகுத்து வெளியிட்டார். புராணங்கள் வேதத்தில் கூறப்பட்டுள்ளவற்றை கதைகள் மூலம் கூறுவதாக அமைந்துள்ளது. அதாவது அண்டசராங்களின் தோற்றம், அவற்றினால் ஏற்படும் பிரளயம், சிவன், விஷ்னு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளின் தோற்றம் மற்றும் அவர்களின் அவதாரங்கள், தேவர்கள், அரக்கர்களின் போர்கள் என்பவற்றை கதைகள் மூலமாக கூறுவதாக அமைந்துள்ளது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

இந்து நாகரிகத்தினை ஒரு பாடமாக் கற்கின்ற மாணவர்களுக்கு புராணம் தோற்றம் பெற்ற காலப்பிண்ணனி, அதன் கட்டமைப்பு, மக்களது வாழ்க்கையில் இந்நூல் பெற்றுள்ள முக்கியத்துவம் பற்றி விரிவாக அறிவினை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தினை மாணவர்கள் திறன்பட கற்பதன் மூலம் புராணங்கள் பற்றி அறிந்து கொள்வதுடன் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள அண்டசராசங்களின் தோற்றம், அவற்றினால் ஏற்படும் பிரளயம், சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும் மூர்த்திகளின் தோற்றம் மற்றும் அவர்களின் அவதாரங்கள், தேவர்கள், அரக்கர்களின் போர்கள் என்பவற்றை கதைகள் மூலமாக தெளிவான அறிவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**9.1 புராணம் ஓர் அறிமுகம்**

இந்து சமய வடமொழி இல்க்கியங்களில் புராணங்களும் குறிப்பிடத்தக்கவை. புராணங்கள் வேதத்தின் உபாங்கங்களில் ஒன்றாக விளங்குகின்றது. புராணங்கள் என்பவை வேதங்களில் உள்ள கருத்துக்களை தெளிவாக கூறுவதாகும். புராணம் என்ற சொல்லிற்கு பழமை வாய்ந்தது என்று பொருள். தோன்மையானது, தொன்மையான வரலாறு, பழைய வரலாறு, பழங்கதை, முன்னே நடந்தது எனப் பொருள்படும். அந்தவகையில் புராணம் என்பது பழமையான வரலாற்றினைக் கூறும் நூல் என்பதாகும். நெடுங்காலமாக செவிவழியாகவே கற்பிக்கப்பட்டு வந்த புராணங்கள் வேதவியாசர் என்பவரால் நூல்களாக தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் வேதவியாசரே தொகுத்த பதினெட்டு புராணங்கள் மகாபுராணங்கள் மகாபுராணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவையில்லாத உபபுராணங்கள் பதினெட்டும் புராணங்களாக கொள்ளப்படுகின்றன.

இந்தப் புராணங்கள் பலவற்றிலும் இப்பிரபஞ்சத்தின் தோற்றம், நிலைபேறு, அழிவு, மறுபடியும் தோற்றம் என்பவை பற்றி விரிவாகப் பேசப்படுவதனைக் காணலாம். ஒவ்வொரு புராணத்திலும் தனித்தனியாக நூற்றுக்கணக்கான கதைகள் பேசப்படுகின்றன. பெரும்பாலான கதைகள் ஏறத்தாழ எல்லாப் புராணத்திலும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஒரே கதையாக இருப்பினும் பற்பல சிறிய மாற்றங்களும், சில மிகப்பெரிய மாற்றங்களும் கூட ஒவ்வொரு புராணத்திலும் காணப்படுகின்றன. வாயு புராணமானது, புராணம் என்பதற்கு ‘‘புராதனமான காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்து வருவது’’ என பொருளுரைத்திருந்தது. எனவே புராணம் என்பதன் பொருள் பழைய கதைகளின் தொகுப்பு என்பதாகும்.

மிகப் பழங்காலந்தொட்டே வடமொழியிலுள்ள சமய இலக்கியங்களில் பதினெட்டுப் புராணங்களில் என்ற ஒரு தொகுதி இடம்பெற்று வந்துள்ளது. இதனையடுத்து

பதினெட்டு உப புராணங்களும் காலாந்தரத்தில் இடம் பெற்றுள்ளது. புராணங்கள் என்ற பெயர் பழமையானவை என்ற பொருளிலேயே இங்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் கலாசாரம் என்பது அந்நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலை, உணவு முறை, எண்ண ஓட்டங்கள், அவர்களின் குறிக்கோள்கள், அவர்கள் வாழ்க்கையில் கொண்ட விழுப்பொருள்கள் (values in Life) என்பவற்றின் ஒட்டுமொத்த தொகுதியே ஆகும். இந்த கலாசாரத்தை அறிய இந்த இனத்தின் வரலாறு, இலக்கியம் என்பவை பேருதவி புரிகின்றன. ஒரு குறிப்பட்ட நூற்றாண்டில் தோற்றிய வரலாறு அந்த மக்கள் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை மட்டுமே தொகுத்து வெளியிடுகின்றது. ஆனால் இலக்கியம் என்பது அந்த நிகழ்ச்சிகளுக்கு அடித்தளமாகவும், பின்னணியாகவும் உள்ள அந்த மக்களின் எண்ண ஓட்டங்கள், கருதுகோள்கள் (concepts), குறிக்கோள்கள் (aims), விழுப்பொருள்கள் என்பவற்றை விளக்க உதவுவதாகும். ஒரு நூற்றாண்டில் தோன்றிய இலக்கியம், அது தோன்றிய காலத்தை மட்டும் குறிக்காமல் அந்த இனத்தின் பல நூற்றாண்டு முந்தைய வாழ்வு முறையையும் படம் பிடித்து காட்டுகின்றது. அத்தகைய இலக்கியங்களுள் புராணமும் ஒன்றாகும்.

### 9.2 புராணங்களின் தோற்றம்

பௌராணிகரால் அருளப்பட்டவை. வைதிக ஒழுகலாறுகளை பேணும்வகையில் தோற்றம் பெற்றவையே புராணங்கள் ஆகும். தெய்வீக வரலாற்றினை பரப்பும் நோக்கில் எழுந்தவையே புராணங்கள் இந்துக்களின் உள்ளங்களிலே சமயக் கருத்துக்களை பதித்து சமய நம்பிக்கை ஏற்படுத்தி சமயத்தை வளர்ச்சி பெறச்செய்வதனையே புராணங்கள் நோக்கமாகக் கொண்டு எழுச்சி பெற்றிருந்தது. மனித வாழ்க்கையோடு பெரிதும் தொடர்புடைய புராணங்கள் அம்மனிதனுடைய ஆன்மிக வளர்ச்சிக்குத் தேவையான யோகம், தியானம், பிரார்த்தனை என்பவை பற்றியும் விரிவாகப் பேசுகின்றன. அதே நேரத்தில் இந்த உலகத்தில் செம்மையாக வாழ்வதற்குரிய பல கலைஞானங்களையும், உடலைச் செம்மையாக வைத்துக் கொள்வதற்குத் தேவையான ஆயர்வேதம் முதலிய மருத்துவங்கள் பற்றியும் பேசுகின்றன.

வடமொழிப் புராணங்களை பொருத்தவரையில் பஞ்சலட்சணம் என்று சொல்லப்படும் 5 பகுதிகள் ஒவ்வொரு மகா புராணத்திலும் இடம்பெற்றிருக்க வேண்டும். அவையாவன:

- சர்கா எனப்படும் பிரபஞ்ச உற்பத்தி
- பிரதிசர்கா எனப்படும் பிரளயத்திற்குப் பின் ஏற்படும் மறு உற்பத்தி

- வம்ஸா எனப்படும் தெய்வங்கள் சூரியன், சந்திரன் இவர்கள் பரம்பரையினர் ஆகியவர்கள் பற்றிய வரலாறு
- மன்வந்திரங்களின் தோற்றம், நிலைபெறும் கால அளவு, காலங்களை அளவிடும் முறை, இதுவரை நடைபெற்ற மன்வந்திரங்கள் என்பவற்றைக் கூறுவதுடன் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வைவஸ்தவ மனுவின் நடைமுறை.
- வம்சானுசரிதா எனப்படும் அரச பரம்பரையின் செயல்கள் பற்றிக் கூறுவன போன்றவையாம்.

  எல்லா மகா புராணங்களும் இவ்வைந்தையும் சுருக்கமாகவும் விரிவாகவும் கூறுவதனைக் காணலாம். இந்த ஐந்து இலக்கணங்களும் புராணங்களுக்கு இருக்க வேண்டும்.

மனிதனும் அவன் வாழும் இந்தப் பிரபஞ்சமும், இந்தப் பிரபஞ்சத்தினைப் படைத்து, காத்து, அழித்து மறுபடியும் படைக்கின்ற தெய்வங்களும் ஏதோ தனித்தனியாகக் காணப்படுவதில்லை என்பதனை விலியுறுத்துவதே இப்புராணங்களின் உள்நோக்கமாகும். இவையனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட முழுத்தன்மை என்பதனை அறிந்துகொள்வது அவசியம். ஒன்றையொன்று எவ்வளவு சார்ந்துள்ளன அதாவது ஒன்றையொன்று எவ்வளவு பற்றியுள்ளன என்பதனை அறிவறுத்துவதே புராணங்களின் உள்நோக்கமாக அமைகின்றது.

### 9.3 புராணங்களின் பகுப்பு

வடமொழியில் எழுந்த புராணங்களின் தொகை பதினெட்டு ஆகும். இவை மகா புராணங்கள், வடமொழி புராணங்கள், பதினென் புராணங்கள், ஆதி புராணங்கள், அஷ்டதச புராணங்கள் என அழைக்கப்படுகின்றன.

**சிவபுராணம் - 10**

1. சிவமகா புராணம்
2. பவிஷ்ய புராணம்
3. மார்க்கண்டேய புராணம்
4. இலிங்க புராணம்
5. ஸ்கந்த புராணம்
6. மச்சய புராணம்
7. கூர்ம புராணம்
8. வாரக புராணம்
9. வாமண புராணம்

10. பிரமாண்ட புராணம்

**விஷ்ணு புராணம் - 04**

1. விஷ்ணு புராணம்
2. பாகவத புராணம்
3. கருட புராணம்
4. நாஸதீய புராணம்

**பிரம புராணம் - 02**

1. பிரம்ம புராணம்
2. பதும புராணம் அல்லது பத்ம புராணம்

**சூரிய புராணம் - 01**

1. பிரமகைவர்த்த புராணம்

**அக்கினி புராணம் - 01**

1. ஆக்னேய புராணம்

முகா புராணங்களைப்போன்று வட மொழியில் 18 உப புராணங்கள் எழுக்கி பெற்றிருந்தன.

எ – டு:

சனத்குமாரம்

கபிலம்

காளி

சிவதண்டம்

சாம்பவம்

துர்வாசம்

சௌரம்

நரசிங்கம்

வடமொழி புராணங்கள் போன்றே தமிழிலும் பல புராணங்கள் தோற்றம் பெற்றிருந்தன. இதற்குச் சான்றாக கந்த புராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம், தல புராணம் போன்ற பலவற்றைக் கூறலாம். இவற்றில் பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடல் புராணம் ஆகிய மூன்றும் புராண முக்கனி என சிறப்பிக்கப்படுகின்றது.

மூர்த்தி தலம் தீர்த்தம் என்பவற்றினைப் போற்றும் தல புராணங்களை நாம் மேல்வருமாறு 02 வகைப்படுத்தலாம்.

**01. தென்னிந்திய தல புராணங்கள்**

திருவிளையாடல் புராணம் (மதுரை)

கோயிற் புராணம் (சிதம்பரம்)

சிதம்பர புராணம் (சிதம்பரம்)

சேது (இராமேஸ்வரம்)

காஞ்சி (காஞ்சி)

தணிகை புராணம்

திருச்செந்தூர் புராணம்

திருவெற்றியூர் புராணம்

**02. ஈழத்து தல புராணங்கள்**

திருக்கரசை புராணம்

ஸ்ரீ தட்சண கைலாச புராணம்

திருக்கோணேச்சர புராணம்

திருக்கேதீஸ்வர புராணம்

நகுலகிரி புராணம்

ஈழத்துச் சிதம்பர புராணம்

### 9.4 புராணங்கள் அமைப்பு

வடமொழி புராணங்களின் தொகை 18 ஆகும். இவை மகாபுராணங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை சமஸ்கிருத மொழியில் எழுந்தவை. பல இலட்ச சுலோகங்களால் ஆனவை. வடமொழியில் ஒரு பராணம் எழுச்சிபெற வேண்டுமானால் 5 வகையான இலக்கணங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும் எனும் நியதி காணப்பட்டிருந்தது. பஞ்ச இலக்கணங்கள் என அவை அழைக்கப்பட்டன. அவையாவன:

- சர்க்கம் - உலகின் தோற்றம்
- பிரதி சர்க்கம் - உலகின் மீள் தோற்றம்
- வம்சம் - அரச பரம்பரை
- வம்சானுசரிதம் - அரச பரம்பரையின் வரலாறு அதாவது அரச பரம்பரையின் வரலாற்றினைக் கிளைக்கதையுடன் கூறுவது.
- மனுவந்தரம் (கற்பம்) – மனுக்களின் காலம்

மேற்கறித்த பஞ்சஇலக்கணங்கள் சமயத்திற்கு முதன்மை வழங்குவதற்கு பதிலாக சரித்திரத்திற்கே முதன்மை வழங்கிளதால் புராணங்கள் மேலும் 5 வகையான இலக்கணங்களைக் கொண்டு தச இலக்கணங்களைக் கூறும் வகையில் அமைந்திருந்தன. அவையாவன:

விருத்தி – தொழில்

ரக்ஷா – தெய்வ அவதாரம்

அபார்சர்ய – பிரமம்

ஹேது – உயிர்

முத்தி – வீடுபேறு

இவ்வகையில் மகா புராணங்கள் தச இலக்கணங்களைக் கொண்டிருக்கும். உப புராணங்கள் பஞ்ச இலக்கணங்களைக் கொண்டிருப்பதனைக் காணுகின்றோம். புராணங்கள் இறை வரலாற்றைக் கூறும் அமைப்புடையவை. சைவ வைணவ நெறிகளை சிறப்பித்துக் கூறும் அமைப்புடையவையாகும். குலை, அரசியல் மரபுகள் பற்றி கூறும் புராணங்கள் திருக்கோயில் வழிபாடு பற்றியும் சிறப்பித்துக் கூறி இருந்தனர்.

விரதம்

தவம்

தீர்த்தம்

தலயாத்திரை தோத்திரம்

மேலும் ஒழுக்கம் சார்ந்த கருத்துக்களினை புராணங்கள் கூறும் அமைப்புடையனவாக அமைகின்றன.

எ-டு: அரிச்சந்திரன் கதை

சிபிச் சக்கரவர்த்தியின் கதை

அத்தடன் பக்திநெறி சார்ந்த கருத்துக்களை புராணங்கள் எடுத்தியம்பகின்றன. சிவ பக்தி – மார்க்கண்டேய புராணம்

விஷ்ணு பக்தி - பிரகலாதன் கதை

புராணங்கள் தெய்வீக பரத்துவம் பற்றி கூறுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். சிவ பரத்துவம் - அடி முடி தேடிய கதை

விஷ்ணு பரத்துவம் - நரகாசுர சம்ஹார அவதாரக் கதைகள்

சக்தி பரத்துவம் - மகுடாசுர சம்ஹாரம்
முருக பரத்துவம் - சூர சம்ஹாரம்
விநாயக பரத்துவம் - கஜமுகாசூர சம்ஹாரம்

புராதன புராணங்களாகிய மச்சய புராணம், பாகவத புராணம்,விஸ்ணு புராணம் போன்றவை திரேயாயுகம், கிருத யுகம், துவாகர யுகம், கலியுகம் எனும் 4 யுகங்கள் பற்றி குறிப்பிடும் போது பிரபஞ்சம் பற்றியும் குறிப்பிட்டு இருந்தது.

புராணங்கள் பிரபஞ்சத்தின் உற்பத்தி பற்றிக் கூறும் போது விஞ்ஞான நோக்கங்கள் பற்றியும் கூறியிருந்தன. அவற்றை தூய நியதி, அருள் நியதி, அற திருப்தி என வகுத்து நோக்கும் போது தூய நியதியிலே பிரபஞ்சத்தின் நீர்ப்பகுதி நிலப்பகுதி என்பவற்றின் தோற்றங்களும் விளக்கங்களும் கூறப்பட்டிருந்தது. மேலும் வானத்தில் உள்ள உடுக்கள், கிரகங்கள், வடதுருவம், தென் துருவம் என்பவை பற்றியும் கூறியிருந்தன.

இவற்றுடன் புராணங்களின் ஏழ்கடல், ஏழுலகம் என்பவை பற்றி கூறப்பட்டது. சாத்வீகம், ராஜதம், தாமசம் எனும் முக்குணங்களோடு பிரபஞ்ச படைப்பு கூறப்பட்டிருந்தது. புராணங்கள் கூறும் விஷ்வ கர்மா, மயன் போன்றோர்களது கதைகளோடு பிரபஞ்ச படைப்பு கூறப்பட்டிருந்தது.

புராணங்கள் கூறும் அவதாரக்கதைகளின் பிரபஞ்சம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இதற்கு சான்றாக மச்சய அவதாரம், வராக அவதாரம், வாமண அவதாரம் ஆகியவற்றின் பிரபஞ்ச பற்றிய செய்திகள் காணப்பட்டிருந்ததை குறிப்பிடலாம்.

**9.5 புராணங்களின் முக்கியத்துவம்**

புராணங்கள் நண்பரைப் போன்று அறிவுரை வழங்கும் வகையில் இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது அத்துடன் கோயில் வழிபாடு, உருவ வழிபாடு என்பவை பற்றியும் கூறியிருந்தன. சமயக் கருத்துக்களை இலகுபடுத்தி எளிமைப்படுத்தி கூறும் வகையில் முக்கிய இடம் வகித்து இருந்தன. புராணங்கள் அறநெறிப் போதனைகளை புரிந்து இருந்தன. இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையாக அமைந்திருந்தன.

பிற்கால இலக்கிய மரபிற்கும் புராணங்களே அடிப்படையாக அமைந்திருந்தன. இதற்கு சான்றாக சைவ திருமுறைகள், வைணவ நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் ஆகியவற்றிற்கு புராணங்களே பொருளாக அமைந்திருந்தன என காணுகின்றோம்.

மேலும் பிற்கால காவியங்களுக்கும் புராணங்களே முன்னோடியாக அமைந்திருந்தன.

சைவம் வைணவம் முதலான சமயங்கள் பற்றிய செய்திகளும் புராணங்களில் உள்ளன. சமயச் சின்னங்களுக்கு அடிப்படையாக அமைந்த புராணங்கள் இறைநம்பிக்கைகளை வலிப்படுத்தும் வகையில் முதன்மை பெறுகின்றன. சிறப்பாக பக்தி, தவம், தானம், விரதம், தீர்த்தம், மூர்த்தி, தலம், தியானம் முதலானவற்றை அடிப்படையாக கூறுகின்றன.

இப்புராணங்கள் சிவன், பிரமா, விஷ்ணு, சூரியன், முருகன், விநாயகன், அம்மன் முதலிய தெய்வங்களை பரத்துவம் பற்றிக் கூறுகின்றன.

தத்துவ வளர்ச்சிக்கும் புராணங்களே அடிப்படையாக அமைந்திருந்தன. சிறப்பாக இந்து சமயம் சார்ந்த தத்துவ உண்மைகளை பாமர மக்களுக்கும் விளங்கிக் கொள்ள கூடிய வகையில் கதை வடிவில் புராணங்கள் எடுத்துக்கூறும் வகையில் முக்கிய இடம் வகிக்கின்றது.

ஸ்கந்த புராணம் - சூரன் போர் ஆணவம் அழிப்பதை விளக்கி நிற்கின்றது.
மார்கண்டேய புராணம் - யம சம்ஹாரம் பக்தியின் தத்துவ சிறப்பைக் காட்டுகிறது.

**9.6 புராணங்களின் சிறப்பு**

ஐந்தாவதாக உள்ள அரச பரம்பரையினரின் வாழ்க்கைப் பற்றிப் பேசும் புராணப் பகுதிகளிலிருந்து மற்றொன்றையும் காணமுடியும். தம்மால் ஆளப்பெறும் மக்களின் நலங்கருதியே இந்த மன்னர்கள் ஆட்சி செய்தனர். ஒருவர், இருவர் இதற்கெதிராகத் தன்னலத்தைப் பெரிதாக்கி மக்களுக்குத் தீங்கிழைக்கும் ஆட்சிமுறையைக் கையாண்டால் முனிவர்கள் முதலானவரைகள் அந்த அரசனுக்கு புத்தி புகட்டுவதும், அந்த உபதேசம் பயன்படாத பொழுது அந்த அரசனையே கொன்று விடுவதும் இப்புராணங்களில் காணக் கிடைக்கின்றன. இப்புராணங்கள் தோன்றுவதற்குரிய காரணங்களும் அறியப்பட வேண்டும். பிரபஞ்சத்தின் தோற்றம், அழிவு, மறு உற்பத்தி, கிருஷ்ணன் போன்ற மகாத்மாக்களின் வரலாறு ஆகியவை கற்றவர், கல்லாதவர், செல்வர், வறியர், உயர்குலத்தோர், தாழ்குலத்தோர் ஆகிய அனைவராலும் அறியப்பட வேண்டும். வேதம் போன்றவை பிராமணர்களுக்கே உரியவை என்று பிற்காலத்தில் வரையறை செய்யப்பட்ட பின் எல்லோரும் அறிவு பெறக்கூடிய வாய்ப்பே தடை செய்யப்பட்டு விட்டது. ஆந்நிலையில் மேலே

கண்டவற்றைப் பொதுமக்களுக்கு, குறிப்பாக சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட மக்களுக்குங்கூட இவற்றை பற்றிச் சொல்ல புராணங்கள் பயன்பட்டன.

இப்புராணங்கள் அனைத்துமே இவ்வுலகில் பிறந்த மனிதன் பல்வேறு சிக்கல்கள் நிறைந்திருக்கும் வாழ்க்கையில் எவ்வாறு அமைதியான வாழ்க்கையினை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் தர்ம,அர்த்த,காமம் ஆகிய மூன்றையம் எப்படி அளவறிந்து வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் கதைவடிவில் நமக்கு அறிவுறுத்துவனவாக அமைகின்றன.

அந்தவகையில் எல்லாப் புராணங்களிலும் முடிவுரை எனும் தலைப்புடன் சில பகுதிகள் காணப்படுகின்றன. இந்தப் புராணத்தை ஒருமுறை படித்தாலும் கேட்டாலும் இன்ன பயன் ஏற்படும் என்றும் இரமுறை மும்முறை கேட்டால் அல்லது படித்தால் இத்தகைய நன்மை விளையும் எனக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## 9.7 பதினெண் புராணங்களும் அவை பற்றிய சுருக்கக் குறிப்புகளும்

### 9.7.1 பிரம்ம புராணம்

இது ஆதிபுராணம் எனவும் கூறப்படும். பிரம்மபுராணம் என்பது என்பது பரப்பிரம்மத்தைப் பற்றி 4றுவது எனப்பொருள்படும். இப்புராணமானது பரப்பிரம்மத்தினை விரிவாக விளக்குவதாகும். ஐதத்திரிய உபநிடதத்தில் பிருக வல்லி கூறும் பரப்பிரம்மம் பற்றிய இலக்கணத்தினை அடியொற்றியே இந்த பிரம்ம புராணம் பேசுகின்றது. ‘‘எந்தப் பரப்பிரம்மத்திலிருந்து இந்த உயிர்கள் தோன்றுகின்றனவோ, எந்தப் பரப்பிரம்மத்தின் தயவால் இந்த உயிர்கள் உலகிடை நிலை பெறுகின்றனவோ, அந்தப் பிரம்மத்தினிடமே இந்த உயிர்கள் அனைத்தும் சென்று அடைகின்றன’’. இதுவே பிருகவல்லி கூறும் பரப்பிரம்மத்தின் இலக்கணமாகும்.

இப்புராணமானது 246 அதிகாரங்களையம் 14000 பாடல்களையும் கொண்டமைந்துள்ளது. இதில் கங்கைச் சமவெளியில் கங்கை நதி பாயுமாறு பகீரதன் செய்த முயற்சியும் இந்தியாவின் தென்பகுதியில் கோதாவரி பாயுமாறு கௌதம முனிவர் எடுத்துக்கொண்ட முயற்சியும் இப்புராணத்தில் பேசப்பட்டுள்ளன.

### 9.7.2 பத்ம புராணம்

பிரம்ம புராணத்தினை அடுத்து சிறப்புக் கொண்டது பத்ம புராணமாகும். ஒரு காலத்தினில் இந்த பூமியானது தங்கத் தாமரை வடிவுடன் விளங்கியதனால் இதற்குப் பத்ம புராணம் எனும் பெயரானது ஏற்பட்டது. வேத வியாசருக்குப் பின் இப்புராணம் மேலும் சுருக்கப்பட்டு ஏழு அத்தியாயங்களையும் 55000 பாடல்களையும் கொண்டு விளங்குகின்றது. இக் காண்டங்கள் சிருஷ்டி காண்டம், சுவர்க்க காண்டம், பிரம்ம காண்டம், பாதாள காண்டம், உத்தர காண்டம், கிரியா யோகா முதலியனவாகும்.

### 9.7.3 விஷ்ணு புராணம்

பதினெண் புராணங்களுள் இப்புராணம் மிகவும் முக்கியமாதென்று வைணவர்கள் கூறுவர். இந்தப் புராணத்திலும் பின்னர் வரும் பாகவத புராணத்திலும் ஸ்ரீகிருஷ்ணர் வரலாறு மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆதிசங்கரர் தமது மஹாபாஷ்யத்தில் விஷ்ணுபுராணத்தில் இருந்து பல மேற்கோள்களை எடுத்துக் காட்டுகின்றார். ஆதி சங்கரரதுகாலம் 8ஆம் நூற்றாண்டு என்பது ஆய்வாளர் கண்ட முடிவாகும். ஆகவே இந்தப் புராணம் அவரது காலத்திற்கு முன்னரே அதாவது 5,6ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியது எனலாம்.

இந்திய நாகரிகம் மற்றும் பண்பாடு போன்றவற்றின் கருவூலமாக இப்புராணம் திகழ்கின்றது. இப்புராணமானது 6000 பாடல்களைக் கொண்டமைந்துள்ளது. இப்புராணம் வியாசரின் மகனான பராசர முனிவரால் இயற்றப்பட்டதாக அமைகின்றது. மைத்திரேயி பராசர முனிவரிடம் பாரத நாட்டுத் தோற்றம் பற்றி கேட்க பராசரர் பதில் கூறுவது போல் இப்புராணம் அமைந்துள்ளது. இப்புராணம் ஆறு பகுதிகளாகவும் 126 அதிகாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. நாலாவது பகுதி மட்டும் உரைநடையில் உள்ளது. இந்நாட்டுப் பழங்கால மன்னர்களின் வம்சாவளி பற்றிக் கூறுகின்றது.

### 9.7.4 வாயு புராணம் (சிவ புராணம்)

மிகப் பழமையான புராணங்களில் இதுவும் ஒன்று. இதில் 24000 பாடல்கள் உள்ளது. இந்தப் புராணமும் நட்சத்திரங்களை எண்ணுவதில் கிருத்திகையில் ஆரம்பித்து பரணியில் முடிகின்றது. கி.மு. 55இல் இருந்த கர்காவின் காலத்திலிருந்து அஸ்வினியை முதலாக வைத்து எண்ணும் பழக்கம் ஏற்பட்டதால் இப்புராணம் அதற்கு முற்பட்டது என நினைக்க இடமுண்டு. புராணங்களுக்குரிய ஐந்து பெரும் பொருள்களைப்பற்றி இதுவும் பேசுகின்றது.

இப்புராணத்தில் காணப்படுகின்ற பல பாடல்கள் மார்க்கண்டேய புராணத்திலும் காணப்படுகின்றன. இதில் 24000 பாடல்கள் இருப்பினும் தற்போத நமக்கு கிடைக்கின்ற பாடல்கள் 12000 பாடல்களாகும். இது நான்கு பெரும் பாகங்களையும் 112 அதிகாரங்களையும் கொண்டது. பாசுபத யோகம் பற்றி இப்புராணம் பேசுகின்றது.

**9.7.5 பாகவத புராணம்**

இப்புராணமானது கிருஷ்ஷ்ணர் பற்றி விரிவாகப் பேசுகின்றது. இப்புராணத்தின் தலையாய சிறப்பு பக்திக்கு முதலிடம் கொடுப்பதுதான். வேதவியாசர் பாரதத்தையும் ஏனைய புராணங்களையும் எழுதிய பின்பும்கூட மனதில் அமைதியில்லாமல் இருந்தார் எனவும் இப்புராணத்தினை எழுதிய பிறகே மன நிறைவு பெற்றார் எனவும் கூறப்படுகின்றது. பொதுவாக விஷ்ணு எடுத்த அவதாரங்கள் பத்து எனவும் அவற்றள் ஒன்பது அவதாரங்கள் முடிந்து விட்டன எனவும் கலியுகத்தின் கடைசியில் பத்தாவதாகிய ‘‘கல்கி’’ அவதாரம் தோன்றும் என்றும் இப்புராணம் கூறுகின்றது.

வேறு புராணங்களில் காணப்படாத அளவிற்கு பக்திக்கு பாகவத புராணம் இடம் கொடுக்கின்ற காரணத்தினால் பரத கண்டத்தியே மிகப் பழங்காலத்திலேயே பக்திக்கு முதலிடம் கொடுத்து வளர்த்த பெருமை தமிழ்நாட்டுக்கு மட்டுமே உண்டு. 12 ஸ்காந்தங்களையும் 335 அத்தியாயங்களையும் 18000 பாடல்களையும் உடையது. பாகவத புராணத்தின் 12 ஸ்காந்தங்களில் பத்தாவது ஸ்காந்தமானது கிருஷ்ணனது பிறப்பு, வளர்ப்பு, அவருடைய லீலைகள் ஆகிளவற்றினைப் பற்றி விரிவாக விளக்குகின்றது. பதினொன்றாவது ஸ்காந்தமானது யாதவ குலத்தின் அழிவு, கிருஷ்ணன் விஷ்ணு லோகம் செல்லுதல் ஆகியவற்றையும் எடுத்துரைக்கின்றது.

**9.7.6 நாரத புராணம்**

இப்புராணம் 02 பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி நாரதருக்கு கூறப்பட்டதாகும். இரண்டாம் பகுதி மாந்தாதா என்ற மாமன்னனுக்குக் கூறப்பட்டதாகும். முதற்பகுதியில் வர்ணாச்சிரம தர்மம், ஆசாரம், சிரத்தை, பிராயச்சித்தம் போன்றவற்றைப் பற்றிப் பேசுகின்றது. மேலும் வேத அங்கங்கள் ஆறு பற்றியும் சர்வதர்ஷண சங்கரம் என்ற பெயருள்ள தத்துவங்களின் தொகுப்பு பற்றியும் கூறுகின்றது. மேலும் சிவன், காளி, அனுமன் ஆகியவர்களின் மந்திரங்கள் பற்றியுக் கூறுகின்றது.

இரண்டாவது பகுதி ருக்மாங்கதன் வரலாறு பாஞ்சராத்ரா ஆகம அடிப்படையில் வைணவர்கள் மேற்கொள்ள வேண்டிய அனுஷ்டானங்கள் ஆகியவற்றை விரிவாக விளக்குகின்றது. பல்வேறு சாத்திரங்களின் உட்பொருளைக் கூறுவதனால் இந்தப் புராணம் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது. புராணங்களின் வளர்ச்சி, வரலாற்றை அறிவதற்கும் இப்புராணம் பயன்படுகின்றது. மற்ற புராணங்களின் பாடல்களின் சுருக்கமான வரலாற்றை இப்புராணம் விரித்துரைக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாக அமைகின்றது.

### 9.7.7 மார்க்கண்டேய புராணம்

இப்புராணமானது 9000 பாடல்களைக் கொண்டதாக காணப்படினும் தற்போது 6900 பாடல்களே கிடைக்கப் பெறுகின்றன. மிகப் பழமையான புராணங்களுள் இதுவும் ஒன்றாகும். பல முக்கியமான பகுதிகளைக் கொண்டது. இன்று பிரபலமாக செய்யப்படுகின்ற சண்டி ஹோமத்திற்கு அடிப்படையாக உள்ள துர்க்கா சப்தசதி என்ற பெயருள்ள துர்க்கையைப் போற்றும் 700 பாடல்கள் 81ஆம் அதிகாரத்தில் இருந்து 93ஆம் அதிகாரம் வரை உள்ளன.

இப்புராணத்தின் துர்க்கா சப்தசதி பகுதியானது மிகவும் சக்தி வாய்ந்த அறிவரையைத் தருகின்றது. இந்த மாபெரும் சக்தியை பணிவு, அன்பு, வணக்கம் இவற்றோடு கூடிய மனதுடன் வழிபட்டால் எத்தகைய துன்பத்தினையும் எதிர்ப்பபையும் வெல்லும் சக்தியினைத் தருகின்றது. அஞ்ஞானம், ஆணவம் முதலியவற்றால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் அழிக்கப்படுகின்றார்கள்.

### 9.7.8 அக்னி புராணம்

இப்புராணமானது அக்கினியால் வசிட்ட முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது. ஆனாலும் புராணத்தினுள் சுதாமுனிவர், சௌனகர் மற்றும் ரிஷிகளுக்கு சொல்லியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. யாகம், அக்கினியின் பெருமை, விஷ்ணு அவதாரங்கள், சிவபெருமானை நோக்கிச் செய்யும் ஞான பூஜை, பிரபஞ்ச இலட்சணம், தர்மசாஸ்திரம், அரசியல், பொருளாதாரம், வானியல், சாமுத்ரிக்கா இலட்சணம், ராஜ நீதி, ஆயுர் வேதம், வாஸ்துவித்யா, தாந்திரீக வித்தைகள், மந்திர சாஸ்திரங்கள், தனுர் வேதம், நாட்டிய சாஸ்திரம், காவிய சாஸ்திரம், புராண சாஸ்திரம், முதலானவை பேசப்பட்டுள்ளன. இப்புராணம் 8000 கிரந்தங்களை உடையது.

### 9.7.9 பவிஷ்ய புராணம்

இப் புராணத்தினை பிரம்மனே முதலில் மனுவுக்குச் சொன்னார் என்று மச்ச புராணமானது கூறுகின்றது. இது 14500 பாடல்களைக் கொண்டது. பவமுனிவர் இப்புராணத்தினை மனுவுக்குச் சொன்னார் எனவும் இதில் 14000 பாடல்கள் உள்ளன என்றும் அக்கினி புராணம் கூறுகின்றது. இப்புராணம் 5 சருக்கங்களைக் கொண்டது. அவையாவன:

1. பிரம்மா
2. வைஷ்ணவம்
3. சைவம்
4. சருக்கம்
5. பிரதிசருக்கம்

என்பனவாம். ஆனால் தற்போது பவிஷ்ய புராணமானது நான்கு சருக்கங்களை மட்டுமே கொண்டுள்ளது. இது சிவ சருக்கம் மற்றும் வைஷ்ணவ சருக்கம் என்பவற்றிற்குப் பதிலாக மத்தியமா சருக்கம் என்று குறிப்பிடப்படுகின்றது. இப்புராணம் தற்போது குறிப்பிடுகின்ற சருக்கமானது பிரம்மா, மத்தியமா, பிரதி சருக்கம், உத்தரா முதலியனவாகும்.

### 9.7.10 பிரம்ம வைவர்த்த புராணம்

இப்புராணமானது தீவிராமான வைணவ புராணம் எனச் சுட்டப்படுகின்றது. இப்புராணத்தின் முக்கிய குறிக்கோள் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீகமான உலகியல் கடந்த திருவிளையாடல்களைக் குறிப்பதும் ஸ்ரீ கிருஷ்ணரின் சக்தியாகிய ராதைக்கும் கிருஷ்ணருக்கும் இடையிலுள்ள காதல் உணர்வினை விளக்குவதாகும். பிரம்ம வைவர்த்தம் என்ற சொல்லானதுனைத்தையும் கடந்து நிற்கின்றவன் என்பதனைக் குறிக்கும். அதாவது ஸ்ரீ கிருஷ்ணர் அண்டங்கள் அனைத்திற்கும் தலைவனாவான் என்பதைக் குறிப்பிடுவதே ஆகும். 18000 பாடல்களையும் 266 அதிகாரங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. மேலும் இப்புராணமானது நான்கு பிரிவுகளைக் கொண்டதாக அமைகின்றது. அவையாவன:

1. பிரம்ம காண்டம்
2. பிரகிருதி காண்டம்
3. கணபதி காண்டம்
4. ஸ்ரீ கிருஷ்ணஜன்ம காண்டம்

முதலியனவாகும்.

### 9.7.11 இலிங்க புராணம்

இலிங்கம் என்பது ஒரு குறியீடாகும். பிரபஞ்சத் தோற்றத்திற்கு அடிப்படையானதாகும். பரப்பிரம்மம், அலிங்கம் என்று சொல்லப்படும் நாமம், ரூபம் கடந்த பொருளாகும். இப்புராணம் இரண்டு பெரும் பகுதிகளைக் கொண்டது. சிவ வழிபாட்டுக்காரர்களுக்கு இப்புராணம் ஒரு கையேடாக இது திகழ்கின்றது. இது சிவனது மூர்த்தங்களை வழிபடுவதற்குரிய வழிகளைச் சொல்கின்றது. பிரபஞ்சத்தின் உற்பத்தி, அழிவு, மறு உற்பத்தி போன்றன பற்றி விளக்கப்பட்டுள்ளது. 11000 பாடல்கள் காணப்படுகின்றன.

### 9.7.12 வராக புராணம்

வராகம் என்பது விஷ்ணு எடுத்த வராக அவதாரத்தினைக் குறிக்கின்றது. 10000 பாடல்களைக் கொண்டுள்ளது. இது பொதுவாக இல்லாமல் வைஷ்ணவத்தினைப் பற்றியே கூறுவதாகவும் விஷ்ணுவினை வழிபடுவதற்குரிய ஒரு கையேடாகவும் இது அமைகின்றது. பஞ்சராத்ரா ஆகமத்தினை இப்புராணம் விரிவாகப் பேசுகின்றது. மற்றைய புராணங்களில் காணப்படும் புராணங்களுக்குரிய ஐந்து இலக்கணங்கள் இதில் இல்லை.

### 9.7.13 ஸ்கந்த புராணம்

புதினெண் புராணங்களில் மிகப்பெரியதாக இப்புராணம் திகழ்கின்றது. 81000 பாடல்கள் காணப்படுகின்றன. சங்கர பகவானின் மகன் ஸ்கந்தனால் இப்புராணம் கூறப்பட்டதாக அமைந்துள்ளது. இப்புராணம் இரண்டு வடிவுடன் உள்ளது. ஒன்று சம்ஹிதை (தொகுப்பு வடிவில்) எனும் பெயருடன் உள்ளது. அவையாவன:

1. சனத் குமார சம்ஹிதை – 36000
2. சூத சம்ஹிதை – 6000
3. சங்கர சம்ஹிதை – 30000
4. வைஷ்ணவ சம்ஹிதை – 5000
5. பிரம்ம சம்ஹிதை – 3000
6. சௌர சம்ஹிதை – 1000

என்ற முறையில் முதல் தொகுப்பு உள்ளது.

மற்றொரு வடிவம் காண்டம் எனப்படும். அவையாவன:

1. கேதார காண்டம்
2. வைஷ்ணவ காண்டம்

3. பிரம்ம காண்டம்
4. காசி காண்டம்
5. அவந்தி காண்டம்
6. நாகர காண்டம்
7. பிரபாச காண்டம்

முதலியனவாகும்.

### 9.7.14 வாமன புராணம்

இப்புராணமானது விஷ்ணு டுத்த அவதாரத்தினைப் பற்றி பேசுகின்றது. இது 6000 பாடல்களை உடையது. தடச் யக்ஞம், பார்வதியின் தோற்றம், பார்வதியின் தவம், கணேசர் தோற்றம், கார்த்திகேயன் கதை, பிரகலாதன் நைமி சாரண்யத்திற்கு யாத்திரை சென்ற கதை, குருசேத்திரச் சிறப்பு, சிவபெருமான் அணிந்திருக்கும் பாம்புகள் பற்றிய கதை, மகிஷாசுரன் வதம், அந்தகன் கதை ஆகியவை இடம்பெற்றுள்ளன.

### 9.7.15 கூர்ம புராணம்

விஷ்ணு கூர்ம அவதாரம் எடுத்து மன்னன் இந்திரத்துய்மனுக்கு சொல்லியதாக கூறப்படுகின்றது. இப்புராணத்தில் பக்திமார்க்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள், பரப்பிரம்மம் பற்றிய ஞானம், ஆன்ம விடுதலை அடைவதற்கான பயிற்சிகள், பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது. இப்புராணத்தில் நான்க பிரிவுகள் இடம்பெற்றுள்ளன. அவையாவன:

1. பிராமி
2. பாகவதம்
3. சௌரி
4. வைஷ்ணவி

போன்றனவாகும். இதில் 6000 பாடல்கள் காணப்படுகின்றன. இந்து சமயத்தின் முக்கிய மூன்று பிரிவுகளான சைவம், வைணவம், சாக்தம் என்பவை பற்றிய பல விடயங்களை இப்புராணம் எடுத்துரைக்கின்றது. இதில் 6000 பாடல்கள் உள்ளன.

### 9.7.17 மச்ச புராணம்

மச்ச அவதாரத்தில் விஷ்ணு பகவான் மீக் அவதாரம் எடுத்து பெருவெள்ளத்தில் இருந்து மண்ணையும் குடிகளையும் காப்பாற்றுவது பற்றிப் புராணம் பேசுகிறது. தொன்மையான இக்கதை பார்சிகளின் வேதமாகிய அவஸ்தாவிலும் கிரேக்கப் பழங்கதைகளிலும் இடம்பெற்றுள்ளது. 14000 பாடல்களைக் கொண்டமைந்துள்ளது.

இப்புராணத்தினை சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், கௌமாரம் ஆகிய அறுவகை சமயங்களும் ஏற்றுக் கொள்கின்றன.

**9.7.18 கருட புராணம்**

கருடன் விஷ்ணுவிற்கு வாகனமாகவும் சிறந்த பக்தனாகவும் இருந்ததால் அவனது பக்தியை ஏற்றுக் கொண்ட விஷ்ணு அவனையே ஒரு புராணம் பாடுமாறு பணித்தார். அதன்படி கச்சியப்ப முனிவருக்கு கருடன் இதை உரைத்ததால் கருடபுராணம் எனப் பெயர் பெற்றது. பூர்வ காண்டம், உத்தர கண்டம் என இரண்டு காண்டங்கள் உள்ளன. 18000 பாடல்கள் உள்ளன. இதனை ஒரு களஞ்சியம் என்றே கூறுவர். பூர்வ காண்டத்தில் புராணங்களுக்குரிய ஐந்து இலக்கணங்களும் உள்ளன.

இவை அல்லாமல் வேறு புராணங்களில் காணப்பெறாத வானியல், சோதிடம், கற்களைப் பரிசோதித்துப் பாரத்தல், மருத்துவம், அளவுகள், இலக்கணம், அரசியல் என்பவை போன்ற பல கலை விஞ்ஞான சம்பந்தமான செய்திகளையும் விளக்கிக் கூறுகின்றது. அத்தடன் மகாபாரத, இராமாயண கதைகளும் இடம்பெற்றுள்ளன.

**பயிற்சி வினாக்கள்**

(01) புராணங்களை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) புராண கட்டமைப்பு

(ஆ) சமய நெறி

(ஈ) வழிபாடு

(02) மேல்வரும் புராணங்களின் சிறப்புகளை எடுத்துரைக்குக.

(அ) வாயு புராணம்

(ஆ) கருட புராணம்

(இ) பிரம்மகைவர்த்த புராணம்

***உசாத்துணைநூல்கள்***

1. Bailey, Gregory (2003). "The Puranas". In Sharma, Arvind (ed.). The Study of Hinduism. University of South Carolina Press.
2. Bonnefoy, Yves; Doniger, Wendy (1993). Asian Mythologies. University of Chicago Press.
3. Dimmitt, Cornelia; van Buitenen, J.A.B. (2012) [1977]. Classical Hindu Mythology: A Reader in the Sanskrit Puranas. Temple University Press.

# அத்தியாயம் 10

# நாலாயிரம் திவ்ய பிரபந்தம்

10.1 நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தின் தோற்றப் பின்னனி
10.2 நாலாயிரத் திவ்ய பிரபந்தம் நூலின் கட்டமைப்பு
10.3 நாச்சியார் திருமொழியில் காதல் வெளிப்பாடு
10.4 ஆழ்வார்கள் திருப்பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
10.5 நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் வைணவப் பண்பாடு

**அத்தியாயச் சுருக்கம்**

வைணவ சமய முதன்மைக் கடவுளான திருமாலை ஆழ்வர்கள˙ பன்னிருவர் சேர்ந்து பாடிய நாலாயிரம் பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகும். இதுவே திராவிட வேதாந்தம் என்றும் மறெ றாரு பெயரும் கொண்டு விளங்குகின்றது. இதனை த.வசந்தாள் என்பவர் கூறியுள்ளார். இறைவனது பெருமையையும் சிறப்பையும் நயமுற அழகாக செவிக்குத் தேன் வந்து பாய்வது போல இனிமையாகப் பாடுவதால் திவ்யபிரபந்தம் என்று சிறப்புப் பெறுகின்றது.

திவ்வியம் என்னும் வடசொல் நாறாகக் கடட் ப்பட்டது என்னும் பொருளில் நூலைக் குறிப்பதாகும். அதனோடு திவ்வியம் என்னும் அடை சேர்த்து திவ்விய பிரபந்தம் ஆயிற்று. திவ்யம் எனும் சொல் தெய்வீகமான பொருளைக் குறிக்கப் பயன்பட்டுள்ளதுது. வைணவ நெறியில் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள˙“திவ்யதேசம்” எனப் பெயர் பெறுகின்றன. பன்னிரண்டு ஆழ்வார்களால் பாடப்பட்ட பாடல்கள் ஒவ்வொன்றும் பல இலக்கிய வகையைச் சார்ந்து காணப்படுவதால் இவற்றைச் சிற்றிலக்கியம் என்றும் கூறுவர்.

இந்த நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரம் உலா, பிள்ளைத்தமிழ், தூது, குறம், பாதாதிகேசம், தாலாட்டு, ஊடல், பூசல், கனவுப்பாட்டு, தசாவதாரப் பாட்டு மடல், பழமொழி, புலம்பல், போர்ப்பாட்டு, சாழல் ஆகியவற்றைக் கொண்டு அமைந்துள்ளதால் திவ்யபிரபந்தம் என்று வந்திருக்கலாம்.

**அத்தியாயத்தின் நோக்கம்**

வைணவ சமயத்தின் வளர்ச்சிப் போக்கினை நாலாயிரத் திவ்யப்பிரபந்தமானது எவ்வாறு சுட்டி நிற்கின்றது என்பதோடு, இந்நூலில் வைணவ ஆழ்வார்களது பக்தி நெறியின் வெளிப்பாட்டினையும் எடுத்துக்காட்டுவதே அவ்வத்தியாயத்தின் நோக்கமாக அமைகின்றது.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தினைக் கற்பதனால் நாலாயிரத் திவ்யப் பிரபந்த நூற்தொகுதியின் கட்டமைப்பு பற்றியும் அவற்றுள் வெளிப்படுத்தப்படும் திருமாளினது சிறப்புக்களும் வைணநெறியினை வளப்படுத்த ஆழ்வார்கள் தமது பாடல்களை எங்ஙனம் உபயோகப்படுத்தியுள்ளனர் என்பதனையும் மாணவர்களால் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

## 10.1 நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தின் தோற்றப் பின்னனி

பெருமாளைக் குறித்துப் பாடப்பட்ட இத்தொகுப்பானது, கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்குள் வைணவ சமயத்தில் ஆழ்வார்கள் 12 பேரினால் இயற்றப்பட்ட இந்த பாடல்களை, 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனிகள் என்பார் ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் எனத் தொகுத்தார்.

பின்னர் வந்த மணவாளமுனிகள், நாதமுனிகள் தொகுத்த ஆழ்வார்களின் பிரபந்தத்தோடு, திருவரங்கத்தமுனிகள் செய்த இராமானுச நூற்றந்தாதியும் சேர்த்து நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என அழைக்கும்படி அருளினார்.இறைவனின் பெருமையையும் சிறப்பினையும் நயமுற அழகாக செவிக்குத் தேன் வந்து பாய்வது போல இனிமையாகப் பாடுவதனால் திவ்யப் பிரபந்தம் எனும் பெயரால் சிறப்பிக்கப்படுகின்றது. இந்நுலுக்கு ‘‘திராவிட வேதம்’’ எனும் பெயருமுண்டு.

## 10.2 நாலாயிரத் திவ்ய பிரபந்தம் நூலின் கட்டமைப்பு

நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் முதலாழ்வார்கள் என அழைக்கப்படும் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் முதல் மூன்று திருவந்தாதிகளையும் யாத்தனர்.

1. பொய்கை ஆழ்வார் - முதலாம் திருவந்தாதி

2. பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி
3. பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி
4. பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு, திருவாய்மொழி (பெரியாழ்வார் திருமொழி)
5. ஆண்டாள் - திருப்பாவை, நாச்சியார் திருமொழி
6. குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி
7. திருமாழிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்
8. தொண்டரடிப் பொடியாழ்வார் - திருப்பள்ளியெழுச்சி, திருமாலை
9. திருப்பாணாழ்வார் - அமலன் ஆதிபிரான்
10. நம்மாழ்வார் - திருவாய் மொழி, திருவிருத்தம், பெரியதிருவந்தாதி, திருவாசிரியம்
11. திருமஙன் கயாழ்வார் - பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்
12. மதுரகவியாழ்வார் - கண்ணிநுண் சிறுதாம்பு

பக்தி இயக்க காலத்தில் ஆழ்வார்கள் திருமாலின் வழிபாடடினைத் தூண்டும் வகையில் தோத்திரப் பாடல்களைப் பாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. இறைவனையே பாடலுக்குரிய கருப்பொருளாகக் கொண்டவர்கள் ஆழ்வார்கள்.

### 10.3 நாச்சியார் திருமொழியில் காதல் வெளிப்பாடு

நாச்சியார் திருமொழி என்னும் நூல் வைணவ ஆழ்வார்களுள் ஒருவராகிய ஆண்டாளினால் பாடப்பட்டது. ஆண்டாள் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாகக் கருதப்படுகிறார். பெரியாழ்வாரின் தோட்டத்துத் துளசிச்செடியருகே பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்டவர்.

நாச்சியார் திருமொழி வைணவ நூல்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்யபிரபந்தத்தின் ஒரு பகுதியாகும். அத்தொகுப்பில் 504 தொடகக் ம் 646 வரையான பாடல்களாக நாச்சியார் திருமொழி இடம்பெறுகின்றது. இது 143 பாசுரங்களைக் கொண்டது. திருமாலினை தனது நாயகனாகக் கொண்டு அவனையே அடையத் துடிக்கும் ஆண்டாளின் தவிப்பினை உண்மை ததும்ப காதல் சுவை மேலோங்க இவ்விலக்கியம் எடுத்தியம்புகின்றது. ஆண்டாளினால் பாடப்பட்ட கவிதைகள் திருமாலின் மீது பாடப்பட்ட பக்திநிலைப் புனைவுக் காதலை மட்டும்

வெளிப்படுத்தவில்லை. ஓர ் ஆண் மீது பெண் கொளக் ின்ற காதல் எத்தகைய உணர்ச்சிகளைக் கொண்டிருக்கிறதோ அத்தகைய உணர்ச்சிக் குவியல்களையே இது கொண்டிருக்கின்றது. மானுடத்தின் காதல் உணர்ச்சியைத்தான் ஆண்டாளும் இறைக்காதலாக கவிதையாக்கியிருக்கிறாள்.

ஆழ்வார்கள் தமது கடவுளை காதலனாக, மணவாளனாக, பிள்ளையாக பாவனை செய்து இலக்கியங்களைப் படைத்தனர். இதன் காரணமாக ஆண்டாளும் தன்னுடைய காதலனாக சிறு வயது முதலே தான் கண்டுவந்த கண்ணனுக்காக இலக்கியம் படைத்தாள். ஆண்டாள் குழந்தைப்பருவம் முதலே திருமாலின் மீது ஈடுபாடும் காதலும் கொண்டு வளரந் ் து வந்தவள். அதனால்தான்,

“அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித் தெழுந்த என்
தடமுலைகள் துவரைப்
பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன்”

என்று குறிப்பிடுக் காட்டுகிறார்.

காதல் நோயால் அவதியுறும் ஆண்டாளின் மனத்துடிபப் ்க்கள் மறற் வருக்கு அறிய வாய்ப்பில்லை. அவரவரின் அவதி அவரவருக்குத்தானே தெரியும் என்பதை,

“ஆர்க்குமென் நோய்
இது அறியலாகாது”
(நா.திரு12:5)

என வெளிப்படுத்துகிறார்.

திருமாலையே நினைத்து உருகும் ஆண்டாளுக்குத் திருமாலிருஞ் சோலையிலுளள் மலர்களும் அவற்றின் வண்ணமும் அழகனை நினைவுபடுத்துகின்றன. அதனால்,

“குயில், மயில், கருவிளை (காக்கணம் பூ களங்கனி, காயாம்பூ ஆகிய ஐந்தையும் ஐம்பெரும் பாதகர்காள் அணி மாலிருஞ் சோலைநின்ற எம்பெரு மானுடைய நிறம் உங்களுக் கென்செய்வதே” (590 : 3-4)

என்று கேட்டு வினவுகின்றாள்.

அவை ஐந்தும் அவன் நிறத்தையே கொண்டவை. எனவே தான் நோக்குமிடமெல்லாம் கண்ணனைக் காணும் அவளின் காதலுக்கு அடையாளமாக

இதனைக் கொள்ளலாம். திருமாலிடத்தே கொண்ட அளவுகடந்த காதலாலும் அவன் தன்னை உடனே வந்து கைக்கொளளாததாலும் மிகவும் கலக்கத்தை அடைந்த ஆண்டாள், தன் காதல் கைகூட காமனையும் அவன் தம்பி சாமனையும் தான் வணங்குவதாக மேல்வருமாறு விளக்குகின்றாள்.

“தையொரு திங்க் ளும் தரை விளக்கித் தண் மணட் லமிட்டு மாசி முன்னாள்
ஐயநுண்மணற் கொண்டு தெருவணிந்து அழகினுக்கு அலங்கரித்து அனங்க தேவா
உய்யவுமாஙெ காலோ என்று சொல்லி உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே”

தை மாதம் முழுவதும் அவன் வரக்கூடிய இடத்தை மெழுகி குளிர்ச்சியாய் மண்டல ரூபத்தில் இருக்கும் கோலத்தை இட்டு, மாசி மாதம் முதல் பதினைந்து நாடக் ளில் அழகியதான நுண்ணியதான மணலைக் கொண்டு அவன் வரக்கூடிய தெருவை அழகாக்கும்படி அலங்காரம் செய்து, அவனை நோக்கி “மன்மதனே நீ என் ஆசையை நிறைவேற்றுவாயா” என்று வினவி உன்னையும் உன ் தம்பியையும் தொழுதேன். க்ரூரமான தீப்பொறிகளைச் சிந்தக்கூடிய ஒப்பற்றதான திருவாழியைத் திருக்கையிலேயுடைய திருவேங்கடமுடையானுக்கு என்னை ஆடப் டுத்த வேண்டும் என்கிறாள். மேலும்,

“வெள்ளை நுண்மணல் சிற்றில்
விசித்திரப்பட்ட வீதிவாய்த் தெள்ளி
நாங்கள் இழைத்தக் கோலம்
அழித்தியாகிலும் உன்றன்மேல் உள்ளம்
ஓடி உருகலல்லால்…………”

எனப்பாடுகிறாள்.

ஆண்டாளும் அவளது தோழிகளும ் சேர்ந்து நுண்மணலில் சிற்றில்கள் செய்கின்றனர். அவ்வாறான சிற்றில்களை நீ அழித்தால் கூட உன் மீது எம்மால் கோபம் கொளள் முடியாது. மாறாக உன ் மீது காதலே பெருகும் உளள் ம் உருகும் என்கிறாள். அவ்வாறே காதல் உள்ளத்தைக் கொளஎ் ள கொண்ட காதலரின் பெயரை எழுதிப் பார்க்கும் காதல் மனதின் செயல்பாடுகளை மேல்வருமாறு விளக்குகிறாள்.

“…….கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கடல்வண்ணன் என்பதோர் பேரெழுதி…….”

“……கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு

கோவிந்தன் என்பதோர் பேரெழுதி…………”

திருமாலையே தன் காதலனாக எண்ணியிருக்கும் ஆண்டாள் அக்காதல் நோயால் பெண்ணுடல் எதிர்கொளஞ் ம் மாறுபாடுகளையும் அமைதியின்றித் தவிக்கும் மனக் கோலங்களையும் இயல்பான பெண்ணுணர்ச்சியிலே மேல்வருமாறு வெளிப்படுத்துகிறாள்.

“மாசுடை உடம்பொடு தலையுலறி

வாய்ப்புறம் வெளுத்த ஒரு போது உண்டு………”

திருமாலை அடைய வேண்டுமென்று நீராடச் சென்ற ஆண்டாள், இப்பொழுது நீராடாமல் இருப்பதும் பூக்களைச் சூடாமல் தலைவிரி கோலமாய் இருப்பதும் ஒரு வேளை மட்டுமே உண்பதும் வாய்கூட வெளுத்துப் போனதும் திருமாலை நினைத்துத்தான்.

“வண்ணம் திரிவும் மனம் குழைவும் மானம்

இலாமையும் வாய்வெளுப்பும்

உண்ணல் உறாமையும் உளெ மலிவும்” (நா.திரு.12:7)

தமக்கு ஏற்பட்டிருக்கிறது என்கிறாள்.

காதல் முற்றிப்போனதின் அறிகுறிகள்தான் இவ்வெளிப்பாடுகள். காதல் நோயால் அவதியுறும் ஆண்டாளின் மனத்துடிபப்பு க்கள் இவை. காதலால் அவதியுறும் பெண்ணின் கனவிலும் வேறென்ன தோன்றப் போகிறது. “நாளை வதுவை மணமென்று நாளிட்டு பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கழீ ் கோளரி மாதவன் கோவிந்தன் என்பனோர்

காளை புகுதக் கனாக் கண்டேன் தோழி நான்” (நா.திரு.6:2)

திருமாலைக் கூட நினைப்பதின் கனவு வெளிப்பாடு இது.

இங்கு கமுகு என்பதும் பாளை என்பதும் குழைதளள் க ் கூடியவை. பெண் தன்மை கொண்டிருப்பவை. காளை என்பது ஆணுக்கு ஒப்பாகச் சொல்லக் கூடியது. பெண்ணுடல் மீது ஆணுடல் புகும் வேட்கை விருப்பம்தான் கனவில் குறியீட்டுப் பொருளாய்த் தோன்றுகின்றது என்று தனது கனவை தோழியருடன் பகிர்ந்து கொள்கிறாள். இதனூடாக திருமால் மீது அவள் கொண்ட காதல் புலப்படுகிறது.

காதல்வயப்பட்ட பெண்ணின் மனம் முதலில் நினைப்பையும் கனவையும் வேட்கையையும் உடல் துயரத்தையும் ஆற்றாமையையும் வெளிப்படுத்தக் கூடியது. பெண்ணின் மனத்தை மட்டுமல்ல உடலையும் காதலருக்கென்றே ஒப்படைத்துவிட்டு பெண்ணின் மனநிலையை ஆண்டாளின் கவிதையிலே காணமுடியும்.

"............ஆதரித்து எழுந்த என்தட முலைகள்
துவரைப ˙ பிரானுக்கே
சங்கற்பித்துத் தொழுது
வைத்தேன்" (நா.திரு.1:4)
என்கிறார்.

அது மட்டமல்லாது, தமது காதலருக்கென்றே தமது உடல் வளரந் ˙திருப்பதாகக் கருதுகிறார். அதனால்தான்,

"ஊனிடை ஆழிசங்கு உதத் மர்க்கு
என்று உன்னித்து எழுந்த என்
தடமுலைகள்" (நா.திரு.1:5)

என்று குறிப்பிடுகிறார். தனது உடல் உறுப்புகக் ள ˙ குறித்த மிக இயல்பாகக் கூறிக்கொணடே செல்கிறாள்.

தன் சாதாரண ஆசையைக் கூட வெளிப்படுத்த இயலாத நியைில் வாழ்ந்த ஆண்டாள், தன் காம உணர்ச்சியை ஊரார் பலரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்துகிறாள்.

"மாமுறித்த நிதி சொரியும் மாமுகில்காள
˙ வேங்கடத்துச் சாமத்தின் நிறங்கொண்ட
தாளாளன் வார்த்தையென்ன காமத்தியுள
˙ புகுந்த கதுவட்டப்பட்டியைக் கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நான் இருப்பேன்"
(நா.திரு.75)

காமந்தீயானது புற உடம்பு முழுவதையும் எரித்துவிட்டு உள்ளே எரிக்க முயல்கிறதே என்றும் தென்றல் காற்று காமத்தை மேலும் மிகுவிக்கிறதே என்றும் ஆண்டாள் பாடுவது அவள் காதலின் மிகுதி என்றே குறிப்பிடலாம்.

"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செய்வாய் தான் தித்திக்குமோ
மருப்ப ஒசித்த மாதவன்தன்வாய்ச சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்ஆழி வெண் சங்கே" (567)

என்கிறாள்.

கடலில் பிறந்த வெண்மையான சங்கே...என் கண்ணனுடைய பவளம் போன்ற உதடுகள், கற்பூரம் போல மணக்குமோ? தாமரை மலர் போல மணம் வீசுமோ?

தித்திப்புடன் இருக்குமோ? சொல்........என்று பெண்மைக்குரிய நாணத்தை மறந்து அவன் மீது கொண்ட நினைவுகளை கூறுகிறாள். இறைவனை விடடு நீங்காது இருக்க வேண்டுமென்ற தாபத்தால் ஆண்டாள் ஆழிவெண்சங்கிடம் பேசுவது திருமாலின் மீது அவர் கொண்ட எல்லையில்லாத காதலை வெளிப்படுத்துகிறது. மேலும் தன்னுள்ளம் கவர்ந்த நாயகனைப் பற்றியும் அவன்மீது தனக்கிருந்த ஆராக்காதல் பற்றியும் பேசுகிறாள். அவனின்றித் தான் வாழ இயலாது என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திப் பாடுகிறாள். அவனை மணந்து கொண்டு வாழ்வதாக இனிய கற்பனை செய்கிறாள்.

ஆண்டாள் நாயகியாகித் திருமாலை அடையத் துடிக்கின்ற பெண். தன்னை வளரத்த பெரியாழ்வாரிடம் தன் தலைவன் யார் என்பதைத் தெளிவாக உணர்த்திவிடுகிறாள். அதனாலேயே அந்தத் தலைவனையே அடைய வேண்டுமென்று தீராக் காதலால் திருமாலையே மணந்து கொளள் உறுதி பூண்டு,

> "வானிடை வாழும் அவ ் வானவர்க்கு மறையவர்
> வேள்வியில் வகுத்த அவி கானிடைத் தரிவது
> ஓர் நரி புகுந்து கடப்பதும் மோப்பதும்
> செய்வதும் ஒப்ப ஊனிடை ஆழி சங்கு
> உதத் மரக் என்று உன்னித்து எழுந்த
> என் தடமுலைகள் மானிடரவ் க் கென்று
> பெச்சுப் படில் வாழகில்லேன் கண்டாய்
> மன்மதனே........"

வானில் வாழுகின்ற தேவர்களுக்கு மறையவர் வேளவ் ியில் சொரிந்து அவி உணவைக் காடடி ல் திரியும் நரி புகுந்து உண்ணத் தலைப்பட்டால் எப்படி இருக்குமோ அதுபோலத் திருமாலுக்கென்று தோன்றிய உடம்பை மானிடன் தீண்டுவது பொருத்தமற்றது. தகாதது. எனவே, மனிதர்களைத் திருமணம் செய்து கொளள் வேண்டுமென்றால் உயிர் வாழமாட்டேன் என்கிறாள். இதனூடாக ஆண்டாள் திருமால் மீது கொண்ட காதல், திருமாலுடன் சேரத்துடிக்கின்ற வேட்கை என்பன சிறப்பாக வெளிப்படுத்தப்படுகிறது.

தன்னுடைய மிதமிஞ்சிய காதல் தவிப்பை யார் மூலமாவது சொல்லியனுப்ப வேண்டிய தேவையும் தன் மனக்கவலையை யாரோடாவது பகிர வேண்டிய கடட் ாயமும் ஆண்டாளிடம் மிகுந்து நிற்கிறது. அதனாலோ என்னவோ வானில் மிதக்கும் மேகக ் கூட்டங்களைப் பாரத் ்து தூது சொல்லப் பணிக்கிறாள். ஓடும்

மேகங்களைத் தூது அனுப்பும் ஆண்டாள் தான் வெறுங்கூடு மட்டும் தான். உயிர் கண்ணனிடமே உளள் து என்பதை,

"..........உலங்குண்ட விளாங்கனி போல்......" என்னும் உவமை மூலம் உணர்த்துகிறாள்.

விளாங்கனியின் மேல் ஓடு இருக்க அதன் உட்பகுதியைக் கொசு அழிந்துவிடும். அதுபோல நானும் கண்ணன் தந்த காதல் நோயால் நலிந்துள்ளேன் எனத் தெளிவுபடுத்துகிறாள்.

மழைக்காலத்தில் எருக்கஞ்செடியில் உள்ள பழுத்த இலைகள் வீழ்வது போல நானும் விழும் நிலையில் உள்ளேன். எனக்கு ஒருநாள்,

"தம் வாசகம் தந்து அருளமாடட் ாயா?" (594)

"ஓர் பெண்கொடியை வதம் செய்தான்" (585)

என்னும் சொல் பழியாகாதா? என மேகத்திடம் தன் மோகத்தைச் சொல்லி அரற்றுகின்றாள். அவ்வாறே,

"என்னாகத் திளங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும்
பொன்னகம் புல்லுதற்கென் புரிவுடையை செப்புமினே!" (நா.திரு.77)

என்கிறாள்.

உடம்பில் மின்னல் தோன்றுகின்ற மேகங்களே திருமால் என் அழகிய மார்பை தழுவ வேண்டும் என்று நான் நாளே தாறும் ஆசை கொண்டு இருப்பதை கூறுங்கள் என மேகத்தை தூது அனுப்புகிறாள். கண்ணனைத் தன் மணவாளனாக நினைத்து எப்போதும் கண்ணனின் நினைப்போடு வாழ்கிறாள். அவளது உறக்கம், விழிப்பு, நினைப்பு எல்லாவற்றிலுமே கண்ணன் ஆட்சி செலுத்துகிறான். தன்னுடைய கனவில் கூட கண்ணனை கைத்தலம் பற்றுவதாய் பாடி தன் காதல் தவிப்பை காணச் செய்கிறாள்.

ஆண்டாளின் கனவை உரைக்கும் இப் பாசுரங்களும் காதல் வெளிப்பாடடு க்கான அற்புதமான எடுத்துக்காட்டுக்களாகும்.

"வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடககின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெஙகும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்"

நாளை மணநாள் என நிச்சயம் செய்து பாளையோடு கூடிய கமுகு மரங்களால் அலங்காரம் செய்தனர். இந்திரன் உள்ளிட்ட தேவர் கூட்டம் வந்திருந்து மணத்தை உறுதி செய்தனர். மணப்புடவை உடுத்தி மணமாலை சூட்டினர். நான்கு திசைகளில் இருந்து கொண்டு வந்த தீர்த்தத்தால் நீராட்டி, பார்ப்பனர்கள் மந்திரங்களைச் சொல்ல புனிதனாகிய கண்ணனோடு என்னை இணைத்துக் காப்புக் கட்டினர். பெண்கள் மங்கல விளக்கும் கலசமும் ஏந்தினர்.

“மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த
பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து
என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன்
தோழீ! நான்”

பின்னர் தீவலம் செய்தோம். நாராயணன் தம் திருக்கையால் என் பாதம்பற்றி அம்மி மிதிக்கச் செய்தார். உடன் பிறந்தோர் தீயின் முன் நிறுத்தி அச்சுதன் கையின் மேல் என் கையை வைத்தனர். குங்குமம் பூசி, சந்தனம் தடவ வந்தோம் எனத் தன் மணக்கனவு பற்றித் தோழியிடம் சொல்கிறாள் ஆண்டாள். இதனூடாகவும் திருமாலிடத்தே ஆண்டாளின் காதல் உணர்வுகள் பெருக்கெடுத்து ஓடுமாற்றை தெளிவாக அறியலாம்.

“மானிடர்வக் கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்”

என்ற வைராக்கியத்துடன் பெரும் தெய்வத்தையே கரம் பற்றிய காரிகை ஆண்டாளின் இவ்வுறையே அவளது காதலின் தவிப்பைக் காட்ட போதுமான சாட்சி. இவ்வாறாக திருமொழியின் பாக்களில் ஆண்டாளின் காதல் தவிப்பு கண்முன்னே கொண்டு வந்த காடட் ப்படுகின்றமை தெளிவாகிறது.

காதல் என்பது இதிகாச புராண காலம் முதல் இன்று வரை அனைவரிடமும் ஏற்பட்டு வருகின்றது. இதற்கு ஆண்டாள் மட்டும் விதிவிலக்கா? இல்லை ஆண்டாளும் திருமால் மீது காதல் வயப்பட்டார். இறைவனை அப்பனாக, அம்மையாக பார்த்த காலத்தில் அவள ் மட்டும் சற்று வித்தியாசமாக தனது காதலனாகப் பார்த்தாள். அவளது இத்தகைய காதல் உணர்வுகளை மேறகுறித்தவாறு உணர்வுபூர்வமாக நாச்சியார் திருமொழியில் வெளிக்காடடியுள்ளமை காண முடிகிறது.

### 10.4 ஆழ்வார்கள் திருப்பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்

**(அ) ஆன்மிக நிலையில் அருள்சார்ந்த வாழ்க்கை**

ஆழ்வார்கள் அன்பினை அடிப்படையாகக் கொண்ட அருள் சார்ந்த வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இது இறைவனுக்கும், பக்தனுக்குமான பாலமாக உள்ளது.

''பொருனால் அமருலகம் புக்கிய லாகாது
அருளால் அறம்அருளும் அன்றே: அருளாலே
மாமறையோர்க் கீந்த மணிவண்ணன் பாதமே
நீமறவேல் நெஞ்சே! நினை''

(இரண்டாம் திருவந்தாதி 41)

''தன்னடி யார்க்கருள் செய்யும்
மலியும் சுடரொளி மூர்த்தி''

(திருவாய்மொழி )

''தாய்மனத் திரங்கி யருளினைக் கொடுக்கும்
யரதன்'' (பெரிய திருமொழி)

''ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோரெம்பாவாய்''

(திருப்பாவை)

**(ஆ) இறைமையை முன்னிறுத்தும் பொருளாதார சிந்தனை**

செல்வம் உண்மையான மகிழ்ச்சிக்கு அடிப்படையாக அமையாது என்கின்றார் மனயியல் ஆய்வாளர் சுசான்றி சாசின்.

''மகிழ்ச்சியும் செல்வமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை அல்ல.......... ஒருவனுடைய நிலையான செல்வத்தை திருடிவிடலாம். ஆனால் அவனுடைய உண்மையான செல்வத்தை திலடிவிட முடியாது. .........ஆம்! ஆன்மாவில்தான் உண்மையான இன்பம் இருக்கின்றது''

என்கிறார் அவர். எனவே இன்பம் பொருளை தேடுவதில் இல்லை. மாறாக உயிரையும், அதற்குள் அந்தர்யாமியாய் உள்ள இறைவனை தேடுவதில்தான இருக்கும் என்கிறார் நம்மாழ்வார்.

“இல்லை கண்டீர் இன்பம்:அந்தோ! உள்ளது நினையாதே
தோல்லை யார்கள் எந்த னைவர் தோன்றிக் கழிந்தொழிந்தார்….”
(திருவாய்மொழி)

திருச்சந்த விருத்தம் இதனை,

“அறிந்தறிந்து வாமனன் அடியிணைவ ணங்கினால்
சேறிந்தெழுந்த ஞானமொடு செல்வமும் சிறந்திடும்”
சாதிகளற்று இறைவழிப்படும் சமுதாயம்

தொண்டரடிப்பொடியாழ்வார்,

“இழிகுலத் தவர்களெலும் எம்மடி யார்களாகில்
தொழுமின்நீர் கொடுமின் கொள்மின்!”
(திருமாலை)

திருமங்கையாழ்வார்,

“ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா
தரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
வாத மாமகன் மர்க்கடம் விலங்கு
மற்றோர் சாதியென் றொழிந்திலை உகந்து…”

மனிதனை மனிதனாக நினைத்து தன்னம்பிக்கை கொண்டு பிறா பொருளை நாடாது தமது உழைப்பால் பொருளீட்டி வாழ வழி காட்டுகின்றனர் ஆழ்வார்கள். இதனை பொய்கையாழ்வாரும்,

“நயவேன் பிறாபொருளை நள்ளேன் கீழாரொடு
உய்வேன் உயர்ந்தவரோ டல்லால்”

இப்படிப்பட்ட நற்குணங்கள் அமைந்திருந்தால்தான் ஒருவனிடம் இல்லறத்தையும், இறைவழிபாட்டையும் ஒருங்கே சிறப்புற கடைப்பிடிக்க முடியும். இதனை திருமழிசையாழ்வார்,

“இல்லறம் இல்லேல் துறவறம் இல் என்னும்
சொல்லறம் அல்லனவும் சொல்லல்ல – நல்லறம்
ஆவனவும் நால்வேத மாத்தவமும் நாரணனே”

**(இ) வேற்றுமையில் ஒற்றுமை காணல்**

இன்றைய காலகட்டத்தில் ஒரு குழுவுக்கும், மற்றைய குழுவுக்கும் ஒற்றுமை என்பதை விட வேற்றுமையே அதிகம் காணப்படுகின்றது. ஆழ்வார்கள் இறையெண்ணத்தின் அடிப்படையில் வேற்றுமை பட்டிருக்கும் நீங்கள் ஒற்றுமை காணுங்கள் என்கிறார்கள்.

''வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்''

(திருப்பாவை)

''வாழ்வார் வாழ்வெய்தி ஞாலம் புகழவே''

(திருவாய்மொழி)

**(ஈ) வாழ்க்கையில் பற்றற்றிருப்பதன் மேன்மை**

வாழ்க்கையின் பல சிக்கல்களுக்கு ஆசையே முக்கிய காரணமாகும். மனம் பயனில் தொடர்பு கொள்ளாது தாமரையிலை தண்ணீர் போல் உலகப்பற்றில் இருக்குமாயின் எவ்வித துன்பமும் இல்லை. ஆசையை விட்டு ஆன்மாவையும், இறைவனையும் காண விழைய வேண்டும் என்கின்றனர் ஆழ்வார்கள்.

''நீர்நும தென்றிவை – வேர்முதல் மாய்த்து இறை
சேர்மின் உயிர்க்கு அதனோர் நிறையில்லை''

(திருவாய்மொழி)

''நாசமான பாசம் விட்டு நன்னெறி நோக்கலுறில்
வாசம் மல்கு தண்துழாயான் வதரி வணங்குதுமே''

(பெரிய திருமொழி)

இவ்வாறான ஆன்ம நேயங்கள் வரப்பெற்றோர் இறுதியில் இறையின்பம் பெறுவர் என்பதே ஆழ்வார்களின் எதிர்வுகூறலாகவுள்ளது

## 10.5 நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் வைணவப் பண்பாடு

ஆழ்வார்கள் விஷ்ணுவைக் குழந்தையாக, தாயாக, நண்பனாக எனப் பல்வேறு வடிவங்களில் பாடியுளள்னர். இவர்கள் விஷ்ணுவைத் தவிர வேறெதைப் பற்றியும் சிந்திக்கவில்லை. (நாக்கு கொண்டு மானுடம் பாடேன்)

**''**வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவி யேனல்
லேன் ஆய் கொண்ட சீர்வள்ளல் ஆழிப் பிரான்
எனக் கேயுன் சாய்கொண்ட இம்மையும் சாதித்து

வானவர் நாடட்டையும் நீகண்டு கொளளென்று வீடும்
தரும் நின்று நின்றே”

எனத் திருமழிசையாழ்வார் கூறுகின்றார்.

என்னுடைய வாயால் மானிடரக்களைப் பாட நான் தோன்றவில்லை. பெரும் சிறப்புகசுரிய வளள்லும் சக்கராயுதத்தையுடையவருமான திருமால் எனக்காகவே உள்ளவர். அப்பரமனை இம்மையில் ஏத்தி வணங்கிப் போற்றும் பேறு பெற்றவனானேன். அவர் வானவர் நாடடினையும் கண்டு அனுபவம் பெற்ற முக்தியுலகதன் தயும் எனக்கு அருளும் தன்மையில் நின்றருளினவர்.

“யானே தவம்செய்தேன்
ஏழ்பிறப்பும் எப்பொழுதும் யானே
தவமுடையேன் எம்பெருமான்
யானே இருந்தமிழன் மாலை
இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது”

என்கிறார் பூதத்தாழ்வார்.

பகவத் விஷயத்தில் ஈடுபாடில்லாத தமிழராயிராமல் பகவத் விஷயத்தில் பெரிதும் ஊன்றி இருக்கும் பெருந்தமிழனாய் இருப்பேன் என்றார். இருந்தமிழ் நன்மாலை சொன்னேன் கற்பதற்கு, சிலரே ஓதக்கூடிய வடமொழியில் இல்லாமல் அனைவரும் ஓதக்கூடிய இலக்கண, இலக்கிய வளம் நிறைந்த உயர ் தமிழில் சொல்மாலை ஓதினேன் என்கிறார் பூதத்தாழ்வார்.

குழந்தை

- ஆழ்வார்கள் விஷ்ணுவின் குழந்தைத் தன்மையின் சிறப்பை சிலாகித்துப் பாடுகிறார்கள்

  “கிடக்கில் தொட்டில் கிழிய உதைக்கும் எடுத்துக் கொள்ளில் மருக்கை கிறுத்திடும்”

  “வெண்ணெய்க் குடத்தை உருட்டி, இளம் பிள்ளையைக் கிள்ளி எழுப்பி”

- விஷ்ணு எங்கும் வியாபித்திருக்கும் தன்மையை ஆழ்வார்கள் வியந்து பாடுகிறார்கள்

  “வானாகித் தீயாக விழியாகு மலரிகடாகிய மாருதமாய்”

"உண்ணும் உணவு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எங்கும் கண்ணே"

- விஷ்ணுவில் தாங்கள் வைத்த ஆழ்ந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றனர் "அன்று கருவரங்கத்துள் கிடந்து கைதொழுதேன் இன்று மறப்பேனோ" "இறைவனுக்கே அடிமை அவனே இன்பமான பொருள் அவனையன்று வேறெதனையும் உபாயமாகக் கருதேல்"

**பயிற்சி வினாக்கள்**

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தினை ஆதாரமாகக் கொண்டு, பன்னிரு ஆழ்வார்களும் அவர்கள் இயற்றிய பிரபந்தங்கள் பற்றியும் வைணவநெறியின் அடிப்படை அம்சங்கள் பற்றியும் எடுத்துரைக்குக.
2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துக்குள் அடங்கும் பிரபந்தங்கள், அவற்றின் ஆசிரியர்கள், தொகுப்பு முறை ஆகியன கற்றி சுருக்கமாக விளக்குக.
3. வைணவ சமய சிந்தனைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் வெளிப்படுத்துமாற்றினை விளக்குக.

***உசாத்துணைகள்***


1. வேங்கடசாமி செட்டியார், கி., (1973), நாலாயிரத் திவ்ய பிரபந்தம், திரவேங்கடத்தான் திருமனறம், சென்னை.
2. சீனிவாசன், ம.பெ., (1994), வைணவ இலக்கிய வகைகள், தேவகி பதிப்பகம், சிவகங்கை.
3. வசந்தன், த., (), ஆழ்வார்கள் ஒலிசெய் தமிழ் மாலை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. Rajarajan, R.K.K. (2013). "Historical sequence of the Vaiṣṇava Divyadeśas. Sacred venues of Viṣṇism". Acta Orientalia, Societates Orientales Danica Fennica Norvegia Svecia.
5. Carman, John (1989). The Tamil Veda: Pillan's Interpretation of the Tiruvaymoli. Chicago: University of Chicago Press.